# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY

**DIRECTORATE OF DISTANCE & CONTINUING EDUCATION**
**TIRUNELVELI – 627012 , TAMILNADU**

**M.A - TAMIL**

# இலக்கணம் –1

## தொல்காப்பியம் - எழுத்து

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்**
**தொலைதூரத் தொடர்கல்வி இயக்ககம்**
**திருநெல்வேலி – 627012 தமிழ்நாடு**

# இலக்கணம் –1 தொல்காப்பியம் - எழுத்து

## பொருளடக்கம்


அலகு-1

தொல்காப்பியம் ஓர் அறிமுகம்- நூல் மரபு, மொழி மரபு, பிறப்பியல்

அலகு-2

தொல்காப்பியம் – புணரியல், தொகைமரபு

அலகு-3

தொல்காப்பியம் – குற்றியலுகரப் புணரியல், எழுத்திகாரத்தின் சிறப்பியல்புகள்

அலகு-4

தொல்காப்பியம் – உருபியல், உயிர்மயங்கியல், புள்ளி மயங்கியல்

அலகு-5

தொல்காப்பியத்திலிருந்து நன்னூல் வேறுபடும் இடங்கள்

1.சார்பெழுத்துக்கள் 2. ஆய்தம் 3.சொற்களில் எழுத்து வருகை – மொழி முதல் எழுத்து, இறுதி எழுத்து, வினா எழுத்து, சுட்டெழுத்து,

# அலகு - 1

# தொல்காப்பியம் ஓர் அறிமுகம்

**இலக்கணம்:**

இலக்கணம் என்பது மொழிகள் அமைப்பையும், பயன்படுத்தும் விதத்தையும் வரையறை செய்யும் விதிகளைச் சுட்டுகிறது. ஒரு மொழியின் இலக்கணம் அந்த மொழி பேசுவோரின் உள்ளார்ந்த மொழி அறிவை விளக்கும் வரையறை என்பது இலக்கணத்தைப் பற்றிய புதிய பார்வை. இலக்கணம் குறித்த மொழி அறிவு மனதில் இருக்கிறது. அது மொழியைப் பிறப்பிக்கிறது என்னும் பார்வை புதிய இலக்கணப் பார்வை. இதனால் மொழியில் நிகழும் மாற்றங்கள் பிழைகள் அல்ல: அவை மொழியின் புதிய பிறப்பு என்ற கருத்தைக் கொண்டு அவற்றின் இலக்கணத்தை அறிய முடிகிறது. எழுத்து என்பது எதைக் குறிக்கிறது, வாயால் எழுப்பும் ஒலியை எழுத்து எனலாம், வரிவடிவத்தையும் எழுத்து எனலாம். அமைப்பில் ஓசைக்குத்தான் இடம் உண்டேயல்லாமல் வரிவடிவத்திற்கு இல்லை.

இலக்கணம் என்றால் அழகு, ஒழுங்கு, சிறப்பியல்பு, அடையாளம், குறிக்கோளின் விளக்கம், மொழியை அழகுபடுத்துதல் எனப் பல பொருள் கொள்ளலாம். இலக்கணம் என்பது பேசுவதற்கும், எழுதுவதற்கும் பயன்படுகிறது. மொழியின் அடிப்படையில் இலக்கணம் தான்.

**தொல்காப்பியம்:**

உலகில் முதன் முதலில் தோன்றிய இலக்கண நூல் தொல்காப்பியம் என்பர். தொல்காப்பியம் என்னுஞ் சொற்றொடரினைத் தொல் + காப்பியம் என்று இரு பிரிவாகப் பிரித்துத் தொன்மையான காப்பியம் என்று கொள்ளாமல் தொல் + காப்பு + இயம் என்று மூன்று பிரிவாகப் பிரித்துத் தொன்மை + இயம் +காப்பு என்று அன்வயப்படுத்திக் கொண்டு, தொன்மையான தன்மையை, மரபை, எழுத்தை, சொல்லை, இலக்கணத்தை, பண்பாட்டை காப்பது எனப் பொருள் கொள்ளலாம். தொல்காப்பியத்திற்குப் பாயிரம் தந்துள்ள பனம்பாரணர் தமது பாயிர உரையில் 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று குறிப்பிடுகிறார். தொல்காப்பியரால் இயற்றப்பட்ட தொல்காப்பியமே முழுமையான இலக்கண நூல். தொல்காப்பியத்தில்

எழுத்து, சொல் தவிர பொருள் இலக்கணமும் கூறப்படுகிறது. அந்த பொருள் இலக்கணத்தையும் அக இலக்கணம், புற இலக்கணம் என்று இரு பிரிவுகளாக பிரித்து விளக்கியிருப்பது மிகவும் சிறப்பு. தொல்காப்பியரின் கி.மு.5ஆம் நூற்றாண்டாக இருக்கலாம் என்றும், அவர் தொல்காப்பியத்தை நிலந்தரு திருவிற்பாண்டியன் அவையில் அரங்கேற்றினார் என்பதும் வரலாற்று செய்தி.

தொல்காப்பியரின் காலத்தை பல்வேறு அறிஞர்கள் பல வகையில் குறிப்பிடுவர். தொல்காப்பியத்தை இயற்றியவர் அகத்தியரே என்றும்;: தொல்காப்பியர் காலம் கி.மு.ஏழாயிரம். எப்படியும் ஏறக்குறைய 10,676 ஆம் ஆண்டில் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும் என்று பொள்ளாச்சி நா.மகாலிங்கம் கூறுகிறார். கி.மு.மூவாயிரம் என்று மறைமலையடிகளும், கி.மு.அய்யாயிரம் என்று வெள்ளைவாரணரும், கா.சு.பிள்ளை கி.மு.இரண்டாயிரம் என்றும், எம்.சீனிவாச அய்யங்கார் நான்காம் நூற்றாண்டு என்றும், பலவிதமான கருத்துக்கள் தொல்காப்பியரின் காலத்தைக் குறித்து காணப்படுகின்றன. தொல்காப்பியத்திற்கு முன்பே பல இலக்கிய நூல்களும், இலக்கண நூல்களும் இருந்திருக்க வேண்டும். ஏனெனில் தொல்காப்பியத்தில் பல இடங்களில் என்ப, என்மனார் புலவந் நுண்ணிதின் உணர்ந்தோர், அறிந்திசினோர் போன்ற சொற்களைப் பயன்படுத்துவதிலிருந்து அதை அறிய முடிகிறது. எனவே அறிஞர்கள் தொல்காப்பியத்தை வழிநூல் என்பர்.

### தொல்காப்பிய அமைப்பு:

தொல்காப்பியம் இலக்கண நூலாக இருந்தாலும் ஒரு காப்பியம் போன்ற அமைப்பினை உடையது. இந்நூல் மூன்று பெரும் பிரிவுகளை உடையது. எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம். ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களையுடையது. மொத்தம் 27 இயல்களைக் கொண்டது தொல்காப்பியம். இயல்கள் அனைத்தும் காரணகாரிய இயைபு படி அமைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு இயலிலும் முதலில் பொது விதிகளைக் கூறி, அதன் பின்னர் சிறப்பு இயல்களைப் புறனடை விதி என வகுத்துக் கூறுவது தொல்காப்பியரின் சிறப்பாகும். எழுத்ததிகாரம் 483 நூற்பாக்களையும், சொல்லதிகாரம் 456 நூற்பாக்களையும், பொருளதிகாரம் 656 நூற்பாக்களையும் கொண்டதாக் கூறுவர். நூற்பாக்களின் எண்ணிக்கையில் பல கருத்துக்கள் நிலவிலுள்ளன.

**தொல்காப்பிய உரைகள்:**

தொல்காப்பியத்திற்கு முழுமையாக உரை எழுதியவர் இளம்பூரணர் ஒருவரே. இவரைத் தொடர்ந்து சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் ஆகியோரும் உரை எழுதியுள்ளனர். தொல்காப்பியத்திற்குப் பலர் உரை எழுதினாலும் இளம்புரணர் உரையே சிறப்புடையது. தொல்காப்பியத்திற்கு பிறகு எழுதப்பட்ட நன்னூலும் இளம்புரணர் உரையை பின்பற்றியே எழுதப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தொல்காப்பிய பதிப்புகள்:**

தொல்காப்பிய மூலம்-நன்னூல் மூலம் இரண்டையும் இணைத்து ஆங்கில விளக்கக் குறிப்புடன் எஸ்.சாமுவேல் பிள்ளை 1858-ல் 'தொல்காப்பிய நன்னூல்' என்ற பெயரில் வெளியிட்டார். 1868-ல் இளம்பு+ரணர் உரையுடன் முதற்பதிப்பு வெளிவந்தது. இதே ஆண்டில் சொல்லதிகாரம் சேனாவரையர் உரையுடன் வெளிவந்தது. 1892-ல் யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் முழுமையும் வெளியிட்டார். 1920 ஆம் ஆண்டு தொடங்கி பல்வேறு அறிஞர்களால் தொல்காப்பியம் பல்வேறு பதிப்புக்களைக் கண்டது.

**எழுத்ததிகாரம் - உள்ளுறை:**

1. நூன்மரபு - தனிநின்ற எழுத்துக்களை விளக்குகிறது.
2. மொழிமரபு - சொல்லில் நிற்கும் எழுத்துக்களை விளக்குகிறது.
3. பிறப்பியல் - ஒலி எழுத்துக்களின் பிறப்புக்களை விளக்குகிறது.
4. புணரியல் - எழுத்துக்கள் இணையும் பொதுநிலையினை விளக்குகிறது.
5. தொகைமரபு - புணர்ச்சியின் பொது விதிகளை விளக்குகிறது.
6. உருபியல் - வேற்றுமை உருபுகள் சேரும் போது ஏற்படும் மாற்றங்களை விளக்குகின்றது.
7. உயிர்மயங்கியல் - உயிரெழுத்துக்களின் சேர்க்கையில் ஏற்படும் மாற்றங்களை விளக்குகின்றது.
8. புள்ளிமயங்கியல் - மெய்யெழுத்துக்கள் சேரும் போது ஏற்படும் மாற்றங்களை விளக்குகிறது.
9. குற்றியலுகரப் புணரியல்- குற்றியலுகரம் ஈற்றுச் சொற்களில் ஏற்படும் மாற்றங்களை விளக்குகிறது.

பொதுவாக எழுத்ததிகாரம் தனிமொழியிலும், புணர் மொழியிலும் உள்ள எழுத்துக்களைப் பற்றிக் கூறுகிறது எனலாம்.

## நூன் மரபு

**முதல் எழுத்துக்களின் பெயரும் எண்ணிக்கையும்**

**"எழுத்தெனப் படுவ**
**அகரமுதல் னகர இறுவாய்**
**முப்பது என்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்றாம் கடையே".**

தமிழின் எழுத்து எனப்படுபவை 'அ' முதல் 'ன்' ஈறாகவுள்ள முப்பது எழுத்துக்கள் ஆகும். இவை முதலெழுத்துக்கள்.

**சார்பெழுத்துக்களின் பெயர்கள்**

**"அவைதாம்**
**குற்றிய லிகரம் குற்றிய லுகரம்**
**ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன".**

சார்பெழுத்துக்கள் எனப்படுபவை குற்றியலுகரம், குற்றியலிகரம், ஆய்தம் என்ற முப்பாற்புள்ளி ஆகியனவாகும். இச்சார்பெழுத்துக்களும் எழுத்துப் போன்றவை ஆகும்.

**உயிர் குற்றெழுத்துக்களும் அவை ஒலிக்கும் கால அளவும்**

**"அவற்றுள்**
**அ இ உ**
**எ ஒ என்னும் அப்பால் ஐந்தும்**
**ஓரளவு இசைக்கும் குற்றெழுத் தென்ப".**

அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் ஒரு மாத்திரை அளவு ஒலிக்கும் உயிர்க் குற்றெழுத்துக்களாகும்.

**உயிர் நெட்டெழுத்துக்களும் அவை ஒலிக்கும் கால அளவும்**

**"ஆ ஈ ஊ**

**ஏ ஐ**

**ஓ ஔ என்னும் அப்பால் ஏழும்**

**ஈரளவு இசைக்கும் நெட்டெழுத் தென்ப".**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ என்னும் எழும் இரண்டு மாத்திரை அளவு ஒலிக்கும் உயிர் நெட்டெழுத்துக்களாகும்.

**மூன்று மாத்திரை ஒலிக்கும் எழுத்துத் தமிழில் இன்மை**

**"மூவளவு இசைத்தல் ஓலெழுத்து இன்றே".**

தமிழில் ஓர் எழுத்து மூன்று மாத்திரை அளவு ஒலித்தல் இல்லை.

எழுத்துக்கள் அளபெடுக்கும் போது மாத்திரை கூடுதல்

**"நீட்டம் வேண்டின் அவ்வள புடைய**

**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர்".**

நீட்டி ஒலிக்க விரும்பினால், எந்த அளபு நீட்டி ஒலிக்க வேண்டுமோ அந்த அளபு இயைபுடைய ஒலியைக் கூட்டி ஒலித்துக்கொள்க என்று புலவர் கூறுவர்.

**மாத்திரைக்கு அளவு**

**"கண்ணிமை நொடிஎன அவ்வே மாத்திரை**

**நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே".**

இயல்பாக எழும் கண்ணிமைக்கும் பொழுதும் கைநொடிக்கும் பொழுதும் ஒரு மாத்திரை அளவுக் கணக்கிடும் கருவிகள் என நுண்ணிதாக ஆராய்ந்துணர்ந்தவர்கள் கூறுவர்.

**உயிரெழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள்**

**"ஔகார இறுவாய்**

**பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப"**

**"னகார இறுவாய்**

**புதினென் எழுத்தும் மெய்யென மொழிய".**

அகரம் முதல் ஔகாரம் ஈறாக உள்ள பன்னிரெண்டெழுத்தும் உயிரெழுத்துக்கள் ஆகும்.

ககரம் முதல் னகரம் ஈறாக உள்ள புள்ளியிட்ட பதினெட்டெழுத்தும் மெய்யெழுத்துக்கள் ஆகும்.

**உயிர்மெய், தனிமெய் மாத்திரை அளவு**

**"மெய்யோடு இயையினும் உயிரியல் திரியா"**

**"மெய்யின் அளபே அரையென மொழிப".**

மெய்யெழுத்துடன் உயிர்கூடி 'உயிர்மெய்' எழுத்துப் பிறந்தாலும் அதிலுள்ள உயிர் தன் இயல்பை இழக்காது. உயிரின் மாத்திரையே உயிர்மெய்யின் மாத்திரையுமாகும்.

**சார்பெழுத்துக்கள் ஒலிக்கும் கால அளபு**

**"அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே".**

குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்ற ஏனைய மூன்று சார்பெழுத்துக்களும், மெய் போல அரை மாத்திரையே பெறும்.

மகர மெய்யின் மாத்திரை

**"அரையளவு குறுகல் மகரம் உடைத்தே**

**இசையின் அருகும் தெரியுங் காலை".**

மகரமெய் தனக்குரிய அரை மாத்திரையிலிருந்து குறுகிக் கால் மாத்திரையாகுமிடம் உண்டு. ஆராயின் இது செய்யுள் ஓசை கருதி அரிதாக வரும். (போன்ம், மருண்ம்)

**மகர மெய்யினது வரி வடிவு**

**"உட்பெறு புள்ளி உருவா கும்மே".**

குறுகிய மகர மெய்க்கு உரிய வடிவினுள்ளே புள்ளி ஒன்று அமையும் (முற்கால நிலை).

**மெய்யின் வடிவம்**

**"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்".**

மேலே புள்ளியுடன் அமைவதே மெய்யெழுத்துக்களின் உருவத்தைக் காட்டும்.

**எகக ஒகரங்களும் புள்ளி பெறுதல்**

**"எகர ஒகரத்து இயற்கையும் அற்றே".**

ஊயிர்களுள் எ, ஒ என்ற இரு குறில்களும் அதே இயல்புடன் புள்ளி பெற்றே நிற்கும்.

**உயிர்மெய்கள் ஒலிக்கும் முறையும் வரி வடிவமும்**

**"புள்ளி இல்லா எல்லா மெய்யும்**
**உருவுரு வாகி அகரமோடு உயிர்த்தலும்**
**ஏனை உயிரோடு உருவு திரிந்துயிர்த்தலும்**
**ஆயீரியல உயிர்த்த லாறே".**

புள்ளி நீங்கிய மெய்கள் எல்லாம் அவ்வடியே வடிவாக (க, ங, ச என) அகரமேறிய உயிர்மெய்களாகி ஒலிக்கப்படும். இது பிற பதினோர் உயிர்களோடு சேரும் போது வேறுவேறு வடிவங்களைப் பெற்று ஒலிக்கப்படும். இவ்விரு முறையில் உயிர்மெய்களின் வடிவமும் ஒலிக்கும் முறையும் அமையும்.

**உயிர்மெய் ஒலிக்கும் நிலை**

**"மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே".**

உயிர்மெய்யில் மெய்யொலி முன்னும் உயிரொலி பின்னுமாக ஒலிக்கும் (க +அ - க).

**வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து**

**"வல்லெழுத் தென்ப கசடதபற".**

**"மெல்லெழுத் தென்ப ஙஞணநமன".**

**"இடையெழுத் தென்ப யரலவழள".**

வல்லெழுத்துக்கள் என்பவை க்ச்ட்த்ப்ற் என்பதாகும். மெய்யெழுத்துக்கள் என்பன ங்ஞ்ண்ந்ம்ன் ஆகியனவாகும். இடையெழுத்துக்கள் என்பவை ய்ர்ல்வ்ழ்ள் ஆகியனவாகும்.

**மெய்ம் மயக்கங்கள்**

**"அம்மூ வாறும் வழக்கியல் மருங்கின்**
**மெய்ம்மயங் குடனிலை தெரியுங் காலை".**

பதினெட்டு மெய்களும் மொழிப்படுத்தும் மக்களின் வழக்கில் ஓரொற்றுனிலையாகத் தம்முன் மயங்கி வரும்.

'முன்னம்'- சொல்லிடையே ன் மெய்யின்பின் 'ன' வந்துள்ளது. இது ன +அ என மெய்யொலி முன்னதாதலின் தன்னெழுத்தின் முன் தானே வந்தது. இவ்வாறு முன்னதாக மெய்யும் தொடர்ந்து அதுவே உயிர்மெய்யுமாக வந்து இணைவதால் இவை ஓர்ஒற்று உடனிலை எனப்படும். இதனை உடனிலை மெய்ம்மயக்கம் என்றும் கூறுவர்.

'முன்பு' – ன் + ப் + உ இதில் ன், ப் என வேறுபட்ட மெய்கள் தம்முள் மயங்கி இணைந்து நின்றன. இதை வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பர். இவ்விலக்கணம் தமிழ்ச் சொற்களை இனங்காட்டும்.

**"டறலள என்னும் புள்ளி முன்னர்க்**

**கசப என்னும் மூவெழுத் துரிய"**

ட்றல்ள் நான்கனையும் அடுத்து க்ச்ப் மெய்கள் உடன் கலந்து நிற்றற்குரியன.

**(எ-கா)**

கோட்க, கற்க, செல்க, கொள்க

**"அவற்றுள்**

**ல ள ஃ கான் முன்னர் யவ வும் தோன்றும்"**

அவற்றுள் ல், ள் இரண்டனையடுத்து ய் வ் இடம்பெறும்.

**(எ-கா)**

கொல்யானை, வெள்வளை

**"ஙஞணநமன எனும் புள்ளி முன்னர்த்**

**தத்தம் மிசைகள் ஒத்தன மெலயே".**

ங், ஞ், ண், ந், ம், ன் என்ற மெல்லின எழுத்துக்களுக்குப் பிறகு அவ்வவற்றிற்கு முன்னதாக நெடுங்கணக்கில் நிற்கும் க், ச், ட், த், ப், ற் என்ற வல்லின எழுத்துக்கள் பொருந்தி நிற்கும்.

'ஒத்தன நிலையே' என்பதால் ஙக, ஞ்ச, ண்ட என ஓசைப் பொருத்தமும் சுட்டப்படுகிறது.

**(எ-கா)**

தெங்கு, பஞ்சு, உண்டு, பந்து, கம்பு, கன்று

**"அவற்றுள்**

**ணனஃகான் முன்னர்க்**

**கசஞப மயவல் ஏழும் உரிய".**

அவற்றுள் ண், ன் அடுத்து க், ச், ஞ், ப், ம், வ் ஏழு மெய்களும் பொருந்தும்.

**(எ-கா)**

வெண்கலம், புன்கண்

**"ஞநமவ என்னும் புள்ளி முன்னர்**

**யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே".**

ஞ், ந், ம், வ் என்னும் மெய்களுக்குப் பின்னர் ய் நிற்பது வழக்கில் உண்டு. இவ்வகைக்குரிய தனிச் சொற்கள் அரிதாக வழங்கியிருக்க வேண்டும்.

**"மஃகான் புள்ளிமுன் வவ்வும் தோன்றும்".**

ம் மெய்முன் வ் மெய்யும் இடம் பெறும்.

**"யரழ என்னும் புள்ளி முன்னர்**

**முதலாகு எழுத்து ஙகரமொடு தோன்றும்".**

ய், ர், ழ் மெய்களின் பின்னர் முதலாகுமென்ற ஒன்பது கசதபஞநமயவ என்ற உயிர்மெய் எழுத்துக்களும் ங் என்ற மெய்யும் கலந்து வரும்.

**(எ-கா)**

செய்தி, பார்வை, தாழ்வு

## உடனிலை, வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

**"மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்**

**தும்முன் தாம்பரூஉம் ரழ அலங் கடையே".**

வழக்கு நிலையைச் சுட்டிக் கூறினால், எல்லா மெய்களுமே தம்முன்தாம் இணைந்து வரும்.  ர, ழ இரண்டும் தவிர்த்து, தாக்கு, பேச்சு, ர், ழ் இரண்டுமே தம்முன்தாம் வராது.  தம்முன் பிற மெய்களே வந்து மயங்கும். (ஆர்வம், வாழ்க்கை)

க, ச, த, ப நான்கும் தம்முன் பிறவே வரும்.  எஞ்சிய பன்னிரண்டும் - ங், ஞ், ட், ண், ந், ம், ய், ல், வ், ள், ற், ன் - தம்முன் தாமும் தம்முன் பிறவும் என இருவகையாகவும் வரும்.

**சுட்டெழுத்து, வினாவெழுத்து**

> **"அ இ உ அம் மூன்றும் சுட்டு".**
>
> **"ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா".**

அ, இ, உ என்னும் மூன்று உயிர்க் குறில்களும் சுட்டெழுத்துக்களாகும்.

அம்மூன்றும் - தொல்காப்பியர் கூறியது.

ஆ, ஏ, ஓ என்னும் மூன்றும் வினாவெழுத்துக்களாகும்.

**(எ.கா)**

பார்த்தாயா? நீதானே? இல்லையோ?

**இசைப்பாடலில் எழுத்தொலிகள் மீளுதல்**

> **"அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
> **ஊளவென மொழிப இசையொடு சிவணிய**
> **நரம்பின் மறைய என்மனார் புலவர்".**

ஊயிர், மெய் எழுத்துக்களுக்கு மாத்திரை அளபு கூறப்பட்டன. மூன்று மாத்திரை ஒலிக்கும் அளபெடைகளும் குறிப்பிடப்பட்டன. இந்த அளபுகளைவிட மிக நீட்டித்தும் இவை இசைத் தமிழில் ஒலிக்கும் என்ற புறனடையே இதில் கூறப்படுகிறது.

## மொழி மரபு

**சார்பெழுத்துக்கள்**

**ஒருமொழிக் குற்றியலிகரம், ஒருமொழிக் குற்றியலுகரம்**

> **"குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
> **யாவென் சினைமிசை உரையசைக் கிளவிக்கு**
> **ஆவயின் வரூஉம் மகரம் ஊர்ந்தே".**

பேச்சிடையே ஒருவரை அழைக்க கேண்மியா, சென்மியா என 'மியா' என்ற அசைச்சொல் முன்பு பயன்பட்டது. இந்த உரையசைச் சொல்லில் யா எழுத்துக்கு முன் மகர ஒற்றிலுள்ள இ குறுகும்.

> **"நெட்டெழுத் தம்பரும் தொடர்மொழி ஈற்றும்**
> **குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே".**

துனி நெட்டெழுத்துக்குப் பின்பும் ஒன்றுக்கு மேற்பட்ட பல எழுத்துக்கள் தொடர்ந்த மொழிகளிலும் வல்லெழுத்துக்கள் ஆறினையும் சார்ந்து குற்றியலுகரம் வரும்.

வல்லினம் ஆறு: க்ச்ட்த்ப்ற். (நாடு, பாக்கு, மூச்சு, பாட்டு, நல்லது, உப்பு, பற்று).

**புணர்மொழிக் குற்றியலிகரம், புணர்மொழி குற்றியலுகரம்**

**"புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே**

**ஊணரக் கூறின் முன்னர்த் தோன்றும்".**

குற்றியலிகரம் புணர்மொழியுள்ளும் வருமென்று உணர்த்தும் வகையில் தனிமொழியில் மட்டுமன்றி, இருசொற்புணர்ச்சியின் கண்ணும் இகரம் குறுகும்.

**(எ-கா)**

நாடு+யாது - நாடியாது

காட்டு+யாணை - காட்டியானை

**"இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே**

**கடப்பா டறிந்த புணரிய லான".**

தனிமொழிகளில் மட்டுமன்றி புணர்மொழிகளின் இடையிலும் உகரம் குறுகும்.

**(எ-கா)**

சுக்குச்சாறு, மூச்சுக்காற்று - இடையில் உகரம் குறுகுதல்

**ஒருமொழி ஆய்தம், புணர்மொழி ஆய்தம்.**

**"குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி**

**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே".**

ஆய்தப் புள்ளி குற்றெழுத்தின் பின்னும் உயிர்மெய் வல்லெழுத்து ஆறனுக்கு முன்னுமாக வரும்.

**(எ-கா)**

எஃகு, அஃது, கஃசு

**"ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும்".**

நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்கும் இடத்தினும் ஆய்த ஒலி தோன்றும்.

**(எ-கா)**

கஃறீது, முஃடீது

அல் +திணைஸ்ரீஅஃறிணை

பல் +துளிஸ்ரீபஃறுளி

**குறிப்புமொழி ஆய்தம்**

**"உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**

**மோழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா**

**ஆய்தம் அஃகாக் காலை யான".**

நிறத்தையும் ஓசையையும் ஆய்த எழுத்துச் சொற்களால் குறிப்பதுண்டு.

ஒரு பொருளினது உருவத்தின் கண்ணும், ஓசையின் கண்ணும் அருகித்தோன்றுவது ஆய்தம்.

(எ-கா) சுஃறென ஒலிக்கும், கஃறெனக் கருக்கும்.

**இசை நிறைக்கும் உயிரளபெடை**

**"குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்**

**நேட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே".**

ஓசை குறையும் சொற்களில் நெட்டெழுத்துக்குப் பின்னே அதற்கு இனமொத்த குற்றெழுத்துக்கள் நின்று இசையை நிறைவிக்கும்.

(எ-கா) ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஓஒ

**ஐ, ஔ அளபெடை**

**"ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்கும்**

**இகர உகரம் இசைநிறை வாகும்".**

ஐ, ஔ என்னும் இரண்டு நெடில் எழுத்துக்களுக்கும் இன எழுத்துக்கள் இல்லாததால் ஐக்கு 'இ' யும் ஔக்கு 'உ'வும் தொடர்ந்து நின்று அளபெடையாக வரும்.

## மொழியாக்கம்

### ஓரெழுத்தொருமொழி

**"நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி".**

நெட்டெழுத்துக்கள் ஏழும் ஓரெழுத்து ஒரு மொழியாகும்.

**(எ-கா)**

ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஔ

**"குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே".**

குற்றெழுத்துக்கள் ஐந்தும் ஓரெழுத்தொரு மொழிகளாக நிறைவு பெற வருவதில்லை.

**(எ-கா)**

து – உண், நொ – நொந்து போ.

### மொழிவகை

**"ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி**
**இரண்டிறந்து இசைக்கும் தொடர்மொழி உளப்பட**
**மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே".**

தமிழில் சொற்கள் மூவகைப்படும்.

அவை ஓரெழுத்தொரு மொழி, ஈரெழுத்தொரு மொழி, தொடர்மொழி.

இரண்டுக்கும் மேற்பட்ட எழுத்துக்களைக் கொண்டவை தொடர்மொழி.

**(எ-கா)**

ஆ, மணி, வரகு, கொற்றன்

### தனிமெய் ஒலிக்கும் முறை

**"மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்".**

மெய்கள் 'அகர' உயிரொடு சேர்த்தே ஒலிக்கக் கூடும். க, ங, ச, ஞ ககர மெய் என்பர்.

### புறநடை

**"தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்**
**மெய்ந்நிலை மயக்கம் மானம் இல்லை".**

தனி எழுத்தாகிய தனது பெயரைக் கூறவரும் போது மெய்யும், உயிர்மெய்யும் ஒன்றுபோல் கலந்து கூறப்படுவதில் குற்றமில்லை. இடையெழுத்தென்ப யரல வழள.

**ஈரொற்றுடனிலை**

**"யரழ என்னும் மூன்றுமுன் ஒற்றக்**

**கசதப ஙஞநம ஈரொற்றாகும்".**

கட்கு, வெட்குதல் என்னும் 'ட்' என்ற ஒரு மெய்க்கு அடுத்து உயிர்மெய்யாயினும் மெய்யெழுத்தே முன் இணைந்து வரும். வாய்க்கால், காழ்ப்பு - இவற்றில் இரண்டு ஒற்றுக்கள் அடுத்தடுத்து நிற்பதால் இவை ஈரொற்றுடனிலை எனப்படும். ய, ர, ழ மூன்றும் முதலில் ஒன்றாக நிற்க அவற்றையடுத்து க, ச, த, ப, ங, ஞ, ந, ம என்னும் எட்டும் ஈர் ஒற்றாய் வரும்.

**(எ-கா)**

வேய்க்குறை, வேய்ங்குறை, வேர்க்குறை, வீழ்ங்குறை.

**தனிக்குறில் கீழ் வரா ஒற்றுக்கள்**

**"அவற்றுள்**

**ரகார ழகாரம் குற்றொற் றாகா".**

ர, ழ மெய்கள் தனிக்குறிலுக்குப் பின் ஒற்றாக வராது. ஒர் என வராது. ஓர் என வரும். ஏழ் எழு என வரும்.

குற்றொற்று என்பது குறிதாகிய ஒற்று எனப் பண்புத்தொகை.

**தொடர்மொழி இயல்பு**

**"குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்**

**தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத் தியல".**

ர், ழ் குறிலின் கீழ் வராது. ஆனால் குறிலிணைக்கீழ் எல்லாம் வரும். 'புகழ்' என்பதில் முதலில் வரும் இரண்டு குறில் இரண்டு மாத்திரை பெறுதலால் நெடில் போலக் கொள்ள வேண்டும்.

**(எ-கா)**

அகர், புகர், அகழ், புகழ்.

**செய்யுளில் வரும் போன்ம்**

**"செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்**

**னுகார மகாரம் ஈரொற் றாகும்”.**

செய்யுளின் இறுதியில் 'போலும்' என்ற சொல் 'போன்ம்' என்று வரும். 'போலி' – போலும் என்றும் மருளும் என்பது மருண்ம் என்றும் செய்யுளில் வரும்.

**அம் மகரங்குறுகுதல்**

**“னகாரை முன்னர் மகாரம் குறுகும்".**

நகாரம் முன் வந்த மகாரம் மாத்திரை குறுகி நிற்கும்.

**தமிழ் எழுத்தின் இயல்புநிலை**

**"மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவே றிசைப்பினும்**

**எழுத்தியல் திரியா என்மனார் புலவர்".**

தமிழ் எழுத்துக்களை ஒரு சொல்லினுள் வைத்து ஒலித்தாலும், தனியே எடுத்து ஒலித்தாலும் தத்தம் தன்மையில் திரிவதில்லை.

**(எ-கா)**

அஃகல் அ எனவும், ஆல் ஆ எனவும், கடல் கா எனவும் ஒலிக்கும்.

**போலி எழுத்துக்கள்**

**"அகர இகரம் ஐகாரம் ஆகும்".**

அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரமாகும். ஐகாரம் போல ஆகும்.

**(எ-கா)**

ஐயர் - அஇயர் என வரும்.

**"அகர உகரம் ஔகாரம் ஆகும்".**

அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம் ஆகும். ஔகாரம் போல ஆகும்.

**(எ-கா)**

ஔவை - அஉவை என வரும்.

**"அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்**

**ஐஎன நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்".**

அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும் ஐ என் நெட்டெழுத்து வடிவுபெறத் தோன்றும்.

**(எ-கா)**

ஐவனம், அவ்வனம் என வரும்

**ஐகாரம் ஒரு மாத்திரையளவு இசைத்தல்**

**"ஓரள பாகும் இடனுமா ருண்டே**

**தேருங் காலை மொழிவயி னான்".**

ஐ, ஔ இரண்டும் இரண்டு மாத்திரை கொண்ட சொற்கள். அவையே சொற்களிடையே வரும் போது ஒரு மாத்திரை மட்டுமே பெறுமிடங்களும் உள்ளன.

**(எ-கா)**

பழைமை – பழமை

இடையன் - இடயன்

மடையன் - மடயன்

**யகரத்திற்கு இகரம் போலியாதல்**

**"இகர யகரம் இறுதி விரவும்".**

இகரவீற்று மொழிக்கண் யகரமும் இகரமும் விரவி வரும்.

**(எ-கா)**

நாய், நாஇ

**உயிர் பன்னிரண்டும் மொழிமுதல் ஆதல்**

**'பன்னீர் உயிரும் மொழிமுத லாகும்".**

பன்னிரண்டு உயிர் எழுத்துக்களும் மொழிக்கு முதலாக வரும்.

**(எ-கா)**

ஆடை, ஆடை, இலை, ஈயம், உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐவனம், ஒளி, ஒக்கம், ஔவியம்.

**உயிரோடு கூடியது மெய் முதலாகாமை**

**"உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா".**

ஊயிர்மெய் அல்லாத தனி மெய்கள் தமிழில் மொழிக்கு முதலில் வருவதில்லை.

**(எ-கா)**

ப்ரியா, க்ரியா – தமிழல்ல

**மொழி முதலாகும் உயிர்மெய்கள்**

**"கதந பமஎனும் ஆவைந் தெழுத்தும்**

**எல்லா உயிரொடும் செல்லுமார் முதலே".**

குதநபம என்ற ஐந்து மெய்யெழுத்துக்களும் பன்னிரண்டு உயிர்களோடு மொழிக்கு முதலாக வரும்.

**(எ-கா)**

கடல், காடு, கிளை, கீரி.

**சுகர மெய் ஒன்பதுயிருடன் மொழிமுதலாதல்**

**"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே**

**அ ஐ ஔஎனும் மூன்றலங் கடையே".**

சகர மெய் அ, ஐ, ஔ தவிர்த்த ஒன்பது உயிர்களோடும் மொழிக்கு முதலில் வரும்.

**(எ-கா)**

சாலை, சீலை, சீறுக, கரும்பு, சூழ்க, செய்கை, சேவடி, சொரிக, சோறு.

**வகரமெய் எட்டுயிருடன் மொழிமுதலாதல்**

**"உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர்**

**வ என் எழுத்தொடு வருதல் இல்லை".**

வகர மெய்யுடன் உ, ஊ, ஒ, ஓ நான்குயிரும் வராது.  பிற உயிர்கள் வரும்.

**(எ-கா)**

வளை, வாளி, விளரி, வீடு, வெள்ளி, வேர், வையம், வௌவு.

**ஞகரமெய் மூன்றுயிருடன் மொழிமுதலாதல்**

**"அ எ ஔனும் மூவுயிர் ஞகாரத்துரிய".**

அ எ ஒ என்று சொல்லப்படும் மூவுயிர்கள் ஞகார ஒற்றோடு முதலாக வரும்.

**(எ-கா)**

ஞாலம், ஞெகிழி, ஞொள்கிற்று.

**யகர மெய் 'ஆ' வுடன் மட்டும் மொழிமுதலாகும்**

"ஆவோ டல்லது யகர முதலாது".

யுகரம் ஆவுடன் சேர்ந்து மட்டுமே மொழிமுதலாகும். முதலாது – முதலாக வராது.

**(எ-கா)**

யான் என வரும்

யானை, யாமம்-யவனர், யு+கம் போன்றவை பின்பு வந்தவை.

**தத்தம் பெயர் சொல்ல, எல்லாமெய்யும் முதலாதல்**

**"முதலா ஏன தம்பெயர் முதலும்".**

முதலாகா எனக் கூறப்பட்ட பிற மெய்கள் எல்லாம் தம் பெயர் கூறும்போது முதலாகும்.

**(எ-கா)**

டப்பெரிது, ஙப்போல்வளை, றன்னகரமா? டண்ணகரமா? என வரும்.

**மொழிமுதற் குற்றியலுகரம்**

**"குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின்**

**ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்".**

நுந்தை என்னும் முறைப் பெயரிடத்துப் பொருந்திய 'ந்' என்னும் ஒற்றின் மேல் நிற்கும் உகரம் குறுகும்.

**(எ-கா)**

நுந்தை – உன் தந்தை

**முற்றியலுகரமொடு பொருள் வேறுபடாமை**

**"முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅது**

**அப்பெயர் மருங்கின் நிலையிய லான".**

குற்றியலுகரச் சொற்கள் முற்றியலுகரமாய் பொருள் வேறுபடும். கட்டு, ஓடு என ஏவும்போது முற்றுகரம். நுந்தை என்னும் அம்முறைப் பெயர் நிலையாக வருதலால் முற்றியலுகரமாய் பொருள் வேறுபடுவதில்லை.

## மொழியிறுதி எழுத்துக்கள்

**உயிர்கள் மொழியீறாதல்**

**"உயிர் ஔ எஞ்சிய இறுதி யாகும்".**

ஔ தவிர்த்த 11 உயிர்களும் மொழியிறுதியில் வரும். ஆ, ஈ, ஐ எனும் ஓரெழுத்தொரு மொழிகளில் உயிரே ஈறாம்.

**(எ-கா)**

ஆஅ, ஆ, ஈஇ, ஈ, ஊஉ, ஊ, ஏஎ, ஐஇ, ஐ, ஓஒ, ஓ என உயிர் ஈறாயின.

நுட – அகர ஈறு, கடா – ஆகார ஈறு

**ஔ ஈறாகுமிடங்கள்**

**"கவவோ டியையின் ஔவு மாகும்".**

க், வ் இரண்டோடும் பொருந்தின் 'ஔ'வும் மொழி ஈறாகும்.

**(எ-கா)**

கௌ, வௌ

**எ மெய்யுடன் ஈறாதல் இல்லை**

**"எ என வருமுயிர் மெய்யீ றாகாது".**

'எ' உயிர்மெய்யுடன் கூடி ஈறாகாது. ஏஎ, பேஎ என அளபெடையில் மட்டும் இறுதியில் வரும்.

**ஒகரம் நகரமெய்யொடு ஈறாதல்**

**"ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே".**

ஒ – ந்மெய் தவிர்த்து எதிலிரும் ஈறாகாது.

**(எ-கா)** நொ – நொந்து போ

**ஏ, ஓ ஞகர மெய்யுடன் ஈறாகாமை**

**"ஏ ஓ எனும் உயிர் ஞகாரத் தில்லை".**

ஞகாரத்துடன் கூடி ஏ, ஓ உயிர்கள் ஈறாவதில்லை.

**ஊகர ஊகாரங்கள் நகர வகரங்களோடு ஈறாகாமை**

**"உ ஊ காரம் நவவொடு நவிலா".**

ஊகர ஊகாரங்கள் நகர வகரங்களுடன் ஈறாக வருவதில்லை.

**சகரம் உகரம் இரு மொழிக்கே ஈறாதல்**

**"உச்ச காரம் இருமொழிக் குரித்தே".**

உகரத்தோடு கூடிய சகரம் இருமொழிக்கு ஈறாகும் பலமொழிக்கு ஈறாகாது.

**(எ-கா)**

உசு, முசு

**பகர உகரம் ஒருமொழிக்கே ஈறாதல்**

**"உப்ப காரம் ஒன்றென மொழிய**

**இருவயி னிலையும் பொருட்டா கும்மே".**

ஊகரத்தொடு கூடிய பகரம் ஒருமொழிக்கு ஈறாகும். அது தன்வினை பிறவினை என்னும் இரண்டிடத்தும் நிலைபெறும்.

**(எ-கா)**

தபு

**புறனடை**

**"எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே".**

எஞ்சிய பிற உயிர்கள் எல்லாம் ஈறாக வரும்.

**மொழிக்கு ஈறாகும் தனிமெய்கள்**

**"ஞணநம னயரல வழள வென்னும்**

**அப்பதி னொன்றே புள்ளி யிறுதி".**

ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வழ, ள என்ற பதினொரு மெய்யும் மொழி இறுதியில் வரும்.

**(எ-கா)**

உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வேள்

**நகரமெய் இருமொழிக்கே ஈறாதல்**

**"உச்ச காரமொடு நகாரம் சிவணும்"**

ஊகரத்தொடு கூடிய சகாரத்தோடு நகாரம் பொருந்தி இருமொழிக்கு ஈறாவது போலத் தானும் இருமொழிக்கு ஈறாக வரும்.

(எ-கா)

பொருந், வெரிந்

**ஞகரமெய் ஒரு மொழிக்கே ஈறாதல்**

**"உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே**

**அப்பொருள் இரட்டா திவணை யான".**

ஞகர இறுதி 'பு' இறுதிபோல ஒரே சொல்லில் ஈறாகும். ஆனால் பொருள் இரட்டித்து வராது.

(எ-கா)

உரிஞ்

**வகரமெய் ஈறாம் மொழிகள் நான்கே ஆதல்**

**"வகரக் கிளவி நான்மொழி ஈற்றது".**

வகரம் நான்கு சொற்களில் மட்டும் ஈறாகும்.

**(எ-கா)**

அவ், இவ், உவ், தெவ்

**மகர ஈற்றொடு மயங்காத னகர ஈற்றுத் தொடர்மொழிகள்**

**"மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த**

**ஐகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப**

**புகரறக் கிளந்த அஃறிணை மேன".**

ம், ன் என்பன போலியாக மாறி வரும். மகர ஈறாக மாற்றிக் கூறப்படாத னகர ஈற்றுமொழிகள் தமிழில் ஒன்பது உள்ளன. அவை அஃறிணையிடத்து வரும்.

**(எ-கா)**

நிலன், நிலம் என்று மயங்கும்.

## பிறப்பியல்

**எழுத்துக்களது பொதுப் பிறப்பு**

**"உந்தி முதலா முந்துவளி தோன்றித்**

**தலையினும் மடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்**

**பல்லும் இதழும் நாவும் மூக்கும்**
**அண்ணமும் உளப்பட எண் முறை நிலை யான்**
**உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி**
**எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல**
**திறப்படத் தெரியும் காட்சி யாண".**

எழுத்துக்களானவை உதானன் என்னும் ஓசைக்காற்று தலை, மிடறு, நெஞ்சு ஆகிய நிலைக்களன்களின் கண் தங்கி பல், இதழ், நா, மூக்கு, அண்ணம் ஆகிய எட்டுவகை வழி முறையாக அவ்வுறுப்புக்களில் பொருந்தியமைய தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் முறைப்படி ஆராய்ந்து சொல்லும்போது அவை வெவ்வேறு தன்மையுடையவனாய்ப் பிறந்து ஒலிக்கும்.

**உயிரெழுத்துக்களின் பிறப்பு**

**"அவ்வழிப்**
**பன்னீருயிரும் தந்நிலை திரியா**
**மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்".**

பன்னிரண்டு உயிரும் தத்தம் நிலையில் திரியாது மடற்றின்கண் பிறந்த ஓசைக் காற்றால் ஒலிக்கும்.

**உயிரெழுத்துகட்குச் சிறப்புப் பிறப்பு உணர்த்துதல்**

**"அவற்றுள்**
**அ ஆ ஆயிரன் டங்காத்து இயலும்".**

அ, ஆ என்னும் உயிரெழுத்துக்கள் இரண்டும் வாயை ஆவென அங்காத்தலால் பிறக்கும்.

**இகரம் முதலியன பிறத்தல்**

**"இஈ எஏ ஐயென இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் அவற்றோ ரன்ன**
**அவைதாம்**
**அண்பல் முதல்நா விளம்புறல் உடைய"**

இ ஈ எ ஏ ஐ என்னும் ஐந்து எழுத்துக்களும் வாயை அங்காத்தலால் பிறக்கும். இவை மேற்பல்லின் அடியை நாவினது அடிவிளிம்பு சென்று பொருந்தப் பிறக்கும்.

**உகரம் முதலியன பிறத்தல்**

**"உஊ ஒஓ ஔ என இசைக்கும்**

**அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்".**

உ ஊ ஒ ஓ ஔ என ஒலிக்கும் அப்பகுதிப்பட்ட ஐந்தும் இதழ்குவித்துச் சொல்லப் பிறக்கும்.

**உயிர், மெய் பிறப்பிற்குப் பொது விதி**

` **"தத்தந் திரிபே சிறிய வென்ப".**

இங்ஙனம் தொகுத்துச் சொல்லப்பட்டாலும், அவற்றுள் ஒவ்வொன்றனுக்கும் சிறுசிறு ஒலிப்பு வேறுபாடுண்டு.

## மெய்யெழுத்துக்களின் பிறப்பு

**க, ங பிறத்தல்**

**"ககார ஙகாரம் முதல்நா அண்ணம்".**

மேல்வாய் அண்ணத்தின் அடியை நாவினது அடி பொருந்த க, ங இரண்டும் பிறக்கும்.

**ச, ஞ பிறத்தல்**

**"சகார ஞகாரம் இடைநா அண்ணம்".**

மேல்வாய் அண்ணத்தினது இடைப்பகுதியை நாவினது இடைப்பகுதி பொருந்த ச, ஞ இரண்டும் பிறக்கும்.

**ட, ண பிறத்தல்**

**"டகார ணகாரம் நுனிநா அன்னம்".**

அண்ணத்தின் நுனிப்பகுதியை (மேல் வாய் முன் பகுதியை) நாவினது நுனிப்பகுதி பொருந்த ட, ண இரண்டும் பிறக்கும்.

**மெய்யெழுத்துக்களுக்கு சிறப்புப் பிறப்பு**

**"அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின".**

மேற்கூறப்பட்ட அவ் ஆறு எழுத்துக்களுக்கும் இணைகளாக மூவகைப் பிறப்பின.

**த, ந பிறத்தல்**

**"அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்**
**நாநுனி பரந்து மெய்யுற வொற்றத்**
**தாமினிது பிறக்குந் தகார நகாரம்".**

அண்ணத்தின் அருகிலுள்ள மேற்பல்லின் அடிப்பக்கத்தில் நாவினது நுனி பரந்து நன்கு அழுத்த த, ந பிறக்கும்.

**ற, ன பிறத்தல்**

**"அணரி நுனிநா அண்ணம் ஒற்ற**
**றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்".**

நுனிநா அண்ணத்தை சென்று ஒற்ற ற, ன ஆகிய இரண்டும் பிறக்கும்.

**ர, ழ பிறத்தல்**

**"நுனிநா அணரி அண்ணம் வருட**
**ருகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்".**

நுனிநா அண்ணத்தைத் தடவ ர, ழ இரண்டும் பிறக்கும்.

# அலகு - 2

## புணரியல்

**உயிர் ஈறும் மெய் ஈறும்**

**"மூன்றுதலை யிட்ட முப்பதிற்று எழுத்தின்**
**இரண்டுதலை யிட்ட முதலாகு இருபஃது**
**அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்**
**எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்**
**மெய்யே உயிரென்று ஆயீ ரியல".**

மூன்று தலையிட்ட முப்பது-33. இரண்டு தலையிட்ட இருபது-22. அறுநான்கு-24 தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்றில், சொல்லின் முதலாக வரும் இருபத்து இரண்டு எழுத்துக்கள் சொல்லின் ஈறாக வரும் இருபத்து நான்கு எழுத்துக்களுடன் சேர்வதே புணர்ச்சி. எல்லாச் சொற்களும் இறுதியும் முதலுமாக மெய்யும் உயிரும் வரும்.

**மொழியிறுதி மெய்கள் புள்ளி பெறுதல்**

**"அவற்றுள்**
**மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்".**

மெய்யீறு, உயிரீறு என்றவற்றுள் மெய்யீறு என்பன எல்லாம் புள்ளி பெற்று நிற்கும்.

**குற்றியலுகரம் ஒற்றெழுத்து ஒத்தல்**

**"குற்றியலுகரமும் அற்றென மொழிப".**

மெய்யிறுதிக் குற்றியலுகரமும் மெய்யின் தன்மையை உடையதாய், புள்ளி பெற்று வருமொழி முதலிலுள்ள உயிரீறே இடங்கொடுக்கும்.

**உயிர்மெய்யீறு உயிரீறாகக் கோடல்**

**"உயிர்மெய் யீறும் உயிரீற் றியற்றே".**

உயிர்மெய் ஈறும் உயிரீற்றின் தன்மையுடையதாகும்.

பல – அகர ஈறாகக் கருதப்படும் (பல் +அ - பல)

**நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்**

**"உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்**
**மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்**
**மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியுமென்(று)**
**இவ்வென அறியக் கிளங்குங் காலை**
**நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்(று)**
**ஆயீ ரியல் புணர்நிலைச் சுட்டே".**

சொற்கள் தம்முள் புணரும் போது உயிரில் முடியும் சொல்லுடன் உயிர் முதலில் வரும் மொழியும், உயிரில் முடியும் சொல்லுடன் மெய் முதலில் வரும் மொழியும், மெய்யில் முடியும் சொல்லுடன் உயிர் முதலில் வரும் மொழியும் மெய்யில் முடியும் சொல்லுடன் மெய் முதலில் வரும் மொழியும் எனப் புணரும். இவை நிறுத்த சொல் குறித்துவரு கிளவி எனப்படும்.

**மூன்று திரிபும் ஓரியல்பும்**

**"அவற்றுள்**
**குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்குங் கானலும்**
**பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்**
**தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்**
**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல் பென**
**ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே".**

அவற்றுள் நிறுத்த சொல்லின் ஈறாக வரும் எழுத்துடன் குறித்துவரு கிளவியின் முதலெழுத்து இயைவதே புணர்ச்சியாகும்.

பெயர் + பெயர், பெயர் +வினை, வினை+பெயர், வினை+வினை என்று சொற்கள் புணரும் திரிபு மூன்று. தோன்றல், திரிதல், கெடுதல் இயல்பு சேர்க்க நான்கு. (எ-கா) சாத்தன் கை, சாத்தன் உண்டான், வந்தான் சாத்தன்.

**மூவகைத் திரிபுகள்**

**"அவைதாம்**
**மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று**
**இவ்வென மொழிப திரியு மாறே".**

மேய்பிறதாதல், புதிய எழுத்துத் தோன்றுதல், முன்னிருந்த எழுத்துக் கெடுதல் என்னும் மூன்று வகையில் எழுத்துக்கள் திரியும்.

**(எ-கா)** கடல் +கரை – கடற்கரை – மெய்பிரிவதால் எழுத்து திரிதல்.

வாழை+பழம் - வாழைப்பழம் - புதிய எழுத்து தோன்றல்.

மரம் +வேர் - மரவேர் - முன்னிருந்த எழுத்து கெடுதல்.

**அடைமொழிகளொடு புணர்தல்**

**"நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்**

**அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய".**

நிறுத்த சொல், குறித்து வரு கிளவிகள் அடைமொழியுடன் வரினும் புணர்ச்சிக்குரியதாக வரும்.

**(எ-கா)** பனைமரம் +கிளை – பனைமரக்கிளை

**மரூஉ மொழிப் புணர்ச்சி**

**"மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்**

**உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே".**

உலகின்கண் மரூஉ மொழிகளாய்த் திரிந்து வழங்கும் சொற்களுள்ளும் புணர்ச்சியமைப்பிற்கு உரியனவாய் உள்ளன.

ஆந்தை என்னும் மரூஉ மொழி ஆதன் +தந்தை என்று பிரிந்து புணர்ச்சிச் சுட்டுக்குரியதாக வரும்.

**(எ-கா)** என் +தந்தை – எந்தை

**நான்கு வகையும் இருவகையாதல்**

**"வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்**
**வேற்றுமை யல்வழிப் புணர்மொழி நிலையும்**
**எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்**
**ஒழுக்கல் வலிய புணருங் காலை".**

பொருளடிப்படையில் வரும் புணர்ச்சி வேற்றுமை, வேற்றுமை அல்லாத வழி என இருதிறப்படும். அவை புணரும்போது எழுத்து மிகுதலும் சாரியை மிகுதலும் என இருவகைப்படும்.

**(எ-கா)** விளங்கோடு, மகவின் கை, விளக்குறிது.

**புணர்ச்சியில் இடம்பெறும் வேற்றுமை உருபுகள்**

**"ஐ ஒடு கு இன் அதுகண் ணென்னும்**

**அவ்வாறென்ப வேற்றுமை யுருபே".**

ஐ ஒடு கு இன் அதுகண் என்று சொல்லப்படும் ஆறும் வேற்றுமையுருபுகளாகும்.

**வலிமுதல் உருபு புணர்நிலை**

**"வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்கு**

**ஓல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்".**

வல்லெழுத்தை முதலாகவுடைய வேற்றுமைஉருகட்கு (கு, கண்) பொருந்துமிடங்களில் இடையே ஒற்று மிகும்.

**(எ-கா)** ஊர்க்கு, நீர்க்கு, ஊர்க்கண், நீர்க்கண்

**ஆறனுருபின் அகரம் கெடுதல்**

**"ஆறன் உருபின் அகரக் கிளவி**

**ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்".**

ஆறாம் வேற்றுமையாகிய அது என்னும் சொல்லிடத்து அகரமாகிய எழுத்து, ஈறு ஆக அகரமுனை கெடுதல் வேண்டும்.

**(எ-கா)** நமது, எமது, தனது, நினது, எனது

**வேற்றுமை உருபுகள் நிற்குமிடம்**

**"வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே".**

வேற்றுமை உருபுகள் பெருடன் கூடுங்காலத்து அப்பெயருக்குப் பின் வருபவை. வேற்றுமைப் பெயர் வழிய எனக் கூட்டுக.

**(எ-கா)** முருகன் +ஐ – முருகனை

**பெயர்களின் பெயர், முறை, தொகை, பெயர் பின் சாரியை வருதல்**

**"உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று**

**ஆயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே".**

உயர்திணைப் பெயரும் அஃறிணைப் பெயரும் பெயர்களென்று சுட்டப்படும்.

**(எ-கா)** அடூஉ, மகடூஉ – உயர்திணைப் பெயர்

மயில், ஒன்று, பல – அஃறிணைப் பெயர்

**"அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே".**

உயர்திணை, அஃறிணைப் பெயர்களின் பின் சாரியை வரும்.

**(எ-கா)** ஆடூஉவின் கை, மகடூஉவின் கை, பலவற்றுக் கோடு.

**சாரியைகள் இவையெனல்**

**"அவைதாம்**
**இன்னே வற்றே அத்தே அம்மே**
**ஒன்னே ஆனே அக்கே இக்கே**
**அன்னென் கிளவி உளப்படப் பிறவும்**
**அன்ன என்ப சாரியை மொழியே".**

இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன் இவை ஒன்பது போன்று வரும் பிறவும் சாரியைகளாகும். சாரியைகள் இடைச்சொற்கள். அவற்றுக்குத் தனிப் பொருளில்லை.

**இன் சாரியையின் முதலும், இறுதியும் திரிதல்**

**"அவற்றுள்**
**இன்னின் இகரம் ஆவின் இறுதி**
**முன்னர்க் கெடுதல் உரித்து மாகும்".**

இன் சாரியையினது இகரம் ஆ என்னும் சொல்லீற்று முன்னர் கெடுதலும் கெடாது நிற்றலும் உண்டு.

**(எ-கா)** ஆனை, ஆவினை, ஆன்கோடு, மானை, மாவினை, மாவின் கோடு.

**"அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை**
**னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே".**

அளவைக் குறிக்கும் சொல்லின் முன்னுள்ள 'இன்' சாரியையிலுள்ள னகரம் றகரமாதலும் உண்டு.

**(எ-கா)** பத்து+இன் +உழக்கு – பதிற்றுழக்கு

**வற்றுச் சாரியையின் முதல் திரிதல்**

**"வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்**

**அஃகான் நிற்றல் ஆகிய பண்பே".**

சுட்டு முதலாகிய 'ஐ' முன்னர் 'வற்று' முதல் மெய் கெட்டு அற்று ஆவது அதன் இயல்பாகும்.

**(எ-கா)** அவையற்றை, இவையற்றை, யற்றுக்கோடு.

**னுகர ஈற்றுச் சாரியை, ஆன் சாரியைகளது ஈறு திரிதல்**

**"னஃகான் றஃகான் நான்க னுருபிற்கு".**

நான்கன் உருபு (கு) வருமிடத்தில் னகர ஈற்றுச் சாரியை றகரமாகும்.

**(எ-கா)** விளவிற்கு, ஒருபாற்கு, அதற்கு

**"ஆனின் னகரமும் அதனோ ரற்றே**

**நாள்முன் வரூஉம் வல்முதற் றொழிற்கே".**

நாள் பெயர் (நட்சத்திரம்) முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாகவுடைய வினைச் சொல்லுக்கு இடையே வரும் 'ஆன்' சாரியையின் னகரம் றகரமாக வரும்.

**(எ-கா)** பரணியாற் கொண்டான்

**அத்து சாரியை அகரம், இக்குச் சாரியை இகரம் கெடுதல்**

**"அத்தின் அகரம் அகரமுனை யில்லை".**

அத்துச் சாரியையின் அகரம் அகரவீற்றுச் சொல் முன்னர் இல்லையாம்.

**(எ-கா)** மகம் +அத்து+கை - மகத்துக்கை

**"இக்கின் இகரம் இகரமுனை யற்றே".**

இக்குச் சாரியையினது இகரம் இகரவீற்றுச் சொல் முன்னர் கெடும்.

**(எ-கா)** ஆடி+இக்கு+கொண்டான்ஸ்ரீஆடிக்குக்கொண்டான்

**ஐகார ஈற்றின் முன் இகரம் கெடுதல்**

**"ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்".**

ஐகார ஈற்றுச் சொல் முன்னரும் இக்கு, க்கு ஆகும்.

**(எ-கா)** சித்திரைக்குக் கொண்டான்

**அக்குச் சாரியை, அம்சாரியைகளது ஈறு திரிதல்**

**"எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி**

**அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே**

**குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது".**

எவ்வகைப்பட்ட பெயர் முன்னும் வல்லெழுத்து வருமிடத்து 'அக்கு' என்ற சாரியையில் 'அ' மட்டும் நிற்கும். 'க்கு' போய்விடும்.

**(எ-கா)** குன்று+அக்கு+குடி�ហ்ரீகுன்றக்குடி

மன்றம் +அக்கு+கூட்டம்ஹ்ரீமன்றக்கூட்டம்

**"அம்மின் இறுதி கசதக் காலைத்**

**தன்மெய் திரிந்து ஙஞந ஆகும்".**

அம்மின் இறுதியாகிய மகரவொற்று கசதக்கள் வருமொழியாக வந்த காலத்து தன் மெய் திரிந்து ங ஞ ந ஆகும்.

**(எ-கா)** புளி+அம் +கோடு=புளியங்கோடு

புளி+அம் +தோல்=புளியந்தோல்

**அம் சாரியை ஈறு இயல்பாகவும் இன்சாரியை முற்றும் கெடுதலும்**

**"இன்னென் வேண்டும் என்மனார் புலவர்".**

அம் சாரியையது இறுதி மெல்லெழுத்தும் இடையெழுத்தும் வருமொழி முதலாய் வருமிடத்து கெடும்.

**(எ-கா)** புளி+அம் +நுனி - புளியநுனி

**"இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்கு**

**இன்னென் சாரியை இன்மை வேண்டும்".**

இன் என்று வருகின்ற வேற்றுமை உருபிற்கு இன் என்னும் சாரியை வரும்.

**(எ-கா)** விளவின், பலாவின்

**'ஒடு' உருபு சாரியை பெறுதலும் பெறாமையும்**

**"பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப**
**வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும்**
**தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்**
**ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்**
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது**
**இடைநின்று இயலும் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்".**

பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பிரிந்து பிறகு ஒருங்கிணைத்து சொல்லப்படுமிடத்து, வேற்றுமை உருபு வெளிப்பட்டும், வெளிப்படத் தோன்றாது மறைந்தும் அச்சொற்கள் ஒட்டுதற்கு ஏற்பச் சாரியைகள் இடையில் வரும். சொற்களைப் பிரித்துக் காணுமிடத்து, தனிப் பொருளெதுவும் தராது. அவற்றிடையே வருவதே சாரியையது இயல்பாகும். 'ஒடு' உருபின்வழி சாரியை வருதலையும் வராமையும் அறியலாம்.

**அத்து, வற்றுச் சாரியைப் புணர்ச்சி**

**"அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்**
**ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே**
**அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே".**

அத்து, வற்றுச் சாரியைகள் வருமிடத்து, அவற்றுக்கு முன்னுள்ள மொழிகளிலுள்ள ஒற்றுத் தன் வடிவம் கெடும். அவ்விரு சாரியை முன்னர் வரும்.

**(எ-கா)** மடம் +அத்து+கேனி=மடத்துக்கேணி

கலம் +அத்து+குறை=கலத்துக்குறை

**எழுத்துச் சாரியைகள், நெட்டெழுத்துச் சாரியை**

**"காரமும் கரமும் கானொடு சிவணி**
**நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை".**

காரமும் கரமும் கானொடு பொருந்தி சாரியைகளாக இசைந்தொலிக்கும்.

**"அவற்றுள்**
**கரமும் கானும் நெட்டெழுத் திலவே".**

அவற்றுள் கரமும் கானும் நெட்டெழுத்தோடு இசைந்து வராது. காரம் மட்டுமே நெட்டெழுத்திற்கு உண்டு.

**(எ-கா)** ஆகாரம், ஈகாரம்

**குற்றெழுத்து சாரியை, ஐ ஔ சாரியை பெறும் முறை**

**"வரன்முறை மூன்றுங் குற்றெழுத்துடைய".**

வரன்முறைப்படுத்தப்பட்ட காரம், கரம், கான் மூன்றும் குற்றெழுத்துகட்கு பொருந்தி வரும்.

**(எ-கா)** அகாரம், அகரம், அஃகான்

**"ஐகார ஔகாரங் கானொடுந் தோன்றும்".**

ஐ, ஔ இரண்டும் கான் சாரியையும் பெறும்.

**(எ-கா)** ஐகான், ஔகான்

**உடல்மேல் உயிர்வந் தொன்றுதல், உயிர் பிரிந்த மெய்யின் இயல்பு**

**"புள்ளி யீற்றுமுன் உயிர்தனித் தியலாது**

**மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே".**

புள்ளியீற்றுச் சொல்முன் உயிர் தனித்து வராது. முன்னுள்ள மெய்யுடன் கூடி வரும்.

**(எ-கா)** ஆல் +அடை - ஆலடை

கடல் +அலை - கடலலை

**"மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும்".**

மெய் தன்னொடு கூடிய உயிர் புணர்ச்சியிடத்து நீங்கிய வழி தனக்குரிய புள்ளி வடிவம் பெறும்.

**(எ-கா)** அதன் +ஐ - அதனை

ஆல் +இலை – ஆலிலை

**உடம்படு மெய் தோன்றுதல்**

**"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே**

**உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்".**

எல்லா சொற்களும் உயிரீறுமுன் உயிர் முதன் மொழி வருமிடத்து இடையே அவற்றை உடம்படுத்தும் மெய் ஒன்று தோன்றவும் கூடும். ய, வ என்பன உடம்படுமெய். உடம்படுமெய் இன்றி வருதலும் உண்டு.

**(எ-கா)** கூலியாள் (கூலி+ய் +ஆள்)

மாவிலை (மா+வ் +இலை)

**ஓசை வேறுபாட்டால் புணர்ச்சி வேறுபடுதல்**

**"எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி**

**இசையின் திரிதல் நிலைஇய பண்பே".**

எழுத்துக்களால் ஒருதன்மைப்பட்ட பொருள் விளங்கி நிற்கும் புணர்மொழிகள், சொல்லுவானது சொல்லும் ஓசை வேற்றுமையால் பொருள் வேறுபடுதல் நிலையான பண்பாகும்.

**(எ-கா)** குன்றேறாமா

**புறனடை**

**"அவைதாம்**
**முன்னப் பொருள புணர்ச்சி வாயின்**
**இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே".**

அப்புணர்மொழிகள், எழுத்து முறைமையையுடையனவல்ல. குறிப்பினால் உணர வேண்டியன. 'அப்பாவைப் பார்' படிக்கும் போது அப் பாவைப் பார் என்பதும் இடம்நோக்கிக் குறிப்பால் உணர வேண்டியன. அப் பாவை பார் என்று புணர்ச்சி வேறுபாட்டால் வெளிப்படையாகவே பொருள் விளங்கும்.

**தொகை மரபு**

கசதபக்களின் முன்னர் மென்கணம் மிகுதல்

**"கசதப முதலிய மொழிமேல் தோன்றும்**
**மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்**
**ஙஞநம வென்னும் ஒற்றா கும்மே**
**அன்ன மரபின் மொழிவயி னான".**

உயிர்மெய்யீற்று சொற்களுக்கு எதிரே க, ச, த, ப வல்லெழுத்து முதன்மொழிகள் வருமிடத்து அவற்றுக்கு முன் முறையே ங, ஞ, ந, ம எனும் மெல்லெழுத்துக்கள் மிகும்.

**(எ-கா)** தட+தோள் - தடந்தோள்

**வன்கணம் இருவழியும் இயல்பாதல், ஏலாத சில முடிபுகள்**

**"ஞநம யவெனும் முதலாகு மொழியும்**
**உயிர்முத லாகிய மொழியும் உளப்பட**
**அன்றி யனைத்தும் எல்லா வழியும்**
**நின்ற சொன்முன் இயல்பா கும்மே".**

இருபத்து நான்கு இறுதி எழுத்துக்களையும் உடைய நின்ற சொல் முன் வருமொழியாக உயிர் முதன்மொழியும் ஞ, ந, ம, வ, ய என்னும் மெய் முதல் மொழியும் வருமாயின் வேற்றுமை அல்வழி இரண்டிடத்தும் இயல்பாக வரும்.

**(எ-கா)** தமிழ் வளர்கிறது, முருகன் மலை.

**"அவற்றுள்**
**மெல்லெழுத் தியற்கை புறழினும் வரையார்**
**சொல்லிய தொடர்மொழி இறுதி யான".**

ஞ, ந, ம எனும் மெல்லெழுத்து முதன்மொழிகள் இயல்பாதலேயன்றி உறழ்ந்து முடியினும் அதை நீக்க மாட்டார். அவை இயல்பாயும் மிகுந்தும் முடியும்.

(எ-கா) கைந்நொடி, மெய்ஞ்ஞானம், மண்ஞாலம்

**யா, ஞா வினையில் ஒருதன்மையவாதல்**

**"ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்**
**வினையோ ரனைய என்மனார் புலவர்".**

ணன என்று சொல்லப்படும் புள்ளிகளின் முன் யாவும் ஞாவும் வினைச்சொற்கள் முதலாக நிற்குமிடத்தில் ஒரு தன்மையதாக வரும்.

**(எ-கா)** மண்யாத்த – மண்ஞாத்த

பொன்யாத்த – பொன்ஞாத்த

**ணகர னகர ஈறுகள் அல்வழியில் திரியாமை**

**"மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்**
**வருமொழி நின்ற ஆயிரு புள்ளியும்**
**வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே".**

மொழிமுதலாக வருமென்ற இருபத்து இரண்டு எழுத்துக்களை முதலாகக் கொண்ட சொற்கள் வருமொழியாக நிற்க நிலைமொழி இறுதியில் நிற்கும் (ண்,ன்) என்ற இரு மெய்களும் அல்வழியிடத்து திரியாமல் இயல்பாக நிற்கும்.

**(எ-கா)** மண்கடிது, மண் வலிது

பொன் சிறிது, பொன் வலிது.

**வேற்றுமையிலும் அல்வழியிலும் திரியா ஈறுகள்**

**"வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்தல்வழி**
**மேற்கூ றியற்கை யாவயி னான".**

முற்கூறிய ண், ன் இரண்டும் வேற்றுமையிலும் வருமொழி முதல் வல்லெழுத்தல்லாத இடத்தும் இயல்பாக வரும். வல்லெழுத்து வரின் திரியும்.

**(எ-கா)** மண் ஞாலம், பொன் விலை - இயல்பாதல்

மண் +துளை – மட்துளை – வல்லெழுத்து வந்ததால் திரிதல்

பொன் +குடம் - பொற்குடம் - வல்லெழுத்து வந்ததால் திரிதல்

**லகர னகர ஈற்றின் முன்னர்த் தகர நகரங்கள் திரிதல்**

**"லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்**

**தந எனவரிற் றனவா கும்மே".**

ல, ன முன் த, ந வரின் அவை ற, ன ஆகிவிடும்.

**(எ-கா)** கல் +தரை – கற்றரை

முன் +நிலை – முன்னிலை.

**ணகர ளகர ஈற்றின் முன்னர் டகர ணகரந் திரிதல்**

**"ணள வென் புள்ளிமுன் மனவெனத் தோன்றும்".**

ண, ள என்னும் புள்ளிகளின் முன்னர் த, ந வரின் முன்னின்ற ண, ள இரண்டும் முறையே ட, ண ஆகிவிடும்.

**(எ-கா)** மண் +தீது – மண்டீது

மண் +நன்று – மண்ணன்று

**முன்னிலை வினைச்சொல் புணர்ச்சி**

**"உயிரீறாகிய முன்னிலைக் கிளவியும்**
**புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்**
**இயல்பா குநவும் உறழ்பா குநவுமென்று**
**ஆயீ ரியல வல்லெழுத்து வரினே".**

உயிரீறாகிய முன்னிலை வினைச்சொற்களும் மெய்ஈறாகிய முன்னிலை வினைச்சொற்களும் வல்லெழுத்து முதல்மொழி வரின் இயல்பாகவும் சில இடங்களில் உறழ்ந்தும் வரும்.

**(எ-கா)** நட பையா, செவ்வாய் கண்ணே, வா கண்ணே

**சில ஈறுகட்கு ஏலாமை**

**"ஔவென வரூஉம் உயிரிறு சொல்லும்**
**ஞநமவ வென்னும் புள்ளி யிறுதியும்**
**குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட**
**முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே".**

ஔ உயிரீற்று முன்னிலை வினைச்சொல்லும் ஞ, ந, ம, வ மெய் ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் குற்றியலுகர ஈற்று முன்னிலை வினைச்சொல்லும் முற்கூறிய இயல்பு மிகுதலுண்டு என்பதாகும்.

**(எ-கா)** கௌவுகொற்றா, கௌவுக்கொற்றா

உரிஞ}கொற்றா, உரிஞ}க்கொற்றா

**உயர்திணைப்பெயர் நான்கு கணத்தும் இருவழியும் முடிதல்**

**"உயிரீ றாகிய உயர்திணைப் பெயரும்**
**புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்**
**எல்லா வழியும் இயல்பென மொழிய".**

உயிரீறாகிய உயர்திணைப் பெயர்களும் புள்ளி ஈறாகிய உயர்திணைப் பெயர்களும் நான்கு கணமும் வரின் அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா இடத்தும் இயல்பாகும் என்பர்.

**(எ-கா)** நம்பி எனவும், அவன் எனவும் நிறுத்தி அல்வழிக்கண் குறியன், சிறியன், தீயன், பெரியன் எனவும் வரும்.

**இகர ஈற்று உயர்திணைப் பெயர்மிக்க திரிபு பெறுதல்**

**"அவற்றுள்**
**இகர ஈற்றுப்பெயர் திரிபிட னுடைத்தே".**

உயர்திணைப் பெருள் 'இ' கர ஈற்றுப் பெயர்கள் இயல்பாகாமல் திரிந்து முடியும் இடங்களும் உண்டு.

**(எ-கா)** கண்ணகிக் கோயில், செட்டிக்குளம்.

**விரவுப்பெயர் இயல்பாதல்**

**"அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே".**

உயர்திணையோடு அஃறிணை விரவும் விரவுப்பெயர்கள் இயல்பாய் முடிவனவும் உண்டு.

**(எ-கா)** சாத்தன் குறியன், சாத்தன் குறிது, சாத்தான் கை எனவும் வரும்.

## மூன்றாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை திரிபுகள்

**"புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்**
**வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையான்**
**தம்மி னாகிய தொழிற்சொல் முன்வரின்**
**பொய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்**
**அம்முறை இரண்டும் உரியவை உளவே**
**வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்".**

புள்ளியிறுதிச் சொல்லும் உயிரிறுதிச்சொல்லும் வேற்றுமைப் புணர்ச்சியில் வரும் போது வல்லெழுத்து மிகுந்து வரும். எனினும் மூன்றாம் வேற்றுமை வினைச்சொற்கள் முன்வரின் இயல்பாகவும் உறழ்ந்தும் வரும்.

**(எ-கா)** பூதொடுத்த மாலை – பூத்தொடுத்த மாலை

வளிகோட்பட்டான் – வளிக்கோட்பட்டான்

**"மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்**
**இயற்கை இருங்கின் மிகற்கை தோன்றலும்**
**உயர்மிக வருவழி யுயிர்கெட வருதலும்**
**சாரியை யுள்வழிச் சாரியை கெடுதலும்**
**சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும்**
**சாரியை யியற்கை உறழத் தோன்றலும்**
**உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்**
**அஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலும்**
**மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்**
**அன்ன பிறிவுந் தன்னியல் மருங்கின்**
**மெய்பெறக் கிளர்ந்து பொருள்வரைந் திசைக்கும்**
**ஐகார வேற்றுமைத் திரிபென மொழிய".**

இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சிகள் பிற புணர்ச்சி விதிகளுக்கு மாறுபட வரும். ஐகார வேற்றுமைத் திரிபுகள் தனது இயல்பான தன்மையை எடுத்து விளக்கும். வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு வேறுபட்டு அமையும். அதாவது மெல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் வல்லெழுத்து தோன்றும். வல்லெழுத்து மிக வேண்டிய

இடத்தில் மெல்லெழுத்து தோன்றும் இயல்பாக வேண்டிய இடத்து மிகும். உயிர் தோன்ற வேண்டிய இடத்துக் கெடும். சாரியை உளதாக வேண்டிய இடத்து அது கெடும். சாரியை உள்ளவிடத்தில் அதனொடு உருபு தோன்றும். சாரியை பெறாதவிடத்தில் வருமொழி வல்லினம் உறழத் தோன்றுதலும் உயர்திணைப் பெயரில் தன்னுருபு விரிந்தே வருதலும் அஃறிணை விரவுப் பெயர்க்கும் அதே இயல்பு வருதலும் மெய் திரிய வேண்டிய இடத்து இயல்பாதலும் அத்தன்மைய பிறவும் அமையும்.

**(எ-கா)** கற்கண்டைத் தின்றான், கற்கண்டினைத் தின்றான்

கற்கண்டுத் தின்றான், கற்கண்டு தின்றான்

## இகர ஐகார ஈற்று அல்வழி முடியும், ஏழாம் வேற்றுமை முடிபும்

**"வேற்றுமை யல்வழி இ ஐ யென்னும்**
**ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைஇய**
**அவைதாம்**
**இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்**
**ஊறழா குநவும் என்மனார் புலவர்".**

அல்வழியில் இ, ஐ ஈற்றையுடைய பெயற்சொற்கள் இயல்பு, வல்லெழுத்து மிகுதல், உறழ்ச்சியாய் முடிவன என மூன்று வகையினை உடையது.

**(எ-கா)** பருத்தி சிறிது

பருத்திச் செடி
விலை சரிந்தது

**"சுட்டுமுத லாகிய இகர இறுதியும்**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்**
**சுட்டுச்சினை நீடிய ஐ யென் இறுதியும்**
**யாவென் வினாவின் ஐ யென் இறுதியும்**
**வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவும்**
**சொல்லிய மருங்கின் உளவென மொழிய".**

அ, இ, உ எனும் சுட்டெழுத்து முதலாகிய இகர இறுதி இடைச்சொற்களும் எகர வினா முதலாகிய இகர இறுதி இடைச்சொல்லும், சுட்டெழுத்து நீண்டு ஐ என் இறுதிபெற்ற சொல்லும் யா என்ற வினா ஐகார இறுதிச் சொல்லும் முற்கூறிய இகர ஐகார ஈற்றுப்புணர்ச்சிப்படி வல்லெழுத்து மிகுந்தும் உறழ்ந்தும் முடியும்.

**(எ-கா)** அதோளிக் கொண்டான்

ஆண்டைக் கொண்டான்

**நெடில்முன் ஒற்றும் குறில்முன் ஒற்றும்**

**"நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்**
**குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்**
**ஆறியத் தோன்றிய நெறியிய லென்ப".**

நெட்டெழுத்தின் முன் ஒற்றுத் தன் வடிவு கெடுதலும் குற்றெழுத்தின் முன் நின்ற மெய் இரட்டித்தலும் நன்கு அறியும்படி தோன்றிய மொழியது இயற்கை.

**(எ-கா)** கோறீது, கோனன்று – நெடியதன் முன் ஒற்று கெட்டது.

மண்ணகல், பொன்னகல் - குறியதன் முன் தன்னுருவு இரட்டின.

**குறியதன் முன்னர் ஒற்று இரட்டாமை**

**"ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
**கூறிய குற்றொற் றிரட்ட லில்லை**
**ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்**
**நெடுமுதல் குறுகு மொழிமுன் னான".**

நெட்டெழுத்துக் குறுகி நிற்கும் சொற்களின் இறுதி மெய் அகரம் பெற்று நிற்கும். இவற்றோடு இணையும் ஆறு நான்கு வேற்றுமை உருபிற்கு முன்னே குறில் ஒற்று இரட்டுவதில்லை.

**(எ-கா)** தமது, தமக்கு

நமது, நமக்கு

எல்லார் தமதும், எல்லார் தமக்கும் என வரும்.

**நும் இறுதி அற்று பெறுதல்**

**"நும்மென் இறுதியும் அந்நிலை திரியாது".**

நும் என்னும் மகரவிறுதி மேற்கூறிய அகரம் பெறுதல். குற்றொற்றிரட்டாமை என்ற நிலைகளை விட்டு மாறாது.

**(எ-கா)** நும் - அது – நுமது

நும் - கு – நுமக்கு

**"உகரமொடு புணரும் புள்ளி யிறுதி**
**யகரமும் உயிரும் வருவழி இயற்கை".**

உகரப் பேற்றொடு புணரும் புள்ளியிறுதிகள் யகரமும் உயிரும் வரும்போது உகரம் பெறாது இயல்பாக வரும்.

**(எ-கா)** உரிஞ்யாது, பொருந்யானா

**அளவு நிறைப் பெயர்கள் புணர்தல்**

**"உயிரும் புள்ளியும் இறுதி யாகி**
**அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**
**தத்தங் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வரூஉங் காலந் தோன்றின்**
**ஒத்த தென்ப ஏயென் சாரியை".**

உயிரும் மெய்யும் ஈறாகி அமையும் முகத்தல், நிறுத்தல், எண்ணல் அளவைச் சுட்டும் எல்லாச் சொற்களும் தமக்கு இனமாகிய சொற்கள் தம் முன் தாம் வருமானால் 'ஏ' என் சாரியை சேர்த்து சொல்லுவதே பொருத்தமாகும்.

**(எ-கா)** ஒன்றேகால் படி, இரண்டேகால் கிலோ கொடு.

**அரை ஏகாரச் சாரியை பெறாமை**

**"அரையென வரூஉம் பால்வரை கிளவிக்குப்**
**புரைவ தன்றால் சாரியை யியற்கை".**

'அரை' என்ற பாதியை குறிக்கும் சொல்லுக்கு 'ஏ' என் சாரியை பொருந்துவதன்று.

**(எ-கா)** ஒன்றரை, ஏழரைப்படி

**குறை மொழி வேற்றுமை பெறுதல்**

**"குறையென் கிளவி முன்வரு காலை**
**நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை".**

குறை என்பதும் அளவு அச்சொல் வருமொழியாக வரும்போது வேற்றுமைப் புணர்ச்சிக்குக் கூறிய இலக்கணத்தைப் பெற்று வரும்.

**(எ-கா)** உரிக்குறை, நிதிக்குறை, எடைக்குறை.

**குற்றியலகரம் 'இன்' சாரியை பெறுதல்**

**"குற்றிய லுகரக் கின்னே சாரியை".**

குற்றியலுகர அளவுப் பெயர்களுடன் குறைச்சொல் சேரும்போது இடையே 'இன்' சாரியை வரும்.

**(எ-கா)** உழக்கின் குறை, ஒன்றின் குறை

**கலம் அத்துச் சாரியை பெறுதல்**

**"அத்திடை வரூஉங் கலமென் அளவே".**

கலம் என்னும் முகத்தல் அளவுப்பெயர் "குறை"யொடு புணருமிடத்தில் இடையே 'அத்துச்'சாரியை வரும்.

**(எ-கா)** கலத்துக்குறை

**பனை, கா இன் சாரியை பெறுதல்**

**"பனையென் அளவுங் காவென் நிறையும்**
**நினையுங் காலை இன்னொரு சிவனும்".**

புனை என்னும் அளவுப் பெயரும் கா என்னும் நிறைப் பெயரும் குறை என்பதனோடு பொருந்துமிடத்து இன் சாரியை வரும்.

**(எ-கா)** பனையின் குறை, காவின் குறை.

**அளவுப் பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் முதலெழுத்துக்கள்**

**"அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி**
**ஊளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே**
**அவைதாம்**
**கசதப என்றா நமவ என்றா**
**அகர உகரமோ மலையென மொழிப".**

முகத்தலளவை நிறுத்தலளவை பெயர்கட்கு, மொழி முதலாக வரும் எழுத்துக்கள் ஒன்பது. அவை க, ச, த, ப, ம, வ, அ, உ.

**(எ-கா)** கலம், சாடி, வட்டில், உழக்கு – முகத்தல் அளவைப் பெயர்கள்

தொடி, நிறை, மாவரை, இம்மி – நிறுத்தலளவை பெயர்கள்

**புறனடை**

**"ஈறியல் மருங்கின் இவை இவற்றியல்பெனக்**
**கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்**
**மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி**
**ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே".**

உயிர், மெய் ஈறுகள் வருமொழியோடு புணரும் போது இவ்விவ்வாறு புணரும் என இதுவரை பற்பல நெறிமுறைகள் சொல்லப்பட்டன. அந்நெறி முறைகளைக் கொண்டு உலகில் நடக்கும் வழக்குகளோடு சார்த்திப் புணர்மொழிகளைப் பொருத்திக் கொள்ள வேண்டும்.

**யாவர், யாது மரூஉ முடிபு**

**"பலரறி சொல்முன் யாவர் என்னும்**
**பெயரிடை வகரம் கெடுதலும் ஏனை**
**ஒன்றறி சொல்முன் யாதென் வினாவிடை**
**ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே".**

உயர்திணையில் பலரை வினவி அறியும் யாவர் என்னும் பெயரினிடையே 'வ' கெடும். வினாப் பெயரிடையே வகரம் வரும் போது கெடுதல் இல்லை.

**(எ-கா)** யாவர் - யார் - வகரம் கெடுதல்

யாது – யாவது – வகரம் கெடவில்லை.

# அலகு - 3

## உருபியல்

**அ, ஆ முதலிய ஈறுகள் உருபினொடு புணர்தல்**

**"அஆ உஊ ஏஔ என்னும்**
**அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்**
**வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை".**

அ, ஆ, உ, ஊ, ஏ, ஔ என்னும் ஆறனையும் ஈறாகவுடைய நிலைமொழிமுன் வரும் வேற்றுமை அருபுகட்கு 'இன்' சாரியை அமையும்.

**(எ-கா)** பலாவினை, கதவினுக்கு

**அகர ஈற்றுப் பெயர்கள் வற்றொடு பொருந்துதல்**

**"பல்லவை நுதலிய அகர இறுபெயர்**
**வற்றொடு சிவணல் எச்ச மின்றே".**

பல்ல சில்ல என்னும் பன்மைப் பொருட்பெயர்களின் இறுதி அகரம் வற்றுச்சாரியையோடு பொருந்தி வரும்.

**(எ-கா)** பலவற்றை, கண்டவற்றை

**யா என் வினாவும் அற்றாதல்**

**"யாவென் வினாவும் ஆயியல் திரியாது".**

யா என்னும் வினாப்பெயரும் மேற்கூறிய வற்றுச் சாரியை பெறும்.

**(எ-கா)** யாவற்றை.

**சுட்டு முதல் உகரம் உருபொடு புணர்தல்**

**"சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி**
**ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே".**

சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச் சொல் அன்சாரியையொடு பொருந்தி மெய் இருக்க உகரம் கெடும்.

**(எ-கா)** அதனை, அதனொடு

இதனை, இதனொடு

ஊதனை, உதனொடு

**சுட்டு முதல் ஐகாரம் வற்றுப் பெறுதல்**

**"சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி**

**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே".**

சுட்டு ஐகார ஈற்றுச்சொல்(அவை) உருபு சேரும் போது வற்றுச் சாரியை பொருந்தி, அவ்விறுதி ஐகாரம் நிற்றலும் நில்லாமையும் உண்டு. ஐகாரம் கெட்டவழி நின்ற வகரத்தினை அவற்றை இவற்றை உவற்றை என்ற கூறுதல் வேண்டும்.

**(எ-கா)** அவையற்றை, அவையற்றையொடு

இவையற்றை, இவையற்றையோடு

உவையற்றை, உவையற்றையோடு.

**யா வினாவின் ஐகார இறுதியும் வற்றுப் பெறுதல்**

**"யாவென் வினாவின் ஐயென் இறுதியும்**

**ஆயியல் திரியா தென்மனார் புலவர்**

**ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே".**

யாவை என்னும் வினாவின் ஐகார இறுதியும் மேற்கூறிய இயல்பில் திரியாது 'வற்று'ச் சாரியை பெறும். அப்போது வகரம் ஐகாரத்தோடும் கெடும்.

**(எ-கா)** யாவற்றை, யாவற்றொடு

**நீ நெடு முதல் குறுகுதல்**

**"நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**

**ஆவயின் னகரம் ஒற்றா கும்மே".**

நீ என்னும் ஒரு பெயரில் நெடில் குறுகிய னகர ஒற்று இடம்பெறும்.

**(எ-கா)** நின்னை, நின்னோடு

**ஓகார இறுதிக்கு ஒன் சாரியை பெறுதல்**

**"ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை".**

**ஓகார ஈற்றிற்கு இடையில் 'ஒன்' சாரியை வரும்.**

**(எ-கா)** கோஒனை, கோஒனொடு

**அஆ ஈற்று மரப்பெயர் ஏழனுருபொடு புணர்தல்**

**"அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்(கு)**

**அத்தொடுஞ் சிவணும் ஏழன் உருபே".**

அஆ என்று சொல்லப்படும் மரத்தை உணரநின்ற சொற்களுடன் ஏழாம் உருபு சேரும் போது முற்கூறிய 'இன்' னோடு மட்டுமல்லாமல் அத்தும் பொருந்தும்.

**(எ-கா)** விளவத்துக்கண், பலாவத்துக்கண்

**ஞகர நகரப் புள்ளியிறுதி இன்சாரியை பெறுதல்**

**"ஞநஎன் புள்ளிக்கு இன்னே சாரியை".**

ஞ, ந என்று சொல்லப்படுகின்ற புள்ளி ஈறுகட்கு இன்சாரியை வரும்.

**(எ-கா)** உரிஞினை, உரிஞினொடு

பொருநினை, பொருநினோடு

**சுட்டுமுதல் வகர ஈறு மூன்றும் வற்றுப் பெறுதல்**

**"சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்**

**கெட்ட இறுதி யியல்திரி பின்றே".**

சுட்டெழுத்தினை முதலாகவுடைய வகரவீற்றுச்சொல் ஐகாரமும் அதனாற் பற்றப்பட்ட மெய்யும் கெட்டு வற்றுப் பெற்று முடியும்.

**(எ-கா)** அவற்றை, அவற்றொடு

இவற்றை, இவற்றொடு

உவற்றை, உவற்றொடு

**ஏனை வகரம் இன் பெறுதல், மகர இறுதி அத்துச் சாரியை பெறுதல்**

**"ஏனை வகரம் இன்னொடு சிவணும்".**

ஏனைய வகர ஈறு தெவ் இன்சாரியை பொருந்தும்.

**(எ-கா)** தெவ்வினை, தெவ்வினையொடு

**"மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை".**

முகரமாகிய புள்ளியீற்றுச் சொல்முன் அத்துச் சாரியை வரும்.

**(எ-கா)** மரத்தை, மரத்தொடு

## மகரவீற்றுச் சில பெயர் இன்சாரியை பெற்று முடிதல்

**"இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே".**

மகரவீறு அத்துச்சாரியைத் தவிர இன்சாரியைகள் இடைவர முடியும்.

**(எ-கா)** உருமினை, உருமினோடு

## நும் ஈறு உருபொடு முடிதல், தாம், நாம், யாம், உருபொடு புணர்தல்

**"நும்மென் இறுதி இயற்கை யாகும்".**

நும் என்னும் மகரவீறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறாது இயல்பாய் முடியும்.

**(எ-கா)** நும்மை, நும்மொடு

**"தாம்நாம் என்னு மகர இறுதியும்**
**யாமென் இறுதியும் அதனோ ரன்ன**
**ஆஎ ஆகும் யாமென் இறுதி**
**ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்**
**ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும்".**

தாம் நாம் என்னும் மகர ஈறும் யாம் என்னும் மகர இறுதியும் அத்தும் இன்னும் சாரியை பெறாது முடியும். 'யாம்' என்னும் மொழியில் ஆகாரம் ஏகாரமாகி யகர மெய் கெட்டு 'எம்' என நிற்கும். ஏனைய இரண்டும் நெடில் முதல் இறுகித் தம் நம் ஆகும்.

**(எ-கா)** தம்மை, தம்மொடு

நம்மை, நம்மொடு

எம்மை, எம்மொடு

## எல்லாம் உருபொடு புணர்தல் மற்றும் உயர்திணையில் நம் பெறுதல்

**"எல்லா மென்னும் இறுதிமுன்னர்**
**வற்றென் சாரியை முற்றத் தோன்றும்**
**உம்மை நிலையும் இறுதி யான".**

'எல்லாம்' என்னும் மகரவீற்றுச் சொல் முன் வற்றுச் சாரியை தோன்றி உம் சாரியை இறுதியில் நிலைபெறும்.

**(எ-கா)** எல்லாவற்றையும், எல்லாவற்றொடும்

**"உயர்திணை யாயின் நம்மிடை வருமே".**

எல்லாம் என்னும் விரவுப்பெயர் உயர்திணையைக் குறிக்குமிடத்து நம் சாரியை பெறும்.

**(எ-கா)** எல்லா நம்மையும், எல்லா நம்மொடும்.

**எல்லாரும், எல்லீரும் என்பன உருபொடு புணர்தல்**

> **"எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்**
> **எல்லீரு மென்னு முன்னிலை யிறுதியும்**
> **ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப**
> **நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி**
> **உம்மை நிலையும் இறுதி யான**
> **தம்மிடை வரூஉம் படர்க்கை மேன**
> **நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே".**

உருபு சேரும்போது எல்லாரும் என்னும் படர்க்கை மகர இறுதியும், எல்லீரும் என்னும் முன்னிலை மகர இறுதியும் தம் முன்னுள்ள உகரத்தோடும் கெடும். ரகரப் புள்ளி நிற்க 'உம்' சாரியை இறுதியில் நிலைபெறும். படர்க்கையில் 'தம்' சாரியையும் முன்னிலையில் நும் சாரியையும் இடையில் வரும்.

**(எ-கா)** எல்லார் தம்மையும், எல்லார் தம்மொடும்

எல்லீர் நும்மையும், எல்லார் நும்மொடும்.

**தான் யான் - உருபொடு புணர்தல்**

> **"தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்**
> **மேன்முப் பெயரொடும் வேறுபா டிலவே"**

தான், யான் என்னும் இரண்டு 'ணகர' ஈறும் மேல் மகரவீற்றுள் சொல்லப்பட்ட மூன்று பெயரொடும் கெட்டு முடியும்.

**(எ-கா)** தன்னை, தன்னொடு

என்னை, என்னொடு

**அழன், புழன் - உருபொடு புணர்தல்**

> **"அழனே புழனே ஆயிரு மொழிக்கும்**
> **அத்தும் இன்னும் உறழத் தோன்றல்**
> **ஒத்த தென்ப உணரு மோரே".**

அழன், புழன் இரு மொழிக்கும் அத்துச்சாரியையும், இன்சாரியையும் உறழ்ந்து தோன்றும்.

**(எ-கா)** அழத்தை, அழத்தொடு, அழனினை, அழனினொடு

புழத்தை, புழத்தொடு, புழனினை, புழனினொடு

**ஏழ் 'அன்' சாரியையும் குற்றியலுகரம் 'இன்' சாரியையும் பெறுதல்**

**"அன்னென் சாரியை ஏழன் இறுதி**

**முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப".**

அன் என்னும் சாரியை ஏழென்னும் சொல்லிறுதியின் முன்னே தோன்றும் இயல்புடையதென்று சொல்லுவர்.

**(எ-கா)** ஏழனை, ஏழனொடு

**"குற்றிய லுகரத் திறுதி முன்னர்**

**முற்றத் தோன்றும் இன்னென் சாரியை".**

குற்றியலுகரத்து இறுதிக்கு முன்னர் 'இன்' சாரியை தோன்றும்.

**(எ-கா)** வரகினை, வரகினொடு

நாகினை, நாகினொடு.

**ட, ற ஒற்று இரட்டுதல், யாண்டு இன் சாரியை பெறாமை**

**"நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்**

**அப்பான் மொழிகள் அல்வழி யான".**

டு, று ஈற்று நெடில் தொடர் குற்றுகரங்கள் ஒற்று இரட்டித்து வேற்றுமை உருபேற்கும். கு, சு, து, பு ஈற்று குற்றுகரங்கள் உருபேற்கும் போது இரட்டிப்பதில்லை.

**(எ-கா)** நாடு+ஐஸ் - நாட்டை

ஆறு+ஒடு - ஆற்றோடு

**"அவைதாம்**

**இயற்கைய வாகுஞ் செயற்கைய என்ப".**

அவை சாரியை பெறாது இயற்கையாக முடியும். சுpல சொற்கள் சாரியை பெற்று வருதலுமுண்டு.

**(எ-கா)** நாட்டை - இயல்பாக வருதல்

நாட்டினை – சாரியை பெற்று வருதல்

**எண்ணுப்பெயர் 'அன்' சாரியை பெறுதல்**

**"எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்".**

எண்ணுப் பெயர்களது குற்றுகர ஈறு அன் சாரியை பெறும்.

**(எ-கா)** ஒன்றனை, இரண்டனை

**ஒருபஃது முதலியன ஒருபான் முதலிய ஆதல்**

**"ஒன்று முதலாகப் பத்தூர்ந்து வரூஉம்**
**எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை**
**ஆனிடை வரினு மான மில்லை**
**அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே**
**உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே".**

ஒன்று முதல் எட்டு வரையுள்ள எண்ணுப் பெயர்களை, பத்து என்னும் சொல் தொடர்ந்து வருவதுண்டு. ஒருபஃது, இருபஃது இதில் அஃது கெட்டு ஒருப் என்று நின்று ஆன் சாரியை சேரும்.

**(எ-கா)** ஒரு பானை, இரு பானை

**யாது, ஆய்தம் 'அன்' சாரியை பெறுதல்**

**"யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய**
**ஆய்த இறுதியும் அன்னொடு சிவணும்**
**ஆய்தங் கெடுதல் ஆவயி னான".**

யாது என வரும் குற்றுகர ஈறும் சுட்டெழுத்தை முதலாகவுடைய ஆய்தத் தொடர் குற்றுகர இறுதியும் அன் சாரியையொடு பொருந்தும். அதில் ஆய்தம் கெடும்.

**(எ-கா)** யாதனை, யாதனொடு

அதனை, அதனொடு

**திசைப்பெயரோடு ஏழனுருபு புணர்தல்**

**"ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்**
**சாரியைக் கிளவி இயற்கையு மாகும்**
**ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடுமே".**

ஏழாம் வேற்றுமை உருபிற்கு (கண்) திசைப் பெயர்களின் முன்னர் இன் சாரியையின்றி இயல்பாகவும் முடியும். இயல்பாகும் வழி திசைப்பெயர் இறுதியில் குற்றுகரம் மெய்யொடும் கெடும்.

**(எ-கா)** வடக்கு+இன் +கண் - வடக்கின்கண்

தெற்கு+கண் = தெற்கண்

**புறனடை**

**"புள்ளி இறுதியும் உயிரிறு கிளவியும்**
**சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்**
**தேருங் காலை உருபொடு சிவணிச்**
**சாரியை நிலையும்"**

புள்ளி ஈறு உயிரீற்றுச் சொற்களுள் முன்பு கூறாத எல்லாம் ஆராயும் பொழுது அவை வேற்றுமை உருபுகளுடன் பொருந்தி வரும் பொழுது சாரியை பெற்றும் பெறாமலும் வரும்.

கூறாத புள்ளிகள் ஐந்து: ண, ய, ர, ல, ள உயிரீறு ஒன்று இ. மண்ணை, மண்ணினை இவையும் சாரியை பெறாதும் பெற்றும் வரும்.

## உயிர் மயங்கியல்

**அகர ஈறு**

### அல்வழியில் அகர ஈற்றுப் பெயர்ப் புணர்ச்சி

**"அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்**
**தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே".**

அகர இறுதிப் பெயர்கள் நிலைமொழியாய் நிற்க அவற்றின் முன் அல்வழிப் புணர்ச்சியில் கசதப முதலெழுத்துச் சொற்கள் வரின் அக் கசதப க்களாகிய ஒற்று இடையில் மிகும். மெல்லினம் மிகுதலும் உண்டு.

**(எ-கா)**தடக்கை, இரப்பொழுது

### அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

அகரவீற்று வினையெச்சச் சொல்லும் உவமச் சொல்லும் 'என' என்னும் எச்சச் சொல்லும் சுட்டாகிய அகர ஈறும் உரையசைக் கிளவியாகிய ஆங்க என்பதும் ஆகிய இடங்களில் முற்கூறிய வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** பூப்போலச் சிரித்தாள், அமுதெனப் பேசினாள்

**அகரச் சுட்டு மென்கணத்தொடு புணர்தல்**

**"சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்**

**ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்".**

சுட்டெழுத்தாகிய அகரத்தின் முன்னர் ஞ ந ம வருமொழியாக வந்தால், பொருந்திய ஒற்று இடையே மிகும்.

**(எ-கா)** அஞ்ஞாலம், அந்நூல்

**அகரச் சுட்டின் முன் யவமெய்**

**"யவமுன் வரினே வகரம் ஒற்றும்".**

அகரச்சுட்டு நிற்க, வருமொழி முதலில் ய வ வரின் இடையே வகர ஒற்று மிகும்.

**(எ-கா)** அவ்யாழ், அவ்வளை

**அகரச்சுட்டின் முன் உயிர் மற்றும் அகரச் சுட்டு செய்யுளுள் நீளுதல்**

**"உயிர்முன் வரினும்" ஆயியல் திரியாது".**

அகரச் சுட்டின் முன் உயிரெழுத்து வரினும் முற்கூறிய வகர ஒற்று மிகும்.

**(எ-கா)** அவ்வணி, அவ்விலக்கணம்

**"நீட வருதல் செய்யுளுள் உரித்தே".**

செய்யுளில் அகரச்சுட்டு நீண்டு வரும்.

**(எ-கா)** ஆயிடை, ஆயிரு

**சாவ என்னும் அகரஈற்றுச் சொல்**

**"சாவ என்னும் செயவென் எச்சத்து**

**இறுதி வகரம் கெடுதலும் உரித்தே".**

'சவ' என்னும் செய வாய்ப்பாட்டு வினை எச்சத்தின் இறுதி வகரம் கெட்டுப் போதலும் கெடாது நிற்றலும் உண்டு.

**(எ-கா)** சாக்குத்தினான் - வகரம் கெடுதல்

சாவக் குத்தினான் - வகரம் கெடவில்ல்ல்

**அகர ஈறு இயல்பாய் முடிதல்**

**"அன்ன என்னும் உவமக் கிளவியும்**
**அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும்**
**செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்**
**ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்**
**செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும்**
**செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்**
**பலவற் றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிய".**

அன்ன என்பது அண்மையில் உள்ளாரை அழைக்கும் பெயர்ச்சொல். செய்மன வாய்ப்பாட்டு வினைமுற்றுச் சொல், வியங்கோட் சொல், செய்த என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சச் சொல், 'அம்ம' என்னும் இடைச்சொல் பல என்னும் பெயர்ச்சொல் ஆகியவை அனைத்தும் எதிரே க ச த ப க்கள் வரின் இயல்பாகப் புணரும்.

**(எ-கா)** பொன் அன்ன குதிரை
செந்நாய்
காணிய சென்றேன்

**வாழிய என்னும் அகர ஈறு**

**"வாழிய என்னும் செயஎன் கிளவி**
**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே"**

'செய' வாய்ப்பாட்டு வாழிய வியங்கோள் வினைமுற்று இறுதி யகரம் கெட்டு முடிதலும் உண்டு. கெடாது முடிதலும் உண்டு.

**(எ-கா)** வாழி தமிழ்
வாழிய தமிழ்

**அம்ம இறுதி அகரம் நீடல், பல சில செய்யுள் முடிபு**

**"உரைபொருட் கிளவி நீட்டமும் வரையார்".**

'அம்ம' என்னும் சொல் 'அம்மா' என நீளுதலும் உண்டு.

**(எ-கா)** அம்ம கேள், அம்மா கேளாய்.

**"பலவற்றி றுதி நீடுமொழி உளவே**
**செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான".**

பல சில என்னும் சொற்களினிறுதி செய்யுளுள் வரும் போது நீண்டு நிற்றலும் உண்டு.

**(எ-கா)** பலாஅஞ், சிலாஅ மென்மனார் புலவர்

**பல, சில – தம்முன் தாம் புணர்தல்**

**"தொடரல் இறுதித் தம்முன் தாம்வரின்**

**லகரம் றகரவொற் றாதலு முரித்தே".**

தொடர்மொழி அல்லாத ஈரெழுத்தொரு மொழியாகிய பல சில என்னும் அகர ஈற்றுச் சொற்கள் தம்முன்னே தாம் வரின் லகரம் றகரமாதலும் உண்டு.

**(எ-கா)** பல+பல=பற்பல

சில+சில =சிற்சில

**பல, சில வல்லெழுத்து விகற்பமாதல்**

**"வல்லெழுத் தியற்கை உளழத் தோன்றும்".**

மேற்கூறிய பல சில என்னும் இரண்டிற்கும் வல்லெழுத்து மிகுந்தும் மிகாமையுமாகி உறழ்ந்தும் தோன்றும்.

**(எ-கா)** பலப்பல, பலபல

சிலச்சில, சிலசில

**அகர ஈற்றுப்பெயர் முன் வன்கணம் வேற்றுமையிற் புணர்தல்**

**"வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே".**

அல்வழியில் அகரவீற்றுப் பெயர்கள் எதிரே கசதப வரின் ஒற்று மிகும் என்பது போல இங்கு வேற்றுமையிலும் ஒற்று மிகும்.

**(எ-கா)** மலம்பட்டி, மலப்பட்டி

**அகரவீற்று மரப்பெயர் முன் மென்கணம் மிகுதல்**

**"மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே".**

அகர ஈற்று மரப்பெயர்ச் சொல்லுக்கு மெல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** விளங்கோடு, அதங்கோடு

**மக 'இன்' சாரியையும் 'அத்து'ச் சாரியையும் பெறுதல்**

**"மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை".**

மக – பெயர்ச் சொல்லுக்கு வேற்றுமையின் இன் சாரியை வரும்.

**(எ-கா)** மகவின் கை

**"அத்து அவண் வரினும் வரைநிலை இன்றே".**

மக –வுக்கு அத்தும் சாரியையாக வரும்.

**(எ-கா)** மகத்துக்கை

**பல 'வற்று'ச் சாரியை பெறுதல்**

**"பல வற்றிறுதி உருபியல் நிலையும்".**

'பல' அகர ஈற்றுச்சொல் கசதப க்களோடு சேரும் போது உருபொடு புணரும் முறைப்படி இடையே வற்றுப் பெறும்.

**(எ-கா)** பலவற்றுக்கோடு

## ஆகார ஈறு

**அல்வழியில் ஆகார ஈற்றுப் புணர்ச்சி**

**"ஆகார இறுதி அகர இயற்றே"**

ஆகார ஈற்றுப் பெயர்கள் அகர ஈற்றுக்குக் கூறியபடி புணரும். அல்வழியின் கண் க ச த ப வரின் வல்லெழுத்து பெற்று முடியும்.

**(எ-கா)** தாராக்கடிது, பலாப்பெரிது

**செய்யா என்னும் ஆகார ஈற்று வினையெச்சம்**

**"செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்**

**அவ்வியல் திரியாது என்மனார் புலவர்".**

செய்யா வாய்ப்பாட்டு வினை எச்சச் சொல்லும், வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** காணாக் கண்கள், உண்ணாக் கொண்டான்

**ஆகார ஈற்று உம்மைத் தொகைப் புணர்ச்சி**

**"உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி**

**மெய்ம்மை யாக அகரம் மிகுமே".**

உம்மை தொக்க இருபெயர்த் தொகை சொற்களில், ஓர் அகரம் நிலைமொழி ஈற்றில் மிகும்.

**(எ-கா)** உவாஅப் பதினான்கு

## ஆகார ஈறு இயல்பாய் முடிதல்

**"ஆவு மாவும் விளிப்பெயர்க் கிளவியும்**
**யாவென் வினாவும் பலவற் றிறுதியும்**
**ஏவல் குறித்த உரையசை மியாவும்**
**தன்தொழில் உரைக்கும் வினாவின் கிளவியோடு**
**அன்றி அனைத்தும் இயல்பென மொழிப".**

ஆ, மா பெயர்களும் விளிப்பெயரும் யா வினாப் பெயரும் ஆகார ஈற்று எதிர்மறை வினைமுற்றும் மியா ஆகார ஈற்று இடைச் சொல்லும் தனது செயலைக் குறிக்கும் ஆகார ஈற்று வினாச்சொல்லும் இயல்பாய் முடியும்.

**(எ-கா)** ஆ அழைக்கிறது, மா செல்கிறது

யானா கேட்டேன்

## ஆகார ஈற்றுப்பெயர் வேற்றுமையிற் புணர்தல்

**"வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே".**

ஆகார ஈற்றுப்பெயர்கள் அல்வழியில் மட்டுமல்லாமல் வேற்றுமையிலும் வல்லெழுத்துக்கள் வந்தவழி அகர ஈற்று அல்வழி போல ஒரு தன்மைத்தாம் வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** தாராப்பறவை, பலாப்பழம்

## ஆகார ஈற்றுடன் அகர எழுத்துப்பேறு தோன்றுதல்

**"குறியதன் முன்னரும் ஓரெழுத்து மொழிக்கும்**
**அறியத் தோன்றும் அகரக் கிளவி"**

குற்றெழுத்தின் முன்னிற்கும் ஆகார ஈற்றுச் சொல்லுக்கும் ஓரெழுத்து வருமொழி ஆகார ஈற்றுச் சொல்லுக்கும் இடையே அகரம் தோன்றும்.

**(எ-கா)** பலாஅக்கோடு

காஅக்குறை

**இரா வேற்றுமையின் அகரம் பெறாமை**

**"இராவென் கிளவிக் ககர மில்லை".**

இரா என்னும் அகரவீற்றுச் சொல்லிற்கு முன் கூறிய அகரப்பேறு இல்லை.

**(எ-கா)** இராக்கொண்டான்

**நிலா அத்துச் சாரியை பெறுதல்**

**"நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்"**

நிலா என்னும் சொல் அத்துச்சாரியையோடு பொருந்தி முடியும்.

**(எ-கா)** நிலாஅத்துக் கொண்டான்

**யா – பிடா – தளா மென்கணம் மிகுதல்**

**"யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்**
**ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே".**

யா என்னும் மரத்தை உணர்த்த நின்ற சொல்லும் பிடா என்னும் சொல்லும் தளா என்னும் சொல்லுமாகிய அம்மூன்று மரப்பெயர்களும் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** யாஅங்கோடு, பிடாஅங்கோடு, தளாஅங்கோடு, யாமரக்கிளை.

**மா மரப்பெயரும் மா விலங்கும் ஆவும்**

**"மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன**
**அகரம் வல்லெழுத் தலையவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும்".**

மா மரப்பெயர்ச் சொல்லும் ஆ, மா என்னும் விலங்குப் பெயர்களும் முற்கூறிய ஓரெழுத்து மொழி யா மரச்சொல் முதலியவற்றோடு ஒத்த தன்மையவாகி மெல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** மாஅங்கிளை, ஆன்கொம்பு

**ஆ னகர ஒற்றோடு இயைதல், ஈகார பகரம் புணர்தல்**

**"ஆனொற் றகரமொடு நிலையின் உடைத்தே".**

ஆ னகர ஒற்றாகிய சாரியையுடன், ஓர் அகரம் சேர்ந்து நிற்கும் இடமும் உண்டு.(ஆன் 'ஆண' ஆகும்)

**(எ-கா)** ஆன நெய்

**"ஆன்முன் வரூஉம் ஈகாரப் பகரம்**

**தான்மிகத் தோன்றிக் குறுகலு முரித்தே".**

ஆன் என்ற னகரச் சாரியை பெற்ற சொல் முன் வரும் பகரஈகாரமாகிய இடக்கார்ச்சொல், தான் தன் ஒற்று மிகுந்து, அதிலுள்ள ஈகாரம் இகர மாதலுமுண்டு.

**(எ-கா)** ஆப்பி, ஆப்பீ

### ஆகார ஈறு செய்யுளில் முடிதல்

**"குறியதன் இறுதிச் சினைகெட உகரம்**

**அறிய வருதல் செய்யுளுள் உரித்தே".**

குறியதன் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது சினையாகிய அகாரம் மாத்திரை கெட உகரம் செய்யுளில் அமைந்து நிற்கும்.

## இகர ஈறு

### இகர ஈற்றுப் பெயர் வேற்றுமையில் புணர்தல்

**"இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்**

**வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே".**

இகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் முன் கசதப வரின் வேற்றுமையில் வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** கிளிச்சிறகு, கிளிக்கால்

### இகர ஈற்றுப் புணர்ச்சியில் வன்கணம் மிகுதல்

**"இனிஅணி என்னுங் காலையும் இடனும்**

**வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டும் அன்ன".**

இனி, அணி என்னும் காலமும் இடமும் உணர்த்தும் சொற்களும் இகர ஈற்று வினையெச்சச் சொல்லும் இகரச் சுட்டிடைச் சொல்லும் மேற்கூறியவாறு வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** இனிக்கொண்டான், அணிக்கொண்டான், பாடிப்பறந்தது, இக்கொற்றன்.

### இன்றி என்னும் வினையெச்சம் - செய்யுள் முடிபு

**"இன்றி யென்னும் வினையெஞ் சிறுதி**
**நின்ற இகரம் உகரம் ஆதல்**
**தோன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே".**

'இன்றி' என்னும் வினை எச்சச் சொல்லின் இறுதி இகரம் செய்யுளுள் உகரமாக மாறுவதுண்டு.

**(எ-கா)** உப்பின்று உண்க, உப்பின்றி உண்க.

### இகரச் சுட்டுப் புணர்ச்சி, துணி பதக்கொடு புணர்தல்

**"சுட்டின் இயற்கை முற்கிளந் தற்றே".**

அகரச் சுட்டிற்குச் சொல்லப்பட்டவை இகர ஈற்றுக்கும் பொருந்தும், மெல்லெழுத்து வரின் மிகும். இடையெழுத்தும் உயிரும் வரின் வகர ஒற்று மிகும். இவ்வுயிர் செய்யுளுள் நீட்டிசைக்கும்.

**(எ-கா)** இந்நூல், இவ்யாழ், இவ்வடை, ஈவயினான.

**"பதக்குமுன் வரினே தூணிக் கிளவி**
**முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே".**

துணி முன் பதக்கு வரின் முன்பு சொல்லிய வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** தூணிக்கொள், தூணிப்பதக்கு

### நாழி உரியொடு புணர்தல்

**"உரிவரு காலை நாழிக் கிளவி**
**இறுதி இகர மெய்யொடுங் கெடுமே**
**டகாரம் ஒற்றும் ஆவயி னான".**

'நாழி' முன் 'உரி' வரின் 'நாழி'யின் இகர இறுதி மெய்யொடு கெடும். அங்கு ட் வரும்படி முடியும்.

**(எ-கா)** நாடுரி, நாழிக்காயம்

**பனி, வளி என்னும் இகரவீற்றுச் சொற்கள்**

**"பனியென வரூஉங் கால வேற்றுமைக்கு**

**அத்தும் இன்னும் சாரியை ஆகும்".**

பனி என்னும் சொல்லுக்கு எதிரே சகதப க்கள் வரின் அத்தும் இன்னும் சாரியைகளாக வரும்.

**(எ-கா)** பனியத்துக்கொண்டான், பனியிற் சென்றான்

**"வளியென வரூஉம் பூதக் கிளவியும்**

**அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப".**

'வளி' ஐம்பூதங்களில் ஒன்றான காற்று. அது அத்தும் இன்னும் சாரியையாகப் பெறும்.

**(எ-கா)** வளியத்துக்கொண்டான், வளியிற் கொண்டான்.

**உதி மரப்பெயர்ப் புணர்ச்சியில் மெல்லெழுத்து மிகுதல்**

**"உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே".**

'உதி' மரப்பெயர் முன் க ச த ப க்கள் வரின் அவற்றிற்கு இனமான மெல்லெழுத்துக்கள் மிகும்.

**(எ-கா)** உதியங்கோடு

**புளி என்னும் இகரவீற்று மரப்பெயர், சுவைப்பெயர் புணர்ச்சி**

**"புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை".**

புளி மரப்பெயர்ச் சொல்லுக்கு அம்முச் சாரியை வரும்.

**(எ-கா)** புளியங்கிளை, புளியம்பழம்

**"ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே".**

சுவையை உணர்த்தும் 'புளி' என்னும் பெயர்ச்சொல்லுக்கு மெல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** புளியங்கூழ்

**சுவைப் புளிப்பெயர்ப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகுதல்**

**"வல்லெழுத்து மிகினு மானம் இல்லை**

**ஒல்வழி யறிதல் வழக்கத் தான".**

முற்கூறிய 'புளி'க்கு வல்லெழுத்து மிகுந்து வரினும் குற்றமில்லை.

**(எ-கா)** புளிக்கூழ், புளிச்சோறு

### நாட்பெயர் 'ஆன்' சாரியை பெறுதல்

**"நாள்முன் தோன்றும் தொழில்நிலைக் கிளவிக்கு**
**ஆண்இடை வருதல் ஐயம்இன்றே"**

'பரணி' இகரவீற்றுச் சொல்லுக்கு முன் வினைச்சொல் வரின் ஆன் சாரியை இடையில் வரும்.

**(எ-கா)** பரணியாற் கொண்டான்

### திங்கட்பெயர் இக்குச் சாரியை பெறுதல்

**"திங்கள் முன்வரின் இக்கே சாரியை"**

மாதப் பெயர்ச்சொல் முன் வினைச்சொல் வரின், இக்குச் சாரியை இடையில் வரும்.

**(எ-கா)** ஆடிக்குக் கொண்டான்.

## ஈகார ஈறு

### ஈகார ஈற்றுப்பெயர் அல்வழியில் புணர்தல்

**"ஈகார இறுதி ஆகார இயற்றே".**

ஈகார ஈற்றுப்பெயர், ஆகார ஈறுபெற்ற புணர்ச்சி விதிகளையே பெறும். அல்வழியில் கசதப க்கள் எதிரே வரின் மிக்கு முடியும். அல்வழியில் கசதப க்கள் முன்வரின் தத்தமக்கு ஒத்த ஒற்று இடைமிகும் என்பது அகர ஈற்று இலக்கணம். அது ஆகாரத்திற்கு மாட்டேற்றப்பட்டது. ஆகார இறுதி இங்கு ஈகார இறுதிக்கு மாட்டேற்றப்பட்டது.

**(எ-கா)** தீக்கடிது

### ஈகார ஈற்றுப்பெயர் இயல்பாய் முடிதல்

**"நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்**

**மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்**

**ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்".**

நீ, பீ, மீ என்னும் சொற்கள் மேலே கூறிய வல்லெழுத்துப் பெறாது அல்வழியில் இயல்பாய் முடியும்.

**(எ-கா)** நீ காண், நீ குறியை.

**மீ – வன்கணம் மிகுந்து முடிதல்**

**"இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்**

**ஊடனிலை மொழியும் உளவென மொழிப".**

இடம்வரை கிளவி எனப்பட்ட 'மீ' முன் வல்லெழுத்து மிகும் மொழிகளும் உண்டு.

**(எ-கா)** மீப்பல், மீக்கோள்

**ஈகார ஈற்றுப்பெயர் வேற்றுமையிற் புணர்தல்**

**"வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே".**

ஈகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண்ணும் முற்கூறிய ஆகார ஈற்று அல்வழி போல் வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** பட்டுப்புழு

**உகர ஈற்று எரு, செரு என்னும் சொற்கள்**

**"எருவுஞ் செருவும் அம்மொடு சிவணித்**

**திரிபிடன் உடைய தெரியுங் காலை**

**அம்மின் மகரஞ் செருவயின் கெடுமே**

**தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை".**

எரு, செரு என்னும் அம்முச் சாரியை பொருந்தி வேறுபடுமிடங்களும் உண்டு. 'செரு' சொல்லில் 'அம்' மின் மகரம் கெட்டு வல்லெழுத்து மிகுந்து முடியும். எருக்குழி, செருக்களம் என்று பொதுவிதிப்படியும் அமையும்.

**(எ-கா)** எருவங்குழி, செருவங்களம்

எருவின் கடுமை, செருவின் கடுமை

எருவ ஞாற்சி, செருவ ஞாற்சி

**ழகர உகர ஈற்றுப்பெயர் செய்யுளிற் புணர்தல்**

**"ழகர உகரம் நீடிடன் உடைத்தே**

**உகரம் வருதல் ஆவயி னான"**

செய்யுளில் 'ழு' இறுதி ஊகாரமாய் நீண்டு முடியும். அவ்விடத்தே 'உகரம்' வந்து முடியும்.

**(எ-கா)** புழூஉப்பல், எழூஉக்கதவு

**ஒடு மரப்பெயர் வன்கணத்துடன் புணர்தல்**

**"ஒடுமரக் கிளவி யுதிமர இயற்றே".**

'ஒடு' என்னும் மரத்தினை உணர நின்ற 'உதி' என்னும் மரச்சொல் போல் மெல்லெழுத்து பெற்று முடியும்.

**(எ-கா)** ஒடுங்கோடு, ஒருங்கிளை

**சுட்டு முதல் உகரம் 'அன்' சாரியை பெறுதல்**

**'சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்**

**ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை'.**

அது, இது எனும் உகரஈற்றுச் சொற்கள், உருபு புணர்ச்சியில் சொன்னபடி 'என்' சாரியை பெற்று உகரம் கெடும்.

**(எ-கா)** அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு

## ஊகார ஈறு (அல்வழியில் ஊகார ஈற்றுப் பெயர்கள்)

**ஊகாரவீறு அல்வழியில் முடிதல்**

**"ஊகார இறுதி ஆகார இயற்றே".**

ஊகார ஈற்றுப்பெயர், ஆகரவீற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** கொண்வுக்கடிது

**ஊகாரவீறு வினைச்சொல்லுடன் புணர்தல்**

**"வினையெஞ்சு கிளவி க்கும் முன்னிலை மொழிக்கும்**

**நினையுங் காலை அவ்வகை வரையார்".**

ஊகார ஈற்று வினையெச்சச் சொல்லிற்கும் முன்னிலை வினைச்சொல்லுக்கும் வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** உண்ணூக் கொண்டான், உண்ணூச் சென்றான்.

**ஊகாரவீறு வேற்றுமையிற் புணர்தல்**

**"வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே".**

ஊகார ஈற்று வேற்றுமைப் பொருட்புணர்ச்சியும் அவ் ஆகார ஈற்று அல்வழியோடு ஒத்து வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** கொண்மூக்கூட்டம், கொண்மூக்குழாம்.

**ஊகர எழுத்துப்பேறு தோன்றுதல்**

**"குற்றெழுத் திம்பரும் ஓரெழுத்து மொழிக்கும்**

**நிற்றல் வேண்டும் உகரக் கிளவி".**

குற்றெழுத்தைச் சார்ந்த ஊகார ஈற்றுச் சொல்லுக்கும் ஈற்று ஓரெழுத்துச் சொல்லுக்கும் இறுதியில் ஓர் உகர எழுத்துத் தோன்றும்.

**(எ-கா)** உடூஉக்குறை, தூஉக்குறை

**பூவன்கணத்துடன் புணர்தல்**

**"பூஎன் ஒருபெயர் ஆயியல் பின்றே**

**ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே".**

பூ எனும் பெயர்ச்சொல்லுக்கு உகரப்பேறு இல்லை. அவ்விடத்து வல்லெழுத்து மிகுதலும் உண்டு. பெரும்பாண்மை மெல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** பூங்கொடி, பூக்கொடி

**ஊகார ஈற்றுப்பெயர் ஒற்று பெற்று முடிதல்**

**"ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்".**

ஊ என்னும் தசையை உணர்த்தும் பெயர்ச்சொல் ஆ என்னும் பெயரோடு ஒத்து னகரச் சாரியை பெறும்.

**(எ-கா)** ஊன்குறை, ஊன் குழம்பு

**ஊகார ஈற்றுப்பெயர் அக்குச் சாரியையும் பெறுதல்**

**"அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே**

**தக்கவழி அறிதல் வழக்கத் தான".**

'ஊ' மேற்கூறிய னகர ஒற்றோடு அக்குச் சாரியை பெற்றும் முடியும்.

**(எ-கா)** ஊனக்குறை,

**அடூஉ-மகடூஉ- 'இன்' சாரியையும் பெறுதல்**

**"அடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்**

**இன்னிடை வரினு மான மில்லை".**

அடூஉ மகடூஉ என்ற உயர்திணைப் பெயர் இரண்டனுக்கும் வல்லெழுத்து மிகுதலேயன்றி, இன் சாரியை இடைவரினும் குற்றமில்லை.

**(எ-கா)** ஆடூஉக்கை என்பது ஆடூஉவின் கை.

## ஏகர, ஒகர ஈறு

**அல்வழியில் எகர ஒகர ஈற்றுப்பெயர்கள் புணர்தல்**

**"எகர ஒகரம் பெயர்க்கீறு ஆகா**

**முன்னிலை மொழிய என்மனார் புலவர்**

**தோற்றமுஞ் சிறப்பும் அல்வழி யான".**

தோற்றமும் சிறப்பும் அல்லாதவழி முன்னிலை வினையில் வரும் எகரமும் ஒகரமும் எதிரே கசதப க்கள் வரின் மிகுந்து புணரும்.

**(எ-கா)** ஏஎக்கொற்றா, ஓஒக்குமரா.

**ஏகர ஒகர இடைச்சொற்களின் புணர்ச்சி**

**"தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும்**

**மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா".**

தேற்றப் பொருள்தரும் எகர இடைச்சொல்லும், சிறப்பு பொருள்தரும் ஒகர இடைச்சொல்லும் மேலே கூறியபடி வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும். அளபெடையாய் நிற்கும் போது மட்டும் எகர ஒகரங்கள் ஈறாகும்.

**(எ-கா)** யானேஎ கொண்டேன், நீயேஎ கொண்டாய்.

## ஏகார ஈறு

**அல்வழியில் ஏகரஈற்றுப் பெயர்கள் புணர்தல்**

**"ஏகார இறுதி ஊகார இயற்றே".**

ஏகார ஈற்றுப் பெயர் ஊகார இறுதிப் பெயரின் இயல்புடையது. அல்வழியல் வல்லெழுத்து வரும்போது அவ்வல்லெழுத்து மிகுந்து ஒலிக்கும்.

**(எ-கா)** சேக்கடிது

**ஏகார இடைச்சொற்கள்**

**"மாறுகொள் எச்சமும் வினாவும் எண்ணும்**

**கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்".**

ஏகார இடைச்சொல் எதிர்மறை எச்சத்திலும் வினாப் பொருளிலும் வினாப் பொருளிலும் எண்ணுப் பொருளிலும் மேற்கூறிய வல்லெழுத்துப் பெறாது இயல்பாய் முடியும்.

**(எ-கா)** யானே கொண்டேன், நீயே செய்தாய்?

**ஏகார வீறு வேற்றுமையிற் புணர்தல்**

**"ஏயென் இறுதிக்கு எகரம் வருமே"**

வேற்றுமைக்கண் ஏ என்னும் இறுதிக்கு எகாரம் வரும். ஏ என்பது எகரம் பெற்று ஏஎ என வரும்.

**(எ-கா)** ஏஎக்கொட்டில்

**சே என்னும் ஏகார ஈற்று மரம் மற்றும் விலங்கின் பெயர்**

**"சே என் மரப்பெயர் ஒடுமர இயற்றே"**

சே என்னும் மரப்பெயர் ஒடுமர விதியைப் பெற்று மெல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** சேங்கிளை

**"பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்".**

மேற்கூறிய பெற்றம் என்பது பசு என்னும் பொருளில் வருவதால் இன் சாரியை பெறும்.

**(எ-கா)** சேவின் கொம்பு

## ஐகார ஈறு

**ஐகாரவீற்றுப்பெயர் வேற்றுமையிற் புணர்தல்**

**"ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**வேற்றுமை ஆயின் வல்லெழுத்து மிகுமே".**

ஐகார ஈற்றுப் பெயர்ச்சொல் முன்னர் வல்லினம் வரின் வேற்றுமையில் வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** யானைக்கோடு

**சுட்டு முதல் வன்கணத்துடன் புணர்தல்**

**"சுட்டு முதல் இறுதி உருபியல் நிலையும்"**

சுட்டெழுத்தை முதலாகவுடைய ஐகார ஈற்றுப்பெயர் இறுதி உருபு புணர்ச்சியில் கூறியபடி ஐகாரம் கெட்டும் கெடாதும் வற்றுச் சாரியை பெற்றும் முடியும்.

**(எ-கா)** அவையற்றுக்கோடு, இணையற்றுக்கோடு, உவையற்றுக்கோடு

**ஐகார ஈற்று மரப்பெயர்கள்: விசை, ஞெமை, நமை, பனை, அரை, ஆவிரை**

**"விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்**
**அவைமுப் பெயரும் சேமர இயல".**

விசை, ஞெமை, நமை என்ற மூன்று மரப்பெயர்களும் சே மரத்திற்கு ஓதிய இலக்கணத்தைக் கொண்டு மெல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** விசைங்கிளை, நமைஞ்செதிகள்

**"பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்**
**நினையுங் காலை அம்மொடு சிவணும்**
**ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே**
**மேய்அவண் ஒழிய என்மனார் புலவர்".**

பனை, அரை, ஆவிரை என்ற ஐகார இறுதி மரப்பெயர்கள் அம்முச்சாரியை பெறும். ஐ ஈறு 'அரை' மரம் தவிர்த்து ஏனைய இரண்டிலும் தான் ஏறிய மெய் நிற்கத் தான் மட்டும் கெடும்.

**(எ-கா)** பனங்காய், அரையங்காய்

**பனையுடன் 'அட்டு', 'கொடி' புணர்தல்**

**"பனையின் முன்னர் அட்டுவரு காலை**
**நிலையின் றாகும் ஐயென் உயிரே**
**ஆகாரம் வருதல் ஆவயி னான".**

பனை என்னும் சொல் முன் அட்டு வரும்போது ஐ எனும் உயிர் மறையும். ஆகாரம் வந்து அம்மெய் மேல் ஏறி நிற்கும்.

**(எ-கா)** பனாஅட்டு

**"கொடிமுன் வரினே ஐயவண் நிற்பக்**
**குடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி".**

பனைச் சொல்லின் முன் கொடி வந்து புணரின் வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** பனைக்கொடி

**ஐகார ஈற்றுத் திங்கட்பெயரும் நாட்பெயரும்**

**"திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன".**

ஐகார ஈற்றுத் திங்களைக் குறிக்கும் பெயரும் நாளை உணர்த்தும் பெயரும் முன்பு இகர வீற்றுத் திங்களும் நாளும் பெற்ற விதியைப் பெறும். அதாவது இக்கும் ஆனும் சாரியைகள் பெற்று வரும்.

**(எ-கா)** சித்திரைக்குக் கொண்டான், ஆதிரையார் கொண்டான்.

**மழை வன்கணத்துடன் புணர்தல்**

**"மழையென் கிளவி வளியியல் நிலையும்".**

மழை என்னும் ஐகார இறுதிச் சொல் இகர இறுதி சொல்லாகிய 'வளி' என்பதற்கு சொல்லப்பட்ட இலக்கணப்படி அத்தும் இன்னும் பெற்று முடியும்.

**(எ-கா)** மழையத்துக் கொண்டான், மழையிற் சென்றான்.

**வேட்கையுடன் அவா செய்யுளில் புணர்தல்**

**"செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்**
**ஐயென் இறுதி அவாமுன் வரினே**
**மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்**
**டகாரம் ணகார மாதல் வேண்டும்".**

செய்யுளின் அல்வழியில் வேட்கை என்னும் ஐ ஈற்றுச் சொல்லுக்கு அவா எனும் சொல் முன்னே வரின் அவ்ஐகாரம் தானூர்ந்த மெய்யோடும் கெடும். அவ்விடத்தில் ட், ண் ஒற்றாதல் வேண்டும்.

**(எ-கா)** வேணவா நலிய வெய்ய வுயிரா

## ஓகார ஈறு

### அல்வழியில் ஒகர ஈற்றுப் பெயர்கள் புணர்தல்

**"ஓகார இறுதி ஏகார இயற்றே"**

ஒகார ஈற்றுப் பெயர்கள் அல்வழிக்கண் ஏகார ஈற்றுப் பெயர்களின் இயல்பிற்றாய் முடியும். வல்லெழுத்து வந்தால் மிகுந்து முடியும்.

**(எ-கா)** ஓக்கடிது, ஓச்சிறிது

### ஓகார இடைச்சொல் புணர்ச்சி

**"மாறுகொள் எச்சமும் வினாவும் ஐயமும்**

**கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்".**

எதிர்மறை எச்சப் பொருள்தரும் ஓகாரமும் வினாவும் ஐயமும் ஆகிய பொருண்மையுடைய ஓகாரங்களும் முன்பு பெயர்க்குக் கூறிய வல்லெழுத்து மிகாமல் இயல்பாக முடியும்.

**(எ-கா)** யானோ கொண்டேன், நீயோ பெரியவன்

### ஓழியிசை ஓகாரம் இயல்பாயும் வேற்றுமையிலும் புணர்தல்

**"ஒழிந்தன் நிலையும் ஒழிந்தவற் றியற்றே".**

ஒழியிசை ஓகாரமும் மேற்கூறியவாறு இயல்பாக முடியும்.

**(எ-கா)** படிக்கவோ போனான்

**"வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே**

**ஒகரம் வருதல் ஆவயி னான".**

ஓகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண்ணும் அல்வழியோடு ஒத்து வல்லினம் மிகுந்து வரும். அவ்வாறு வருமிடத்து ஒகரம் வரும்.

**(எ-கா)** ஓஒக்கொடுமை

**கோ - இல்லோடு புணர்தல், ஒன் சாரியைப் பெற்று புணர்தல்**

**"இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்".**

ஓகார ஈற்றுக் கோ என்னும் மொழியினை இல் என்னும் வருமொழியோடு சொல்லின் ஓகாரம் மிகாது இயல்பாய் முடியும்.

**(எ-கா)** கோயில்

**"உருபியல் நிலையும் மொழியுமா ருளவே**

**ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும்".**

ஓகார ஈற்றுச் சொற்களுள் உருபு புணர்ச்சிக்கு ஓதிய இலக்கணப்படி முடிவதும் உண்டு. அதனால் உருபியல் நிலைத்த நின்று சாரியை பெற்று வரும்.

**(எ-கா)** கோஒன் கை

## ஔகார ஈறு

**ஔகார ஈற்றுப்பெயர் இருவழியிலும் புணர்தல்**

**"ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்**
**அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே**
**அவ்விரு வீற்றும் உகரம் வருதல்**
**செவ்வி தென்ப சிறந்திசி னோரே".**

ஔகார ஈற்றுத் தொழிற்பெயர் முன் வல்லெழுத்து முதன்மொழியாக வரின் அல்வழியிலும் வேற்றுமையிலும் வல்லெழுத்து மிகும். இடையில் ஓர் உகரம் வரும்.

**(எ-கா)** கௌவுக்கடிது, கௌவுச்சிறிது.

# புள்ளி மயங்கியல்

**ஞாகர ஈறு இருவழியிலும் புணர்தல்**

**"ஞாகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**
**அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே".**

ஞகார ஈற்று முதனிலைத் தொழிற்பெயர் முன் கசதப வல்லெழுத்துக்கல் அல்வழி வேற்றுமையில் வருமொழியாக புணரின் அவ்வல்லெழுத்து மிகுந்து நிலைமொழிக்கண் உகரம் வரும்.

**(எ-கா)** உரிஞா ஞான்றது, உரிஞா நீட்சி

## நகர ஈறு

**அல்வழியில், வேற்றுமையில் நகர ஈறு புணர்தல்**

**"நகர இறுதியும் அதனோ ரற்றே".**

நுகர ஈற்றுப் பெயரும் மேற்கூறிய கணங்களோடு புணரும் போது அஞ் ஞாகார ஈற்றோடு இயல்பாக முடியும்.

**(எ-கா)** பொருநக் மென்கணம், வன்கணம் மிகுதல்

**"வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி**

**வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை".**

வெரிந் என்ற சொல்லினிறுதி சாரியை முழுவதும் கெட்டு மெல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** வெரிங்குறை

**"ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே".**

வெரிந் என்ற சொல்லின் இறுதி மெல்லெழுத்தின்றி வல்லெழுத்து மிகுந்தும் முடியும்.

**(எ-கா)** வெரிக்குறை

## ணகர ஈறு

**வேற்றுமையில் ணகர ஈற்றுப் புணர்ச்சி**

**"ணகார இறுதி வல்லெழுத் தியையின்**

**டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே".**

ணகார ஈற்றுப்பெயர் வல்லெழுத்து வரின் வேற்றுமையில் டகாரமாய் முடியும்.

**(எ-கா)** மண்+குடம் - மட்குடம்.

**ஆண் பெண் என்னும் விரவுப்பெயர்கள்**

**"ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை".**

ஆண், பெண் என்னும் விரவுப்பெயர்கள் முன் அஃறிணை விரவுப்பெயர்க்குக் கூறிய இலக்கணப்படி அமையும். ஆண் பெண் என்பன இருதிணைக்கும் பொதுவாகும்.

**(எ-கா)** ஆண் கை, பெண் கை, ஆண்கூவியது, பெண்கூவியது.

### ஆண் என்னும் மரப்பெயர் புணர்ச்சி

**"ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே".**

ஆண் என்னும் மரத்தை உணர நின்ற பெயர்ச்சொல் அம் சாரியை பெற்று இயல்பாய் முடியும்.

**(எ-கா)** ஆணங்கிளை, ஆணங்கோடு

### விண் செய்யுளில் 'அத்து'ச் சாரியை பெறுதல்

**"விண்ணென வரூஉங் காயப் பெயர்வரின்**
**உண்மையும் உரித்தே அத்தென் சாரியை**
**செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை".**

செய்யுளில் வினைச்சொல் எதிரே வரும்போது நிலைமொழியாக நிற்கும் விண் என்னும் ஆகாயத்தை உணர்த்தும் பெயர் அத்துச் சாரியை பெற்றும் பெறாமையும் வரும்.

**(எ-கா)** விண்ணகத்துக் கொட்கும்

### ணகர ஈற்றுத் தொழிற்பெயர், கிளைப்பெயர்ப் புணர்ச்சி

**"தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல".**

ணகரவீற்றுத் தொழிற்பெயர் அல்வழி, வேற்றுமையில் ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் போலப் புணரும். எதிரே எல்லெழுத்து வந்தால் வல்லெழுத்து உகரமும், மெல்லெழுத்து வந்தால் இடையெழுத்து வகரம் வர உகரமும் பெறும்.

**(எ-கா)** மண்ணு நன்று, மண்ணு வலிது.

### ணுகர ஈற்றுக் கிளைப்பெயர் புணர்ச்சி

**"கிளைப்பெயர் எல்லாம் கொளத்திரி பிலவே".**

னகரவீற்று இனப்பெயர்கள் எல்லாம் இயல்பாகப் புணரும்.

**(எ-கா)** உமண்குடி, பாண்சேரி

**எண் என் ணகர விறுதி அல்வழியிற் புணர்தல்**

**"வேற்றுமை யல்வழி எண்ணென் உணவுப்பெயர்**

**வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே".**

எண்(எள்) என்று சொல்லப்படுகின்ற உணவினை உணர்த்தும் பெயர் வேற்றுமைக்குரிய இலக்கணத்தில் முடியும்.

**(எ-கா)** எட்சிறிது, எட்கடிது.

**இருவழியிலும் முரண் என்னும் தொழிற்பெயர்**

**"முரண்என் தொழிற்பெயர் முதலியல் நிலையும்".**

'முரண்' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் முன்னர் கூறிய இலக்கணப்படி அல்வழியில் இயல்பாகவும் வேற்றுமையில் டகரமாகத் திரிந்தும் நிற்கும்.

**(எ-கா)** முரண்கடிது, முரட்கொடுமை.

## மகர ஈறு

**வேற்றுமையில் மகர ஈற்றின் புணர்ச்சி**

**"மகர இறுதி வேற்றுமை யாயின்**

**துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே".**

மகரவீற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமையில் மகரம் கெட்டு வந்த வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** மரம் +பெட்டகம் - மரப்பெட்டகம்

பழம் +சாறு – பழச்சாறு

**மகரவீற்றுப்பெயர் அகர ஆகாரங்கள் வருவழி முடிவு வேறுபடுதல்**

**"அகர ஆகாரம் வரூஉங் காலை**

**ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்தே".**

அகர முதல்மொழியும் ஆகார முதல்மொழியும் வருமொழியாய் வரும்போது நிலைமொழி ஈற்றின் மேல் நின்ற அகரம் நீளுதலும் நீளாது நிற்றலுமுண்டு.

**(எ-கா)** மராஅடி, குளா அம்பல்

**மகரவீற்றுப்பெயர் உறழ்தல்**

**"மெல்லெழுத் துறழு மொழியுமா ருளவே**

**செல்வழி யறிதல் வழக்கத் தான".**

மகர ஈற்றுச் சொற்களுள் மெல்லெழுத்தும் வல்லெழுத்தும் மாறி வழங்குமிடமும் உண்டு.

**(எ-கா)** குளங்கரை, குளக்கரை

**இல்லம் மரப்பெயர் வன்கணத்தொடு புணர்தல்**

**"இல்ல மரப்பெயர் விசைமர வியற்றே".**

இல்லம் என்னும் மரப்பெயர் விசையென்னும் மரப்பெயர் போல வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** இல்லங்கோடு, இல்லங்கட்டை.

**மகரவீற்றுப்பெயர் அல்வழியிற் புணர்தல்**

**"அல்வழி யெல்லாம் மெல்லெழுத்தாகும்".**

அல்வழிப் புணர்ச்சி அனைத்திலும் மகரஈறு மெல்லெழுத்தாய்த்திரிந்து முடியும்.

**(எ-கா)** மரஞான்றது, மரஞ்சிறிது.

**அகம் கை ஆகியவை வருமொழியொடு புணர்தல்**

**"அகமென் கிளவிக்கும் கைமுன் வரினே**

**முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்**

**வரைநிலை யின்றே யாசிரி யர்க்க**

**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான".**

அகம் என்ற சொல்முன் 'கை' என்ற சொல் வரின் 'அ' மட்டும் இருக்க முன்னின்றவை கெடுதலுமுண்டு. அப்போது வருமொழிக் 'கை' என்பதற்கு இனமான மெல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** அகம்+கை – அங்கை

**இலம் எனும் மகர இறுதி படு எனும் வருமொழியொடு செய்யுளில் முடிதல்**

**"இலமென் கிளவிக்குப் படுவரு காலை**

**நிலையிலும் உரித்தே செய்யு ளான".**

இலம் என்ற சொல்முன் படு என்ற முதனிலைத் தொழிற்பெயர் செய்யுளில் வரும்போது மகரஈறு கெடாது நிற்றலும் உண்டு.

**(எ-கா)** இலம்படு புலவர்.

**ஆயிரம் 'அத்து'ச்சாரியைப் பெறுதல்**

**"அத்தொடு சிஞும் ஆயிரத் திறுதி**
**ஒத்த எண்ணு முன்வரு காலை".**

ஆயிரம் என்னும் சொல்லின் இறுதி ஆயிரத்திற்குட்பட்ட எண்கள் வந்து புணரும்போது 'அத்து' ச்சாரியை பெறும்.

**(எ-கா)** ஆயிரத்தொன்று, ஆயிரத்து நூறு.

**அடையொடு கூடிய ஆயிரம் 'அற்று'ப் பெறுதல்**

**"அடையொடு தோன்றினும் அதனோ ரற்றே".**

ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் அடையடுத்த மொழியோடு வந்தாலும் மேற்கூறியபடி அத்துப் பெறும்.

**(எ-கா)** மூவாயிரத்து இரண்டு.

**ஆயிரம் அளவு நிறைப் பெயர்களுடன் புணர்தல்**

**"அளவும் நிறையும் வேற்றுமை யியல".**

ஆயிரம் என்ற பெயர்முன் முகத்தல் அளவை நிறுத்தலளவைப் பெயர்கள் வந்து புணர்ந்தால் வேற்றுமைப் புணர்ச்சியில் மகரம் இயல்பாகக் கெட்டு வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** ஆயிரக் கலம், ஆயிரக் கழஞ்சு

**படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் வேற்றுமையில் தொடக்கம் குறுகுதல்**

**"படர்க்கைப்பெயரும் முன்னிலைப் பெயரும்**
**தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்**
**வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்**
**மெல்லெழுத்து மிகுதல் ஆவயி னான".**

எல்லாரும் என்னும் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பெயரும் நெடுமுதல் குறுகி முடியும். தாம், நாம், யாம் (தம், நம், யம்) என்னும்

பெயர்களும் வேற்றுமைப் புணர்ச்சியாய் இருப்பின் உருபு புணர்ச்சி இயல்பாய் முடியும்.

**(எ-கா)** எல்லாரும் +கை – எல்லார்தங்கையும்

தாம் +செவி – தஞ்செவி

**படர்க்கை, முன்னிலைப் பெயர்கள் அல்வழியில் இயல்பாதல்**

**"அல்லது கிளப்பின் இயற்கை யாகும்".**

மேற்கூறிய படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் தொடக்கம் குறுகும் பெயர்நிலைக் கிளவியும் அல்வழியைச் சொல்லுமிடத்து இயல்பாய் முடியும்.

**(எ-கா)** எல்லாரும் பெரியர், எல்லாருங் குறியர்

**எல்லாம் என்னும் விரவுப்பெயர்ப் புணர்ச்சி**

**"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா மெனும்பெயர் உருபியல் நிலையும்**
**வேற்றுமை அல்வழிச் சாரியை நிலையாது".**

எல்லாம் என்னும் விரவுப்பெயர் உருபுப் புணர்ச்சியின் இயல்பாகவே நின்று வற்றுச் சாரியையும் இறுதி உம் சாரியையும் பெற்று முடியும். அப்பெயர் வேற்றுமையில்லாத இடத்தில் சாரியை பெறுதல் நிலையாதாகவே முடியும்.

**(எ-கா)** எல்லாக்கடையிலும், எல்லா நூலும்.

**எல்லாம் என்பது அல்வழியில் மெல்லெழுத்து மிகுந்து உயர்திணையில் புணர்தல்**

**"மெல்லெழுத்து மிகினு மானமில்லை".**

'எல்லாம்' என்னும் விரவுப்பெயர், வன்கணம் வரின் இனமெல்லெழுத்டு மிகும். அவ்வாறு மிகுந்து வருதல் குற்றமில்லை என்பர்.

**(எ-கா)** எல்லாங் கெட்டது, எல்லாங்கோடு, எல்லாஞ் சிறிய, எல்லாருஞ்சிறிய.

**“உயர்திணை யாயின் உருபியல் நிலையும்".**

எல்லாம் என்பது உயர்திணையை உணர்த்தி நின்றால் உருபு புணர்ச்சிப்படி 'நம்' சாரியை இடையில் வரும்.

**(எ-கா)** எல்லா நாயகரும், எல்லா அரசரும்.

**நும் வேற்றுமையில் மென்கணம் மிகுதல்**

**"நும்மெ னொருபெயர் மெல்லெழுத்து மிகுமே".**

நும் என்று சொல்லப்படும் விரவுப்பெயர் வேற்றுமைக்கண் மெல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** நுங்கை, நுஞ்செவி

**நும் என்னும் பெயரின் அல்வழிப் புணர்ச்சி**

**"அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
**உக்கெட நின்ற மெய்வரின் ஈவர**
**இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்**
**நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே**
**அப்பால் மொழிவயின் இயற்கை யாகும்".**

நகரத்து உகரங்கெட்டு அந்நின்ற மெய்யிடத்து ஈகாரம் வர, ஓர் இகரம் இடையிலே வந்து மகரம் கெட அவ்விடத்தில் ஒரு ரகரம் புள்ளியொடு பொருந்தி நிற்றல் வேண்டும். வருமொழியிடத்து அம்மொழி இயல்பாக முடிதலும் வேண்டும்.

**(எ-கா)** நீஇர் சிறந்தவர்

நீஇர் பெரியீர்

**மகரஈற்றுத் தொழிற்பெயர் புணர்ச்சி**

**"தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல".**

மகர ஈற்றுத் தொழிற்பெயர்க்கெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பாக புணரும். அதாவது உகரம் பெற்று வல்லெழுத்து வரின் அவ்வல்லெழுத்தே மிகுந்து ஞநமவ வரின் இயல்பாய் புணரும்.

**(எ-கா)** வெம்முக்கடிது, வெம்முநீண்டது, 'தும்முச்செறுப்ப'.

**ஈம், கம், உரும் - இம்மூன்றும் தொழிற்பெயரோடு புணர்தல்**

**"ஈமும் கம்மும் உரும்என் கிளவியும்**
**ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன".**

ஈம், கம், உரும் என்ற மூன்று பெயரும் அல்வழியிலும், வேற்றுமையிலும் அத்தொழிற்பெயரோடு ஒருதன்மையவாய் வன்கணம் வந்தால் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும்.

**(எ-கா)** ஈமுக் கடிது, கம்முக் கடிது, உருமுக் கடிது.

**ஈம் கம் பெயர்களுக்குச் சாரியை வருதல்**

**"வேற்றுமை யாயின் ஏனை இரண்டும்**

**தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை".**

வேற்றுமைப் புணர்ச்சியாயின் இறுதி 'உரும்' ஒழிந்த முன்னைய இரண்டும் அக்குச் சாரியை பெறும்.

**(எ-கா)** ஈமக்குடம், கம்மச் சாடி, கம்முக்கடிது.

**மகரம் புணர்மொழியிற் குறுகுதல்**

**"வகார மிசையும் மகாரங் குறுகும்".**

வகரத்தின் மேல் வரும் மகரம் குறுகி வரும்.

**(எ-கா)** நிலம் வலிது.

**மகரவீறு நாட்பெயரது வேற்றுமையில் மெய் கெடுதல்**

**"நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன**

**அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே**

**ஒற்றுமெய் கெடுதல் என்மனார் புலவர்".**

மகம் என்னும் நாள் பெயர் இகரவீற்றில் அத்து, ஆன் சாரியைகள் பெற்று வரும். அவ்வாறு அத்து வரின் ஒற்றாகிய மெய் கெடும்.

**(எ-கா)** மகத்தாற் கொண்டான் (மகம் +அத்து+ஆன்)

## னகர ஈறு

**னகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**"னகார இறுதி வல்லெழுத்து இயையின்**

**றுகார மாகும் வேற்றுமைப் பொருட்கே".**

வேற்றுமைத் தொடரில் பெயர் இறுதியில் வரும் னகார ஈறு வல்லெழுத்து வந்து புணரின் றகரமாகத் திரியும்.

**(எ-கா)** பொற்குடம், தற்சிறப்பு.

**மன் முதலிய ஏழும் அன்னவாய் முடிதல்**

**"மன்னும் சின்னும் ஆனும் ஈனும்**

**பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்**

**அன்ன இயல என்மனார் புலவர்".**

மன் என்னும் சொல்லும் சின், ஆன், ஈன், பின், முன் என்னு சொல்லீறுகளும் னகர ஈற்று வினையெச்சச் சொல்லும் மேற்கூறியபடி னகரம் றகரமாய் மாறும்.

**(எ-கா)** "அதுமற் கொண்கன்தேரே", 'காப்பும் பு+ண்டிசிற் கடையும் போகலை'.

**வயின், குயின் என்னும் சொற்புணர்ச்சிகள்**

**"சுட்டுமுதல் வரியினும் எகரமுதல் வயினும்**

**அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப".**

சுட்டை முதலாகவுடைய வயின் என்ற சொல்லும் எகரத்தை முதலாகக் கொண்ட வயின் என்ற சொல்லும் றகரமாய் முடியும்.

**(எ-கா)** அவ்வயிற்கொண்டான், இவ்வயிற் கொண்டான், உவ்வயிற் கொண்டான், எவ்வயிற் கொண்டான்.

**"குயின்என் கிளவி இயற்கை யாகும்".**

குயின் என்னும் சொல் திரியாது இயல்பாய் முடியும்.

**(எ-கா)** குயின் குழாய், (குயின்-மேகம்), குயின் தோற்றம், குயின் செலவு

**எகின் என்னும் மரம் மற்றும் பறவைப்பெயர்ப் புணர்ச்சி**

**"எகின்மர மாயின் ஆண்மர இயற்றே".**

எகின் என்பது மரப்பெயராக வரின் ஆண்மரத்தினது இயல்பாய் அம்முச் சாரியை பெற்று வரும்.

**(எ-கா)** எகினங்கோடு, எகினம் பூ

**"ஏனை எகினே அகரம் வருமே**

**வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்".**

மரமல்லாத எகின் என்னும் சொல்லின் நிலைமொழி ஈறு அகரச் சாரியை பெற்று வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** எகினக்கால் (எகின் - அன்னப்பறவை)

**கிளைப்பெயர் எல்லாம் இயல்பாய் முடிதல்**

**"கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல".**

னுகார ஈற்றுக் கிளைப் பெயரெல்லாம் ணகார ஈற்றுக் கிளைப்பெயர் போலத் திரியாது இயல்பாய் முடியும்.

**(எ-கா)** எயின் குடி, எயின் தோட்டம்

**மீன் ஈற்று னகரம் றகரத்தோடு உறழ்தல்**

**"மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே".**

மீன் என்னும் சொல் வல்லெழுத்துவரின் இயல்பும் திரிபுமாக உறழ்ந்து வரும்.

**(எ-கா)** மீன்கண், மீற்கண்

**தேன் வன்கணத்துடன் புணர்தல்**

**"தேனென் கிளவி வல்லெழுத் தியையின்**
**மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்**
**ஆமுறை இரண்டும் உரிமையு முடைத்தே**
**வல்லெழுத்து மிகுவழி இறுதியில்லை".**

தேன் என்னும் சொல்லில் வல்லெழுத்து முதன்மொழி வரின் மேற்கூறியபடி உறழ்ந்தும் வல்லெழுத்து மிகுந்தும் வரும். அவ்வாறு மிகும் போது இறுதி னகரம் கெடும்.

**(எ-கா)** தேன்குடம், தேற்குடம், தேக்குடம்

**தேன் மென்கணம் மிகுதல்**

**"மெல்லெழுத் மிகினும்மான மில்லை".**

மேற்கூறிய தேன் என்னும் கிளிவியில் வல்லெழுத்து வரும்போது வல்லெழுத்து மிகுதலன்றி மெல்லெழுத்து மிகுந்து முடியினும் குற்றமில்லை.

**(எ-கா)** தேங்குடம், தேம்பானை.

**தேன் - உடன் மென்கணம் புணர்தல்**

**"மெல்லெழுத் தியையின் இறுதியோ டுறழும்".**

அத்தேன் என்னும் சொல்லுக்கு முன் மெல்லெழுத்து முதன்மொழியாக வரின் இறுதி னகார ஒற்றுக் கெடாதும் கெட்டும் உறழ்ந்தும் முடியும்.

**(எ-கா)** தேன்மொழி, தேமொழி.

**தேன் இறாலோடும் தகரத்தொடும் புணர்தல்**

**"இறாஅல் தோற்றம் இயற்கை யாகும்".**

தேன் என்ற சொல்லின் முன் 'இறாஅல்' என்ற சொல் வரின் நிலைமொழி ஈறு கெடாது.

**(எ-கா)** தேனிறால்

**"ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்தே".**

அத்தேன் என்பது இறால் வருமொழியொடு சேரும்போது பிறிதுமோர் தகரஒற்று இரட்டித்து வருதலுமுண்டு.

**(எ-கா)** தேன் +இறால் - தேத்திறால்

**மின் பின் பன் கன் சொற்கள் புணர்தல்**

**"மின்னும் பின்னும் பன்னும் கன்னும்**

**அந்நாற் சொல்லும் தொழிற்பெயர் இயல".**

மின் பின் பன் கன் என்னும் நான்கு சொற்களும் வேற்றுமையிலும் அல்வழியிலும் தொழிற்பெயர் போல வன்கணம் வந்தவழி உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் மென்கணத்துக்கண்ணும் இடைக்கணத்துக்கண்ணும் உகரம் பெற்றும் முடியும்.

**(எ-கா)** மின்னுக்கடிது, பின்னுக்கடிது, பன்னுக்கடிது, கன்னுக்கடிது.

**கன் வேற்றுமைப் புணர்ச்சியில் எகினோடு ஒத்தல்**

**"வேற்றுமை யாயின் ஏனை யெகினொடு**

**தோற்ற மொக்குங் கன்னென் கிளவி".**

வேற்றுமையில் கன் என்னும் சொல் மரமல்லாத ஏனைய எகினொடு ஒத்து முடியும்.

**(எ-கா)** கன்னக்குடம், கன்னநலம், கன்னநீட்சி

**கன் இயற்பெயர் முன்னர்த் 'தந்தை' வருவழிப் புணர்தல்**

**"இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்**
**முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்**
**மெய்யொழித்து அன்கெடும் அவ்வியற் பெயரே".**

னகர ஈற்று இயற்பெயர் முன்னர் தந்தை என்ற முறைப்பெயர் வரின் வருமொழியில் முதற்கண்ணுள்ள மெய் கெட, அதன்மேல் ஏறி நின்ற அகரம் கெடாது நிலைபெறும். நிலைமொழியாகிய அவ் இயற்பெயரில் தான் ஏறிநின்ற மெய்யை விட்டுவிட்டு இறுதி அன் கெடும்.

**(எ-கா)** சாத்தந்தை, கொற்றந்தை.

**ஆதன், பூதன் - இயற்பெயர்கள் புணர்தல், மற்றொரு முடிபு.**

**"ஆதனும் பூதனுங் கூறிய இயல்பொடு**
**பெயரொற் றகரந் துவரக் கெடுமே".**

ஆதன் பூதன் இயற்பெயர்கள், தந்தை முறைப்பெயர் வருமொழியாய் வரின், முற்கூறிய இயல்புகளுடன் பெயர் இறுதியிலுள்ள ஒற்று அகரமும் வருமொழி முதலில் திரிந்து நின்ற அகரமும் கெடும்.

**(எ-கா)** ஆந்தை, பூந்தை, ஆதந்தை, பூதந்தை

**"சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்".**

அப்பெயர்கள் சிறப்பை உணர்த்தும் அடைமொழிகளுடன் வரும்போது இயல்பாகும்.

**(எ-கா)** பெருஞ்சாத்தன்றந்தை, பெருங்கொற்றன்றந்தை

**னகர ஈற்று இயற்பெயர் முன் மகன்பெயர் வருதல்**

**"அப்பெயர் மெய்யொழித்து அன்கெடு வழியும்**
**நிற்றலும் உரித்தே அம்மென் சாரியை**
**மக்கள் முறைதொகூஉம் மருங்கி னான".**

அவ்வியற் பெயர்கள் மக்கள் முறைப்பெயர்கள் வரின், நிலைமொழியில் மெய்நிற்க அன் மட்டும் கெட்டு அம்மென் சாரியை வரும்.

**(எ-கா)** சாத்தங்கொற்றன், கொற்றங்கொற்றன், சாத்தங்குடி, கொற்றங்குடி

**தான், பேன், கோன் என்னும் இயற்பெயர்கள்**

**"தானும் பேனும் கோனும் என்னும்**
**ஆமுறை இயற்பெயர் திரிபிட னிலவே".**

தான், பேன், கோன் என்னும் இயற்பெயர்கள் தந்தை மக்கள் என்னும் முறைப் பெயர்களோடு புணரும் போது மேற்கூறிய திரிபுகள் இன்றி இயல்பாய் முடியும்.

**(எ-கா)** தான்தந்தை, கோன்குடி

**தான், யான் பெயர்கள் வேற்றுமையில் தன், என் ஆதல்**

**"தான்யா னெனும் பெயர் உருபியல் நிலையும்".**

தான் என்னும் விரவுப் பெயரும் யான் என்னும் உயர்திணைப் பெயரும் உருபு புணர்ச்சியில் கூறிய இயல்பின்படி தான் நெடுமுதல் குறுகி 'தன்' ஆகும். யான் யகரம் கெட்டு ஆகாரம் ஏகாரமாய் 'என்' ஆகும்.

**(எ-கா)** தன்கை, என்தோள்

**தான், யான் அல்வழியில் இயல்பாய் முடிதல்**

**"வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலும்**
**தோற்றம் இல்லை என்மனார் புலவர்".**

மேற்கூறிய தான், யான் என்னும் சொற்கள் அல்வழியில் இயல்பாய் முடியும்.

**(எ-கா)** தான் சிறியன், யான் பெரியன்

**அழன் ஈறு கெட வன்கணம் மிகுதல்**

**"அழனென் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே".**

அழன் என்னும் சொல்லின் இறுதி னகர ஒற்றுக்கெட வருமொழி வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** அழக்குடம், அழச்சாடி

**முன் என் கிளவி இல்லொடு முடிதல்**

**"முன்என் கிளவி முன்னர்த் தோன்றும்**
**இல்என் கிளவிமிசை றகரம் ஒற்றல்**
**தொல்லியன் மருங்கின் மரீஇய மரபே".**

முன் என்னும் சொல்லின் முன்னர்த் தோன்றும் இல் என்னும் சொல்லின் மேல் றகர ஒற்று வந்து முடியும். இது பழையதாகிய இயல்பினையுடைய விடத்து மருவி வந்த இலக்கண முடிபு.

**(எ-கா)** முன்றில் (வீட்டின் முன்புள்ள முற்றம்)

**பொன் செய்யுளில் பொலம் என முடிதல்**

**"பொன்னென் கிளவி ஈறுகெட முறையின்**
**முன்னர்த் தோன்றும் லகார மகாரம்**
**செய்யுள் மருங்கின் தொடரிய லான".**

பொன் என்னும் சொல் செய்யுள் தொடரில் னகர இறுதி கெட அதன் முன்னர் முறையே லகரமும் மகரவொற்றும் தோன்றும்.

**(எ-கா)** பொலந்தொடி, பொலங்கலம்

## இடைஒற்று ஈறுகளின் புணர்ச்சி

**யகர ஈறு**

**"யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்**
**வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே".**

யகர ஈற்றுப்பெயர்கள் வேற்றுமையில் வல்லெழுத்து வரின் அவ் வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** நாய்க்கால், நாய்ச்செவி, நாய்த்தலை.

**தாய் - இயல்பாய் முடிதல்**

**"தாய்என் கிளவி இயற்கை யாகும்".**

தாய் என்னும் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்.

**(எ-கா)** தாய் கை.

**மகன்வினை வருமொழியில் வலிமிகுதல்**

**"மகன்வினை கிளப்பின் முதனிலை இயற்றே".**

தாய் என்னும் சொல்லுடன் மகன் பற்றிய வினையைச் சேர்த்துச் சொன்னால் யகரவீற்றுக்கு முதற்கண் கூறிய தன்மைத்து, அதாவது வல்லெழுத்து வரின் வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** மகன்தாய்ப்பாசம், மகன்தாய்ப் பண்பு.

**மிகுந்தும் உறழ்ந்தும் முடிதல்**

**"மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே"**

யகரவீற்றுச் சொற்களுள் வல்லெழுத்தோடு மெல்லெழுத்து உறழ்ந்து முடியும்.

**(எ-கா)** வேய்ங்குறை, வேய்க்குறை

**யகர ஈற்றின் அல்வழிப் புணர்ச்சி**

**"அல்வழி எல்லாம் இயல்பென மொழிப"**

யகரவீற்றுப் பெயர்ச்சொற்கள் எல்லாம் அல்வழியின்கண் இயல்பாகும்.

**(எ-கா)** நாய் கடிது, பாய் பெரிது.

**ரகர ஈறு**

**ரகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**"ரகார இறுதி யகார இயற்றே".**

ரகர வீற்றுப் பெயர்கள் வேற்றுமையில் யகரவீற்று இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்தவழி மிகுந்து முடியும்.

**(எ-கா)** தேர்க்கால், செய்கை

**ஆர் வெதிர் சார் பீர் என்னும் சொற்கள் புணர்தல்**

**"ஆரும் வெதிரும் சாரும் பீரும்**

**மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்".**

ஆர், வெதிர், சார், பீர் என்னும் பெயர்களில் மெல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** ஆர்ங்கோடு, வெதிர்ங்கோடு

**சார் காழ் வருவழி வன்கணம் மிகுதல்**

**"சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்".**

சார் என்னும் மரப்பெயர் முன் 'காழ்' என்னும் சொல்லோடு புணரும்போது வல்லெழுத்து மிகுந்து வரும்.

**(எ-கா)** சார்க்காழ் (காழ்-விதை)

**பீர் வன்கணம் வருவழி 'அம்' முச்சாரியை பெறுதல்**

**"பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்".**

பீர் என்னும் சொல் மெல்லெழுத்தன்றி அம்முச்சாரியையும் பெற்று வரும்.

**(எ-கா)** பீரங்கோடு, பீரம் பூ

## லகர ஈறு

**லகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**"லகார இறுதி னகார இயற்றே".**

லகர வீற்றுப் பெயர்கள் வேற்றுமையில் வரின், னகார ஈற்றின் இயல்பிற்றாய் லகாரம் றகாரமாய்த் திரியும்.

**(எ-கா)** கற்குறை, கற்சிறை

**லகார வீற்றுப்பெயர் மென்கணம் வருவழி லகரம் னகரமாதல்**

**"மெல்லெழுத் தியைபின் னகார மாகும்".**

அவ் ஈறு மென்கணம் வரின் லகாரம் னகாரமாய்த் திரியும்.

**(எ-கா)** கல்+முனை – கன்முனை

முதல்+மொழி – முதன்மொழி

**லகர ஈற்று அல்வழிப் புணர்ச்சி**

**"அல்வழி எல்லாம் உறழென மொழிப".**

அந்த லகர ஈறு அனைத்தும் அல்வழிக்கண் வல்லெழுத்து வரின் இயல்பும் திரிபுமாக உறழ்ந்து முடியும்.

**(எ-கா)** கல்குறிது, கற்குறிது.

**லுகர மெய் ஆய்தமாதல்**

**"தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்**

**புகரின்று என்மனார் புலமை யோரே".**

அவ்வாறு றகரமாய் திரிந்த லகரம், தகர முதன்மொழி வரின் அவ்வாறு றகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகவும் திரியும்.

**(எ-கா)** கஃறீது, கற்றீது என வரும்.

**தனிநெடியை யடுத்த லகார ஈறு இயல்பாய் முடிதல்**

**"நெடியதன் இறுதி இயல்புமா ருளவே".**

நெடிலின் இறுதி லகர லகரவீறுகளுள் குறியதன் இறுதி லகரம் போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவதும் உண்டு.

**(எ-கா)** கால் குறிது, காற்குறிது.

**நெல், செல், கொல், சொல் - சொற்புணர்ச்சிகள்**

**"நெல்லும் செல்லும் கொல்லும் சொல்லும்**

**அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல".**

நெல், செல், கொல், சொல் என்னும் நான்கு பெயர்களும் அல்வழியிலும் வேற்றுமை இயல்பினவாய் லகரம் றகரமாகத் திரியும்.

**(எ-கா)** நெற்கடிது, செற்கடிது, கொற்கடிது.

**இல் என்னும் சொல் வன்கணம் வருவழி நால்வகையான் முடிதல்**

**"இல்லென் கிளவி யின்மை செப்பின்**

**வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்**

**இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்**

**கொளத்தகு மரபின் ஆகிட னுடைத்தே".**

இல் எனும் சொல் வீட்டைக் குறிக்காமால் இல்லாமையை உணர்த்தும் போது அல்வழியில் வல்லெழுத்து மிகுதலும் ஐகாரம் இடையில் வருதலும் இயல்பாதலும் ஆகாரம் மிகுந்து முடிதலும் ஆகியவை வருமிடங்களும் உண்டு.

**(எ-கா)** இல்லைக்கல், இல்லைகல், இல்கல்.

**வல் என்னும் சொல் புணர்தல்**

**"வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே".**

வல் என்னும் சூதாடு கருவியை உணர்த்தும் சொல் தொழிற்பெயர்க்குக் கூறிய படி இருவழியும் புணரும். அதாவது உகரம் பெற்று வல்லெழுத்து வரின் மிகுந்தும் ஞநமவ வரின் இயல்பாயும் புணரும்.

**(எ-கா)** வல்லுக்கடிது, வல்லுச் சிறிது, வல்லு விளையாட்டு

**வல், நாய் பலகை – எனும் வருமொழியொடு புணர்தல்**

**"நாயும் பலகையும் வரூஉங் காலை**
**ஆவயின் உகரம் கெடுதலும் உரித்தே**
**உகரம் கெடுவழி அகரம் நிலையும்".**

வல் எனும் சொல்லின் முன் நாயும், பலகையும் வருமொழியாய் வரும்போது அங்கு உகரம் கெடாது நிற்றலேயன்றி கெட்டு அகரம் வந்து சேர்தலுமுண்டு.

**(எ-கா)** வல்ல நாய், வல்லப்பலகை

**பூல் வேல் ஆல் சொற்புணர்ச்சிகள்**

**"பூல்வேல் என்றா ஆல்என் கிளவியொடு**
**ஆமுப் பெயர்க்கும் அம்இடை வருமே".**

பூல், வேல், ஆல் என்ற பெயர்களோடு வேற்றுமைக் கண் அம்முச்சாரியை இடையில் வரும்.

**(எ-கா)** பூலங்கோடு, வேலங்கோடு, ஆலங்கோடு

**லுகர ஈற்றுத் தொழிற்பெயர்ப் புணர்ச்சி**

**"தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெயர் இயல".**

லுகர ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் ஞகர ஈற்றுத் தொழிற்பெயரின் இயல்பினதாய் வரும். அதாவது அல்வழியிலும் வேற்றுமையிலும் வல்லெழுத்து வரின் உகரமும் வல்லெழுத்தும் பெறும். மென்கணமும் இடைக்கணமும் வரின் உகரம் பெறும்.

**(எ-கா)** கல்லுக்கடிது, பின்னல் கடிது, கல்லு நீண்டது.

**வெயில் 'அத்'தும் 'இன்'னும் பெறுதல்**

**"வெயிலென் கிளவி மழையியல் நிலையும்".**

வெயில் என்னும் சொல் மழைக்கு ஓதிய இயல்பிற்றாய் முடியும். அத்துச் சாரியையும் இன் சாரியையும் பெறும்.

**(எ-கா)** வெயிலத்துக் கொண்டான், வெயிலிற் கொண்டான்

**வகர ஈறு**

**வகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி**

**அவ் என்பதன் புணர்ச்சி**

**"சுட்டுமுத லாகிய வகரஇறுதி**

**முற்படக் கிளந்த உருபியல் நிலையும்".**

அவ் - என்பது வேற்றுமைக்கண் உருபு புணர்ச்சியது இலக்கணப்படி வற்றுச் சாரியை பெறும்.

**(எ-கா)** அவற்றுக்கோடு, இவற்றுக்கோடு, உவற்றுக்கோடு, அவற்றின் கொம்பு.

**அதற்கு அல்வழி முடிபு**

**"வேற்றுமை யல்வழி ஆய்த மாகும்".**

வகரம் திரிந்து ஆய்தம் ஆகும்.

**(எ-கா)** அஃகடிய, இஃகடிய, உஃகடிய

**வகர வீறு மென்கணத்துடன் புணர்தல்**

**"மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத் தாகும்".**

அவ் - மென் கணம் வரின் அம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும்.

**(எ-கா)** அஞ்ஞான், இஞ்ஞான், உஞ்ஞான்

வகரவீறு இடைக்கணம் உயிர்கணங்களுடன் புணர்தல்

**"ஏனவை புணரின் இயல்பென மொழிப".**

அச் சுட்டு முதலாகிய வகரவீறு ஒழிந்த இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணரின் அவ் வகரம் திரியாது இயல்பாக முடியும்.

**(எ-கா)** அவ்யாழ், இவ்யாழ், உவ்யாழ்

**ஊகரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பாதல்**

**"ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே".**

ஏனைய வகர ஈற்றுத் 'தெவ்' என்னும் சொல்லீறு ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பாய் வரும் உகரம் மட்டும் பெற்றும் உகரத்தோடு வல்லெழுத்தும் பெற்றும் வரும். மென்கணம், இடைக்கணம் வரின் இயல்பாக வரும்.

**(எ-கா)** தெவ்வுக்கடிது, தெவ்வு மாட்சி, தெவ்வுக்கடுமை

## ழகர ஈறு

### ழகர ஈற்றின் வேற்றுமைப் புணர்ச்சி

**"ழகார இறுதி ரகார இயற்றே"**

ழகார ஈற்றுப்பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார ஈற்றின் இயல்பு படி வல்லெழுத்து மிகுந்து முடியும்.

**(எ-கா)** பூழ்க்கால், பூழ்ச்சிறகு(பூழ்-காடை)

### தாழ், தமிழ் என்னும் சொற்கள் புணர்தல்

**"தாழ் என் கிளவி கோலொடு புணரின்**

**அக்குஇடை வருதல் உரித்து மாகும்".**

தாழ் என்னும் சொல் கோல் என்னும் சொல்லோடு புணரும்போது வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச் சாரியையும் இடையில் வரும்.

**(எ-கா)** தாழ்க்கோல், தாழக்கோல்

**"தமிழ்என் கிளவியும் அதனோ ரற்றே".**

தமிழ் என்னும் சொல்லும் அதனோடு ஒரு தன்மையதாய் வல்லெழுத்து மிகுதலன்றி அக்கும் பெற்று முடியும்.

**(எ-கா)** தமிழ்க்கூத்து, தமிழக்கூத்து.

### குமிழ் என்னும் மரப்பெயர் 'அம்'முச் சாரியை பெறுதல்

**"குமிழ் என் கிளவி மரப்பெய ராயின்**

**பீர்என் கிளவியொடு ஓரியற் றாகும்".**

குமிழ் என்னும் சொல் மரத்தை உணர்த்தும் பெயராயின் பீர் என்னும் சொல் இயல்பினதாய் வந்து மெல்லெழுத்தும் அம்முச்சாரியையும் பெறும்.

**(எ-கா)** குமிழ்ங்கிளை, குமிழஞ்செதில், குமிழம்பூ

**பாழ் வன்கணத்தொடு மென்கணம் உறழ்ந்து முடிதல்**

**"பாழ் என் கிளவி மெல்லெழுத் துறழ்வே".**

பாழ் என்னும் சொல் வல்லெழுத்தொடு மெல்லெழுத்து மிகுந்தும் உறழ்ந்தும் முடியும்.

**(எ-கா)** பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு

**ஏழ் அன்சாரியைப் பெறுதல்**

**"ஏழென் கிளவி உருபியல் நிலையும்".**

ஏழ் என்னும் எண்ணுப் பெயரின் இறுதி உருபுப்புணர்ச்சிப்படி அன் சாரியை பெறும்.

**(எ-கா)** ஏழன் காயம், ஏழன் கணக்கு.

**அளவு நிறைப்பெயர்கள் வருவழி 'ஏழ்" எழுவாதல்**

**"அளவும் நிறையும் எண்ணும் வருவழி**
**நெடுமுதல் குறுகலும் உகரம் வருதலும்**
**கடிநிலை யின்றே ஆசிரி யர்க்க".**

"ஏழ்" முன் முகத்தலளவை, நிறுத்தலளவை, எண்ணுப்பெயர்கள் வரின் நெட்டெழுத்தாகிய முதல் குறுகலும் ழகரத்தின் மேல் ஓர் உகரம் சேர்தலும் உண்டு.

**(எ-கா)** எழுகலம், எழுசாடி, எழு கழஞ்சு

**ஏழுடன் பத்து, ஆயிரம், நூறாயிரம் வருதல்**

**"பத்தென் கிளவி ஒற்றிடை கெடுவழி**
**நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி".**

ஏழ் என்பதனுடன் பத்து என்னும் எண் வரின் அப்பத்து எனும் எண்ணின் இடையிலுள்ள ஒற்றுக்கெட்டு அங்கு ஆய்தப்புள்ளி வரும்.

(எ-கா) எழுபஃது

**"ஆயிரம் வருவழி உகரம் கெடுமே".**

ஏழ் என்பதன் முன் ஆயிரம் வரும்போது முன் பெற்ற உகரம் கெடும்.

**(எ-கா)** ஏழாயிரம்

**"நூறூர்ந்து வரூஉம் ஆயிரக் கிளவிக்குக்**

**கூறிய நெடுமுதல் குறுக்கம் இன்றே".**

ஏழ் முன் நூறுடன் வரும் ஆயிரம் என்ற சொல்லுக்கு முற்கூறிய நெடுமுதல் குறுகுதல் இல்லை.

**(எ-கா)** ஏழ் நூறாயிரம், எழுநூறாயிரம்.

## பேரெண்ணுப்பெயர் வருவழியும் ஏழ் மேலைமுடிபே பெறுதல்

**"ஐஅம் பல்லென வரூஉம் இறுதி**

**அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்".**

ஏழ் என்னும் சொல் ஐ, அம், பல் எனும் இறுதிகளையுடைய பொருட்பெயரல்லாத எண்ணுப்பெயர்கள் வருமிடத்து முற்கூறிய அவ்வியல்போடு நிற்கும்.

**(எ-கா)** ஏழ் தாமரை, ஏழ் வெள்ளம், ஏழாம்பல்

## ஏழ் உயிர்க்கணம் வருவழியும் அற்றாதல்

**"உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது".**

ஏழ் என்பதன் முன் உயிர் முதன்மொழிகள் வரினும் அப்பண்பில் திரியாது நெடுமுதல் குறுகி உகரம் பெறாது இயல்பாக வரும்.

**(எ-கா)** ஏழகல், ஏழுழக்கு, ஏழொன்று, ஏழிரண்டு.

## கீழ் வேற்றுமையில் உறழ்தல்

**"கீழென் கிளவி உறழத் தோன்றும்".**

கீழ் என்னும் சொல் உறழ்ச்சியாகத் தோன்றும்.

**(எ-கா)** கீழ்குளம், கீழ்க்குளம்

**ளகார ஈறு**

## ளகார ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

**"ளகார இறுதி ணகார இயற்றே"**

ளுகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண் ணகார ஈற்று இயல்பிற்றாய் வந்து வன்கணம் வரின் ளகாரம் டகாரமாய்த் திரியும்.

**(எ-கா)** முட்செடி, முட்குறை, முட்சிறை

**மென்கணம் வருவழி ளகாரம் ணகாரமாதரல்**

**"மெல்லெழுத் தியையின் ணகார மாகும்".**

னகர ஈற்றுப்பெயர் மெல்லெழுத்து முதன்மொழி வரின் ணகரமாகத் திரியும்.

**(எ-கா)** முண்முனை, முண்ஞெரிந்தது, முண்மாண்டது.

**ளகர ஈற்று அல்வழிப்புணர்ச்சி**

**"அல்வழி யெல்லாம் உறழ்என மொழிய".**

ளகர ஈற்று அல்வழிப் புணர்ச்சிகள் எல்லாம் திரிந்தும் திரியாதும் உறழ்ந்தும் முடியும்.

**(எ-கா)** முள்கடிது, முட்கடிது, கள்கொடிது, கட்கொடிது.

**தகரம் வருவழி ளகரம் ஆய்தமாகவும் திரிதல்**

**"ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே**

**தகரம் வரூஉங் காலை யான".**

தகர முதன்மொழி வரின் ளகரம் டகரமாகத் திரியாமல் ஆய்தமாய்த் திரிந்து நிற்றலும் உண்டு.

**(எ-கா)** முஃடீது, முட்டீது என வரும்.

**சில ளகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி**

**"நெடியத னிறுதி இயல்பா குநவும்**

**வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்**

**போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே".**

நெட்டெழுத்தின் பின் நிற்கும் சில ளகர ஈற்றுச் சொற்கள் திரியாது இயல்பாக வருதலும் அல்வழியில் வேற்றுமைப் புணர்ச்சி போல் திரிந்து முடிதலும் உண்டு.

**(எ-கா)** வாள்கடிது, கோள்கடிது, தோட்கடிது, நாட்கடிது.

**ளகர ஈற்றுத் தொழிற்பெயர்ப் புணர்ச்சி**

**"தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல".**

ளகார ஈற்றுத் தொழிற்பெயரெல்லாம் வேற்றுமையிலும் அல்வழியிலும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் முடியும். வன்கணம் வந்தால் வல்லெழுத்து உகரம் பெற்றும் ஞநமவ வந்தவழி உகரம் பெற்றும் முடியும்.

**(எ-கா)** துள்ளுக்கடிது, துள்ளுச்சிறிது, துள்ளு நன்று

## இருள், புள், வள், மக்கள் என்னும் சொற்கள் புணர்தல்

**"இருள்என் கிளவி வெயிலியல் நிலையும்".**

இருள் என்னும் சொல்லுக்கு 'வெயில்' என்னும் சொல்போல அத்தும் இத்தும் சாரியைகளாக வரும்.

**(எ-கா)** இருளத்துக்கொண்டான், இருளிற்சென்றான்

**"புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல".**

புள், வள் என்னும் சொற்கள் தொழிற்பெயர்க்கு ஓதிய இயல்பினவாய் வல்லெழுத்து வரின் உகரம் பெற்றும் வல்லெழுத்து மிகுந்தும், ஞநமவ வரின் இயல்பாயும் புணரும்.

**(எ-கா)** புள்ளுக்கடிது, வள்ளுக்கடிது, புட்கடிது, வட்கடிது, புள்ளுக்குலம், வள்ளு நீண்டது.

**"மக்கள் என்னும் பெயர்நிலைக் கிளவியும்**

**தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்தே".**

மக்கள் என்னும் பெயர்ச் சொல்லின் இறுதி ளகரம் தக்க இடமறிந்து வல்லொற்றாகத் திரிதலும் உண்டு. திரியாது இயல்பாகும் இடங்களும் உண்டு.

**(எ-கா)** மக்கள் பலர், மக்கட்கை.

### புறனடை

**"உணரக் கூறிய புணரியல் மருங்கின்**

**கண்டுசெயற்கு உரியவை கண்ணினர் கொளலே".**

புள்ளி ஈறுகள் நின்று நான்கு கணத்தோடும் புணரும் விதம் நன்கு பதியுமாறு கூறப்பட்டுள்ளது. அவ்வாறு கூறியவற்றை மனங்கொண்டு, மொழியின் இயல்பையும் வழக்காற்றையும் ஆராய்ந்து பிற முடிபுகளை அமைத்துக் கொள்க.

**(எ-கா)** விழன்குளம், விளன்சேறு - இயல்பாய் முடிந்தது.

பொன்னப்பத்தம் - அக்குப் பெற்று முடிந்தது.

# அலகு – 4

## குற்றியலுகரப் புணரியல்

**குற்றியலுகர வகையும் பெயரும்**

**"ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொடர் இடைத்தொடர்**
**ஆய்தத் தொடர்மொழி வன்தொடர் மென்தொடர்**
**ஆயிரு மூன்றே உகரம் குறுகிடன்".**

இரண்டு எழுத்தானாகிய ஈரெழுத்தொரு மொழியும், உயர்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர் ஆகிய ஆறு மொழிகளிலும் உகரம் குறுகி வரும்.

**(எ-கா)** நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு

**இடைத்தொடரில் ஈறொற்று வராமை**

**"அவற்றுள்**
**ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொட ராகா".**

அவற்றுள் ஈர் ஒற்றுத் தொடர்மொழிகளில் இடைத்தொடர் வராமல் வன்றொடர் மென்றொடர் மொழிகள் வரும்.

**(எ-கா)** ஈர்க்கு, மொய்ம்பு

**இருவழியிலும் குற்றியலுகரம் புணர்தல்**

**"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்**
**எல்லா இறுதியும் உகர நிறையும்".**

அல்வழியிலும், வேற்றுமையிலும் மேற்கூறிய ஆறு இடங்களிலும் உகரம் குறுகும்.

**(எ-கா)** நாகு கடிது.

### குற்றுகரப் பொதுப்புணர்ச்சி

**வன்தொடர்க் குற்றுகரப் புணர்ச்சி**

**"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி**
**தொல்லை இயற்கை நிலையலும் உரித்தே".**

வன்தொடர்க் குற்றுகரம் எதிதே வல்லெழுத்து வருமிடத்து குற்றுகரமாய் அரைமாத்திரை பெற்று நிற்றலுமுண்டு.

**(எ-கா)** கொக்குக்கடிது, கொக்குக்கடுமை.

**குற்றியலுகரம் புணர்மொழியில் வருமாறு**

**"யகரம் வருவழி இகரங் குறுகும்**
**உகரக் கிளவி துவரத் தோன்றாது".**

யகர முதன்மொழி வரும்போது நிலைமொழிக் குற்றுகரம் இகரமாகத் திரிந்து குறுகி ஒலிக்கும்.

**(எ-கா)** நாடியாது, வரகியாது, தெள்கியாது, எஃகியாது.

## குற்றுகர ஈற்று வேற்றுமைப் புணர்ச்சி

**நெடில்தொடர் உயிர்த்தொடர்களின் புணர்ச்சி**

**"ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்**
**வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்**
**தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி".**

ஈரெழுத்தாலாகிய நெடில்தொடர்க் குற்றுகரமும் உயிர்த்தொடர்க் குற்றுகரமும் வேற்றுமைப் புணர்ச்சியின் மொழியிடையே இன ஒற்றும் வல்லெழுத்தும் மிகுந்து வரும்.

**(எ-கா)** யாட்டுக்கால், நாட்டுப்பற்று, பயற்றுக்குழம்பு

**இனவொற்று இடைமிகா**

**"ஒற்றிடை யினமிகா மொழியுமா ருளவே**
**அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே".**

மேற்கூறியவாறு இனஒற்று மிகாத மொழிகளும் உண்டு. அவற்றுள் வல்லெழுத்து மிகுந்து வராது.

**(எ-கா)** நாகுகால், பழகுதமிழ், வரகுகதிர், யாட்டின்கால், வரகின் கால்.

**இடைத்தொடரும் ஆய்தத்தொடரும் இயல்பாதல்**

**"இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்**

**நடைஆ இயல என்மனார் புலவர்".**

இடைத்தொடரும், ஆய்தத்தொடரும் வேற்றுமையில் வல்லினம் வரின் இயல்பாகும்.

**(எ-கா)** தெள்குகால், தெள்குசிறை, எஃகுகனம்.

**வன்தொடர் மென்தொடர்களின் புணர்ச்சி**

**"வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்**
**வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே**
**மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்**
**வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்".**

வன்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் மென்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும் வந்த வல்லெழுத்து ஒற்று இடைமிகும். அவ்விரண்டு ஈற்றினுள் மெல்லொற்றுத் தொடர்மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம் இறுதி வல்லொற்றும் கிளை வல்லொற்றுமாய் முடியும்.

**(எ-கா)** கொக்குக்கால், கொக்குச்சிறகு, கொக்குத்தலை, கொக்குப்புறம், எட்குக்குட்டி, கொக்கின்கால், குரங்கின் கால்,

**மரப்பெயர்க்கிளவி 'அம்' முச் சாரியை பெறுதல்**

**"மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை".**

வன்தொடராகவோ மென்தொடராகவோ வரும் மரப்பெயர்களுக்கு 'அம்' சாரியை வரும்.

**(எ-கா)** தேக்கங்கிளை, வேப்பம்பு+

**மென்றொடர் வன்றொடராகத்திரியா மரப்பெயர்**

**"மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே".**

மெல்லொற்று வல்லொற்றாய் மாறாத மரப்பெயரும் உண்டு.

**(எ-கா)** குருந்தஙக்கிளை, புன்கம்பு+

**நெடில்தொடர் வன்தொடர் 'அம்' முச்சாரியை பெறல்**

**"ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்**
**அம்இடை வரற்கும் உரியவை உளவே**

**அம்மர பொழுகும் மொழிவயி னான".**

ஈரெழுத்து நெடில் தொடரும், வன்தொடரும் அம்முச்சாரியை பெற்று வருவதும் உண்டு.

**(எ-கா)** ஏறங்கோள், வட்டம்போர்

## மெல்லொற்றுத்திரியாது 'அக்'குப் பெறுதல்

**"ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்**

**அக்கிளை மொழியும் உளவென மொழிப"**

ஒற்று முன் நின்ற நிலை திரியாது அக்குச் சாரியையொடு பிற சாரியையும் வரும்.

**(எ-கா)** குன்றக்கூகை, குன்றக்குடி, மன்றப்பெண்ணை

## எண்ணுப்பெயர்க் கிளவி "அன்" சாரியை பெறுதல்

**"எண்ணுப் பெயர்க்கிளவி உருபியல் நிலையும்".**

குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்கள் உருபு புணர்ச்சியில் கூறியபடி அன் சாரியை பெறும்.

**(எ-கா)** ஒன்றன்காயம், இரண்டன்காயம்.

## வண்டும் பெண்டும் 'இன்' சாரியை பெறுதல்

**"வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும்".**

வண்டு என்னும் சொல்லும் பெண்டு என்னும் சொல்லும் இன் சாரியையொடு பொருந்தி முடியும்.

**(எ-கா)** வண்டின்கால், பெண்டின்கால்.

## பெண்டு 'அன்'னும் பெறுதல்

**"பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்".**

பெண்டு என்னும் சொல்லிற்கு அன் சாரியை பொருந்தி வரும்.

**(எ-கா)** பெண்டன் கை

**வினாப்பெயரும் சுட்டுப்பெயரும் அன்னொடு பொருந்துதல்**

**"யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய**

**ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்".**

யாது என்னும் வினாப்பெயரிறுதியும் சுட்டு முதலாகிய ஆய்தத்தொடர் இறுதியும் உருபு புணர்ச்சிக்கு ஓதியபடி அன் சாரியை பெறும். சுட்டுப்பெயரிறுதி சாரியை பெற்றபின் ஆய்தம் கெடும்.

**(எ-கா)** யாதன்கோடு, அதன்கோடு, இதன்கோடு, உதன்கோடு.

**அல்வழியில் ஆய்தம் கெடாமை**

**"முன்னுயிர் வருமிடத் தாய்தப் புள்ளி**

**மன்னல் வேண்டும் அல்வழி யான".**

சுட்டு முதலாகிய ஆய்தத்தொடரின் முன் உயிர்முதன்மொழி வருமிடத்து அல்வழியில் ஆய்தப்புள்ளி கெடும்.

**(எ-கா)** அஃதடை, இஃதடை, உஃதடை

**வன், மென் இடைக்கணங்கள் வருவழி ஆய்தம் கெடுதல்**

**"ஏனைமுன் வரினே தானிலை யின்றே".**

அச்சுட்டு முதலாகிய ஆய்தத் தொடரின் முன் உயிரொழிந்த ஏனைய கணங்கள் வரின் அவ் ஆய்தம் கெடும்.

**(எ-கா)** அதுகடிது, இது கடிது, உது கடிது.

**குற்றியலுகரம் அல்வழியில் இயல்பாதல்**

**"அல்லது கிளப்பின் எல்லா மொழியும்**

**சொல்லிய பண்பின் இயற்கை யாகும்".**

அல்வழியில் எல்லா ஈற்றுக் குற்றுகரமும் இயல்பாய் முடியும்.

**(எ-கா)** நாகு கடிது, வரகு கடிது, எஃகுகடிது.

**வன்தொடர்க் குற்றுகரப் புணர்ச்சி**

**"வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே".**

வல்லொற்றுக் குற்றுகரம் அல்வழியில் வல்லெழுத்து மிகும்.

**(எ-கா)** கொக்குக்கடிது, கொக்குச்சிறிது, கொக்குப்பெரிது.

**ஆங்கு, ஈங்கு, ஊங்கு, யாங்கு ஆகியவை அன்னவாதல்**

**"சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழியும்**
**யாவினா முதலிய மென்றொடர் மொழியும்**
**ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை".**

சுட்டாகிய சினைபெயழுத்து நீண்ட மென்தொடர்ச் சுட்டுப்பெயரும் யா என்னும் வினாவை முதலாகவுடைய மென்தொடர்ச் சொல்லும் வல்லெழுத்துப் பெறும்.

**(எ-கா)** ஆங்குக்கொண்டான், ஈங்குக்கொண்டான் ஊங்குக்கொண்டான், யாங்குக்கொண்டான்.

**யாங்கு இயல்பும் ஆதல்**

**"யாவினா மொழியே இயல்பு மாகும்".**

யா என்னும் வினா இயல்பாயும் முடியும்.

**(எ-கா)** யாங்கு கொண்டான், யாங்கு படித்தான்.

**நான்மொழியும் மென்கணம் திரியாமை**

**"அந்நான் மொழியுந் தந்நிலை திரியா".**

சுட்டு முதலாகியனவும் யா, வினா முதன் மொழியும் ஆகிய நான்கும் தம் மெல்லொற்று நிலை திரிந்து வல்லொற்று ஆகாது முடியும்.

**(எ-கா)** அங்குக்கொண்டான், இங்குக்கொண்டான், உங்குக்கொண்டான், எங்குக்கொண்டான்.

**உண்மை உணர்த்தும் 'உண்டு' எனும் சொற்புணர்ச்சி**

**"உண்டென் கிளவி உண்மை செப்பின்**
**முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்**
**மேனிலை யொற்றே ளகாரம் ஆதலும்**
**ஆமுறை யிரண்டும் உரிமையும் உடைத்தே**
**வல்லெழுத்து வரூஉங் காலை யான".**

உண்டு எனும் சொல் உண்மை எனும் பண்ணையுணர்த்தின் வல்லெழுத்து வருமிடத்து, இறுதியாக நிற்கும் குற்றியலுகரம் தான் ஏறி நின்ற மெய்யொடும் கெடும். பின்னர் அதன்மேல் நின்ற ணகார ஒற்று ளகரமாய் திரியும்.

**(எ-கா)** உள்பொருள், உண்டுபொருள் எனவும்

உண்டு காணம், உண்டு தாமரை எனவும் வரும்.

**இருதிசைப் புணர்ச்சியில் ஏகாரச் சாரியை பெறுதல்**

**"இருதிசை புணரின் ஏயிடை வருமே".**

இரண்டு திசைகள் தம்மில் புணரின் ஏ என்னும் சாரியை இடையில் வரும்.

**(எ-கா)** வடக்கே கிழக்கு, வடக்கே தெற்கு

**அத்திசைப் பெயரொடு கோணத்திசை புணர்தல்**

**"திரிபுவேறு கிளப்பின் ஒற்றும் இறுதியும்**
**கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்**
**ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்**
**தெற்கொடு புணருங் காலை யான".**

இரண்டு திசைகள் புணர்ந்து கோணத்திசையை சொல்லுமிடத்து இடையில் நின்ற ஒன்றும் இறுதிக் குற்றுகரமும் கெடும். தெற்கொடு புணருமிடத்து றகார ஒற்றுத் திரிந்து னகாரமாகும்.

**(எ-கா)** வடகிழக்கு, வடமேற்கு, வடகடல், வடவரை, கீழ்கூரை, மேல்கூரை.

## குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் புணர்ச்சி

**பத்தின் முன் ஒன்று முதல் எட்டு**

**"ஒன்றுமுத லாக எட்டனிறுதி**
**எல்லா எண்ணும் பத்தன் முன்வரின்**
**குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே**
**முற்றஇன் வரூஉம் இரண்டலங் கடையே".**

ஒன்று முதலாக எட்டு ஈறாகவுள்ள அனைத்து எண்ணுப் பெயர்களும் வருமொழியாகப் பத்து என்பது முன்னே வரின் அதிலுள்ள குற்றியலுகரம் மெய்யொடு கெடும். இன் சாரியை அவ்விடத்தே வந்து நிறைவு செய்யும். இரண்டு என்ற எண்ணுப்பெயரிடத்து முடிய இன் வந்து புணரும்.

**(எ-கா)** பதினொன்று, பதின்மூன்று, பதிநான்கு, பதினைந்து, பதினாறு, பதினேழு, பதினெட்டு, ஒன்பதின்பால், ஒன்பதின் கூறு என வரும்.

**பத்தின் முன் இரண்டு மற்றும் ஆயிரம் வருதல்**

**"பத்தன்ஒற் றுக்கெட னகாரம் இரட்டல்**

**ஒத்த தென்ப இரண்டுவரு காலை".**

இரண்டு என்ற எண்வரின் பத்து என்பதன் குற்றியலுகர ஈற்றுடன் தகர ஒற்றும் கெட(ப) னகர ஒற்றுத்தோன்றி (பன்) இரட்டிக்கும்.

**(எ-கா)** பன்னிரண்டு

**"ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது".**

பத்து என்னும் எண்ணுப்பெயர்முன் ஆயிரம் என்பது வரினும் முன்விதிப்படி ஈறுகெட்டு 'இன்' பெறும்.

(எ-கா) பதினாயிரம்

**நிறைப்பெயரும் அளவுப் பெயரும் இன் சாரியை பெறுதல்**

**"நிறையு மளவும் வரூஉங் காலையும்**

**குறையா தாகும் இன்னென் சாரியை".**

பத்து என்பதன் முன் நிறுத்தலளவைப் பெயரும் முகத்தலளவைப் பெயரும் வரும்போது இன் சாரியை வரும்.

**(எ-கா)** பதின் கழஞ்சு, பதின்தொடி, பதின்கலம்.

**பத்து இடையொற்றுக்கெட ஆய்தமாதல்**

**"ஒன்றுமுதல் ஒப்பான் இறுதிமுன்னர்**
**நின்ற பத்தன் ஒற்றுக்கெட ஆய்தம்**
**வந்துஇடை நிலையும் இயற்கைத் தென்ப**
**கூறிய இயற்கை குற்றிய லுகரம்**
**ஆறன் இறுதி அல்வழி யான".**

ஒன்று முதல் ஒன்பது ஈறாகச் சொல்லப்படும் எண்ணுப் பெயர்களின் இறுதி முன்னர் வருமொழியாய் வந்து நின்ற பத்து என்பதன் இடைநின்ற தகர ஒற்றுக்கெட அவ்விடத்தே ஆய்தம் வந்து நிலைபெறும். அவற்றுள் ஆறு தவிர்த்தவற்றில் முற்கூறியவாறு நிலைமொழி ஈற்று ஈற்றுக் குற்றியலுகரம் மெய்யொடும் கெடும்.

**(எ-கா)** ஒருபஃது, இருபஃது

**ஒன்று இரண்டு என்பன ஒரு எனத் திரிதல்**

**"முதலீ ரெண்ணினொற்று ரகரம் ஆகும்**

**உகரம் வருதல் ஆவயி னான".**

முதல் இரண்டு எண்களின் ஒற்று ரகர ஒற்றாய் மாறும். அவ்விடத்து உகரம் வருதல் வேண்டும். நிலைமொழி ஈற்றுக் குற்றுகரம் கெடுதல் பொதுவிதி.

**(எ-கா)** ஒருபஃது

**இரண்டன் ரகரம் கெடுதல்**

**"இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு**

**நடைமருங் கின்றே பொருள்வயி னான".**

அவ்விரண்டு என்னும் எண்ணிற்கு இடைநின்ற ரகரம் அம் மொழி பொருளாமிடத்து நடக்கும் இடம் இன்றிக் கெடும்.

**மூன்று ஆறு முன் பத்து**

**"மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும்**

**மூன்றன் ஒற்றே பகாரம் ஆகும்".**

மூன்று ஆறு என்ற எண்கள் நெடிலாகிய முதல் குறுகும்.

**(எ-கா)** முப்பஃது, அறுபஃது

**நான்கன் னகரம் றகரம் ஆதல்**

**"நான்க னொற்றே றகாரம் ஆகும்".**

நான்கு என்னும் எண்ணின்கண் நின்ற னகார ஒற்று றகர ஒற்றாய் முடியும்.

**(எ-கா)** நாற்பஃது

**ஐந்தன் ஒற்று மகரமாயும் எட்டன் ஒற்று ணகரமாயும் ஆதல்**

**"ஐந்தன் ஒற்றே மகாரம் ஆகும்".**

ஐந்து என்னும் எண்ணிலுள்ள நகார ஒற்று மகார ஒற்றாய் முடியும்.

**(எ-கா)** ஐம்பஃது.

**"எட்டன் ஒற்றே ணகாரம் ஆகும்"**

எட்டு என்னும் எண்ணிலுள்ள டகர ஒற்று ணகர ஒற்றாய் மாறும்.

**(எ-கா)** எண்பஃது

## ஒன்பது, பத்து தொண்ணூறு ஆதல்

**"ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்**
**முந்தை ஒற்றே ணகாரம் இரட்டும்**
**பஃதென் கிளவி பாய்தபக ரங்கெட**
**நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி**
**ஒற்றிய தகரம் றகாரம் ஆகும்".**

ஒன்பது என்னும் சொல்லின் ஒகரத்திற்கு மேலாகத் தகரம் ஒற்றாய் மிகுந்து வரும். முன் சொன்ன ஒகரத்தின் முன்னர் னகர ஒற்று இரண்டு ணகார ஒற்றாய் மிகுந்து வரும். (வருமொழியாகிய) பத்து என்னும் சொல் தன் கண் பகரமும் ஆய்தமும் கெட (நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர்) ஊகாரமாகிய எழுத்து நிற்றல் வேண்டும். (வருமொழியாகிய பத்து என்பதன் ஈற்றதன் மேல் ஏறிய உகரம் கெடாது பிரிந்து நிற்ப) ஒற்றாய் நின்ற தகரம் றகார ஒற்றாகும்.

**(எ-கா)** தொன்னூறு

## ஒன்று முதல் ஒன்பது வரை நிலைமொழியாக நிற்ப அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு

**"அளந்தறி கிளவியும் நிறையென் கிளவியும்**
**கிளந்த இயல தோன்றும் காலை".**

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப்பெயர்களின் முன்னர் முகத்தலளவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் வருமொழியாகத் தோன்றுமிடத்து முன்பு எண்ணுப்பெயர்கட்கு சொல்லிய இயல்பினதாய்ப் புணரும். அதாவது ஆறு என்னும் எண் தவிர்த்த ஏனைய எண்ணுப்பெயர்களின் குற்றியலுகர ஈறு மெய்யொடும் கெடும். முதலீர் எண்களின் ஒற்றுக்கள் ரகரமாகத் திரியும். இரண்டு எனும் எண்ணின் ரகர உயிர்மெய் கெடும். மூன்றும் ஆறும் குறுகும். மூன்றன் ஒற்றுப் பகரமாகும். நான்கன் ஒற்று றகரமாகும். ஐந்தன் ஒற்று மகரமாகும். எட்டன்; ஒற்று ணகரமாகும்.

**(எ-கா)** ஒரு கலம், இருகலம், எண்கழஞ்சு.

### மூன்று, ஐந்து ஆகியவற்றுடன் அளவைப் பெயர்கள்

**"மூன்றன் ஒற்றே வந்த தொத்கும்".**

மூன்று என்னும் எண்ணில் நின்ற னகர ஒற்று, வருமொழி முதலில் வரும் அளவுப்பெயர்களின் வல்லொற்றுக்களை ஒத்துத் திரியும்.

**(எ-கா)** முக்கலம், முப்பானை, முச்சாடி.

**"ஐந்த னொற்றே மெல்லெழுத் தாகும்".**

ஐந்து என்னும் எண்ணில் நின்ற நகர ஒற்று வருமொழி முதலில் வரும் வல்லெழுத்திற்கு ஏற்ற மெல்லெழுத்தாய் மாறும்.

**(எ-கா)** ஐங்கலம், ஐஞ்சாடி, ஐந்தூதை, ஐம்பானை.

### மேலைய இரண்டு திரிபும் வன்கணம் வருவழியே என்பது

**"கசதப முதன்மொழி வரூஉங்காலை".**

மூன்றன் ஒற்று வருமொழி முதல்போல் ஒப்பதும் ஐந்தன் ஒற்று மெல்லெழுத்தாவதும் அளவுப்பெயர், நிறைப்பெயர்களில் கசதப முதன்மொழிக்கண் வந்தவிடத்தாகும்.

**(எ-கா)** அறுங்கலம், அறுகழஞ்சு, அறுந்தொடி, அறும்பலம்.

### மென்கணமும் உயிர்க்கணமும் வருவழி எட்டு 'எண்' எனவே நிற்றல்

**"நமவ என்னும் மூன்றொடு சிவணி**

**அகரம் வரினும் எட்டன்முன் இயல்பே".**

நமவ என்னும் மூன்றும் உயிர் முதன்மொழியும், அளவைப் பெயர்களாக எதிரே வரின், எட்டு நின்ற நிலைமொழியின் முன் இயல்பாக முடியும்.

**(எ-கா)**எண்கலம், எண் சாடி, எண் நாழி, எண் அகல்.

### ஐந்து, மூன்று இவற்றின் இடையொற்று ந ம வருவழி, அவ்வந்த ஒற்றாகவே திரிதல்

**"ஐந்தும் மூன்றும் நமவருங் காலை**

**வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே".**

ஐந்தும் மூன்றும் ஆகிய எண்கள் ந, ம முதன்மொழிகள் வரின், தம்மிடமுள்ள ஒற்று, வந்த ஒற்றொடு ஒத்த ஒற்றாக முடியும்.

**(எ-கா)** முந்தாழி, மும்மண்டை, ஐந்தாழி, ஐம்மண்டை

### மூன்றன் ஒற்று வகரம் வருவழி அவ்வகரமாகத் திரிதல்

**"மூன்றன் ஒற்றே வகரம் வருவழித்**

**தோன்றிய வகரத்து உருவா கும்மே".**

மூன்று என்னும் எண்ணின் னகர ஒற்று, வகர முதன்மொழி வரின் வகரமாய் மாறும்.

**(எ-கா)**முவ்வட்டி

### நான்கு ஐந்து முன் வகர முதன்மொழி அளவுப்பெயர்கள்

**"நான்கன் ஒற்றே லகார மாகும்".**

நான்காம் எண்ணில் நின்ற னகர ஒற்று லகர ஒற்றாய்த் திரியும்.

**(எ-கா)** நால்வட்டி

**"ஐந்த னொற்றே முந்தையது கெடுமே".**

ஐந்தும் என்னும் எண்ணின்கண் நின்ற நகர ஒற்று (வகரம் வந்தால்) தன் முன் நின்ற வடிவாய் மாறிக் கெடும்.

**(எ-கா)**ஐவட்டி

### ஒன்று இரண்டு உயிர்க்கணம் வருவழி, ஓர் ஈர் ஆதல்

**"முதலீ ரெண்ணின் உயிர்வரு காலைத்**

**தவலென மொழிப உகரக் கிளவி**

**முதனிலை நீடல் ஆவயி னான".**

முதல் இரண்டு எண்களின் முன் உயிர் முதன்மொழி வரின், உகரம் கெடும். அவ்வெண்ணின் முதலில் நின்ற எழுத்துக்கள் அவ்விடத்து நீண்டு முடியும்.

**(எ-கா)**ஓரகல், ஈரகல், ஓருழக்கு, ஈருளக்கு

### உயிர்வழி மூன்று நான்கு ஐந்து என்பன வகரம் வருவழிப் போல் திரிதல்

**"மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியும்**

**தோன்றிய வகரந் தியற்கை யாகும்".**

மூன்று, நான்கு, ஐந்து எனும் எண்ணுப்பெயர்கள் மேல் தோன்றி முடிந்த வகரத்து இயல்புடன் நடக்கும். மூன்றில் வகர ஒற்றாயும் நான்கில் லகர ஒற்றாயும் ஐந்தின்கண் ஒற்றுக் கெட்டும் முடியும்.

**(எ-கா)** முவ்வகல், நாலகல், ஐயகல்

முவ்வுழக்கு, நாலுழக்கு, ஐயுழக்கு

**உழக்கு வருவழி, பொதுவிதியான் குறுகிநின்ற மூன்று நீண்டு முடிதலும் உரித்து**

**"மூன்றன் முதனிலை நீடலும் உரித்தே**

**உழக்கென் கிளவி வழக்கத் தான".**

மூன்று என்பதன் முதல் எழுத்து 'உழக்கு' எதிரே வரின் குறுகாது நீண்டு முடியும்.

**(எ-கா)** மூவுழக்கு

**குறுகி நின்ற 'ஆறு' நீண்டு முடிதல்**

**"ஆறென் கிளவி முதல்நீ டும்மே".**

ஆறு என்பதின் முதலெழுத்து உயிர் முதன்மொழி வந்தால் நீண்டு முடியும்.

**(எ-கா)** ஆறகல், ஆறுழக்கு.

**'ஒன்பது' நாற்கணமும் வருவழி 'இன்' பெற்று முடிதல்**

**"ஒன்பா னிறுதி உருவுநிலை திரியாது**

**இன்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே".**

ஒன்பது என்னும் எண்ணின் இறுதி தன் வடிவுநிலை திரியாது இன் சாரியை பெற்று முடிதல் வேண்டும்.

**(எ-கா)** ஒன்பதின் கலம், ஒன்பதின் சாடி, ஒன்பதின் அகல்.

**ஒன்று முதல் ஒன்பான் எண்களின் முன் நூறு வருதல்**

**"நூறுமுன் வரினுங் கூறிய இயல்பே".**

ஒன்று முதல் ஒன்பது வரை முன்னிற்க நூறு வருமொழியாய் வரினும் மேற்கூறிய பத்தொன்பது பற்றிய இயல்புப்படி புணரும்.

**(எ-கா)** ஒரு நூறு, இரு நூறு, அறு நூறு, எண்ணூறு

**மூன்று, நான்கு, ஐந்து, ஒன்பது ஆகியவற்றின் முன் நூறு வருதல்**

**"மூன்றன் ஒற்றே நகாரம் ஆகும்".**

மூன்றும் என்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று நகர ஒற்றாக வரும்.

**(எ-கா)** முந்நூறு

**"நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா".**

நான்கு, ஐந்து ஆகிய எண்களின் ஒற்றுக்கள் நிலை திரியாது முடியும்.

**(எ-கா)** நானூறு, ஐந்நூறு

**"ஒன்பான் முதனிலை முந்துக்கிளந் தற்றே**
**முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்**
**நூறென் கிளவி நகார மெய்கெட**
**ஊஆ வாகும் இயற்கைத் தென்ப**
**ஆயிடை வருதல் இகார ரகாரம்**
**ஈறுமெய் கெடுத்து மகாரம் ஒற்றும்".**

ஒன்பது என்னும் சொல்லின் முதல் நின்ற ஒகரம் மேல் பத்தொன்பதினோடு புணரும் வழிக் கூறியவாறு ஒகரமிசை தகர ஒற்று மிகும். அவ் ஒகரத்தின் முன்னின்ற னகர ஒற்று இரண்டு ளகர ஒற்றாம், நூறு என்னும் சொல்லும் நகரமாகிய மெய் கெட ஊகாரம் ஆகாரமாகும் இயல்பினைப் பெற்று வரும் என்பர் புலவர். அம்மொழியிடையே ஓரிகரமும், ரகாரமும் வரும். இதற்கு ஈறாகிய குற்றியலுகரத்தினையும் அஃது ஏறி நின்ற றகார ஒற்றினையும் கெடுத்து ஒரு மகரம் ஒற்றாய் வந்து முடியும்.

**(எ-கா)** தொள்ளாயிரம்

**ஒன்று இரண்டு முன் ஆயிரம் வருதல்**

**"ஆயிரக் கிளவி வரூஉங் காலை**

**முதலீ ரெண்ணின் உகரம் கெடுமே"**

ஆயிரம் என்னும் சொல் ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்களின் முன் வருமிடத்து முதலீர் எண்கள் பெற்று நின்ற உகரம் கெடும்.

**(எ-கா)** ஓராயிரம், இராயிரம்

**ஒகர இகரங்கள் நீடலும் உண்டு**

**"முதனிலை நீடினும் மான மில்லை".**

முற்கூறிய புணர்ச்சியில், ஒகர இகரங்கள் நீண்டு முடியினும் குற்றமில்லை.

**(எ-கா)**ஓராயிரம், ஈராயிரம்.

**மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஒன்பது ஆகியவற்றின் முன் ஆயிரம் வருதல்**

**"மூன்றன் ஒற்றே வகாரம் ஆகும்".**

மூன்று எனும் எண்ணின் னகர ஒற்று வகர ஒற்றாகும்.

**(எ-கா)**முவ்வாயிரம்.

**"நான்கன் ஒற்றே லகாரம் ஆகும்".**

நான்கு என்னும் எண்ணின் னகர ஒற்று லகர ஒற்றாகும்.

**(எ-கா)**நாலாயிரம்

**"ஐந்தன் ஒற்றே யகாரம் ஆகும்".**

ஐந்து என்னும் எண்ணின் நகர ஒற்று யகர ஒற்றாகும்.

**(எ-கா)**ஐயாயிரம்

**"ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்**

**ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்".**

ஆறு என்னும் எண்ணின் குற்றியலுகரம் தான் ஏறிய றகர ஒற்று கெடாது நிற்க உகர ஈறு கெடும்.

**(எ-கா)**ஆறாயிரம்.

**"ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது**

**இன்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே".**

ஒன்பது என்னும் எண்ணுப்பெயர் இறுதி, ஆயிரத்தொடு புணரும் போது குற்றுகரம் திரியாமல் இன் சாரியை பெறும்.

**(எ-கா)**ஒன்பதினாயிரம்

**ஒன்று முதல் ஒன்பான்கள் முன்னர் நூறாயிரம் முடியுமாறு**

**"நூறா யிரமுன் வரூஉங் காலை**

**நூறெ னியற்கை முதனிலைக் கிளவி".**

நூறாயிரம் எனும் அடையெடுத்த சொல் முன்னே வருமிடத்து, நிலை மொழியாகிய ஒன்று எனும் எண் நூறு என்பதனோடு புணர்தற்கு ஓதிய இயல்புப்படி முடியும். அதாவது ஈறு கெட்டு னகரம் ரகரமாய் உகரம் பெற்றுப் புணரும்.

**(எ-கா)**ஒரு நூறாயிரம், இருநூறாயிரம்

**நூறு என்பதனோடு, ஒன்று முதல் ஒன்பாக்கள்**

**"நூறென் கிளவி ஒன்றுமுதல் ஒன்பாற்(கு)**

**ஈறுசினை ஒழிய இனவொற்று மிகுமே".**

நூறு என்னும் சொல் ஒன்றுமுதல் ஒன்பான்களோடு புணருமிடத்து ஈறாகிய குற்றியலுகரமும் அவ்வுகரம் ஏறிய மெய்யாகிய சினையும் கெடாது நிற்பச் சினைக்கு இனமாகிய இனவொற்று மிகுந்து முடியும்.

**(எ-கா)**நூற்றொன்று, நூற்றிரண்டு, நூற்றிமூன்று.

**நூறுமுன் ஒரு பஃது முதலியன**

**"அவையுர் பத்தினும் அத்தொழிற்றாகும்".**

அந்நூறு என்பது ஒன்று முதல் ஒன்பான் வரையிலான அவை ஊர்ந்த பத்துக்களோடு புணருமிடத்தும் அத்தொழிற்றாய் இன ஒற்று மிகுந்து முடியும்.

**(எ-கா)**நூற்றொருபஃது, நூற்றிருபஃது

**நூறுமுன் அளவுப்பெயர், நிறைப்பெயர்**

**"அளவும் நிறையும் ஆயியல் திரியா**

**குற்றிய லுகரமும் ஒல்லெழுத் தியற்கையும்**

**முற்கிளந் தன்ன என்மனார் புலவர்".**

முகத்தலளவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் வருமிடத்து நூறு என்பதன் இனஒற்று மிகுந்து மேற்கூறிய இலக்கணத்தினின்றும் வேறுபடாது வரும். அவ்விடத்துக் குற்றியலுகரம் கெடாமையும், வன்தொடர் மொழியாய் நின்றமையின் வல்லெழுத்து மிகுந்தும் இயல்பாயும் முன்பு வன்தொடர் மொழிக்குக் கூறியவாறு அமையும்.

**(எ-கா)**நூற்றுக்கலம், நூற்றுக்கழஞ்சு, நூற்றுப்பானை

**ஒருபஃது முதலியவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பது எண்கள்**

**"ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி**

**ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே**

**நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்".**

ஒன்று முதல் எட்டு ஈறாகப் பத்து என்னும் எண் ஊரப்பட்ட சொற்கள் வருமொழியாக ஒன்று முதல் ஒன்பான் வரையிலான சொற்கள் வந்து புணருமிடத்து இடைநின்ற ஆய்தம் கெட்டு முடிதல் வேண்டும். அவ்விடத்தே இனஒற்றாக ஒரு தகர ஒற்று மிகுந்து முடியும்.

**(எ-கா)**ஒருபத்தொன்று, இருபத்தொன்று, ஒருபத்திரண்டு, இருபத்திரண்டு, ஒருபத்து மூன்று, இருபத்து மூன்று.

**ஒருபஃது முதலியவற்றின் முன் ஆயிரம்**

**"ஆயிரம் வரினே இன்என் சாரியை**
**ஆவயின் ஒற்றிடை மிகுதல் இல்லை".**

மேற்கூறிய ஒன்று முதலாகிய பத்தூர் கிளவிமுன் ஆயிரம் வரின் இன் சாரியை இடையில் வரும். அவ்விடத்து முற்கூறிய ஒற்று இடைமிகுதல் இல்லை.

**(எ-கா)**ஒருபதினாயிரம்

**அவற்றோடு அளவுப் பெயரும் நிறைப்பெயரும் வந்து முடிதல்**

**"அளவும் நிறையும் ஆயியல் திரிமா".**

அவ் ஒற்று முதலாகிய பத்தூர் கிளவி முன், முகத்தலளவைப் பெயரும் நிறுத்தலளவைப் பெயரும் வரின் முன்பு ஆயிரத்துடன் புணரும் வழி நிகழ்ந்த இயல்பில் திரியாது முடியும்.

**(எ-கா)**ஒருபதின் கலம், இருபதின் கலம், ஒருபதின் கழஞ்சு.

**ஒன்று முதல் எண் முன் பொருட்பெயர்**

**"முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்**
**ஞநமத் தோன்றினும் யவவந் தியையினும்**
**முதனிலை யியற்கை என்மனார் புலவர்".**

முதனிலை எண்ணாகிய ஒன்று என்பதன்முன் வல்லெழுத்து முதல் வரினும் ஞநமக்களாகிய மெல்லெழுத்து முதன்மொழி வரினும் யவக்களாகிய இடையெழுத்து முதன்மொழி வரினும் முன்பு எய்தியபடி ஈறு திரிந்தும் திரியாதும் முடியும்.

**(எ-கா)**ஒரு கல், ஒரு பறை, இரு கனி, இரண்டுக்கல்

**அவ்வெண் உயிரெழுத்து வருவழி 'ஓர்' எனத் திரிதல்**

**"அதனிலை உயிர்க்கும் யாவரு காலையும்**

**முதனிலை ஒகரம் ஓவா கும்மே**
**ரகரத் துகரந் துவரக் கெடுமே".**

ஒற்றின் முன் உயிர் முதன்மொழி வரினும் யா முதன்மொழி வந்த இடத்தும் முதலிலுள்ள ஒகரம் ஓகாரமாகும். அவ்விடத்தில் ரகரத்து உகரம் முற்றக் கெட்டு முடியும்.

**(எ-கா)**ஓரடை, ஓராடை எனவும்

இருவடை, இருவாடை எனவும்

ஓரிரவு, ஓர்யான் ஓருடல் எனவும் வரும்.

### இரண்டு முதல் ஒருபான்கள் முன்னர் 'மா' வந்து புணர்தல்

**"இரண்டுமுதல் ஒன்பான் இறுதி முன்னர்**
**வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்**
**மகர அளவொடு நிகரலும் உரித்தே".**

இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள எண்முன்னர், உலக வழக்கில் வழங்குகின்ற மா என்னும் நீட்டலளவைப் பெயர் வந்து புணரின் அளவுப் பெயரோடு ஒத்து வேறுபட முடிவனவும் இயல்பாக முடிதலும் உண்டு.

**(எ-கா)**இரண்டுமா, இருமா, மூன்றுமா, மும்மா.

### லகார னகார ஈற்றுச் செய்யுள் முடிபுகள்

**"லன வரூஉம் புள்ளி யிறுதிமுன்**
**உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்**
**அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்**
**செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும்**
**வேற்றுமை குறித்த பொருள்வயி னான".**

ல, ன என்று சொல்லும் புள்ளி ஈறு முன் உம் என்னும் சாரியையும் கெழு என்னும் சாரியையும் அவைபோல்வன பிறவும், செய்யுளுள் வரும் தொடரின் கண் தாம் வருவதற்கொத்த சொற்களிடையே தோன்றி, வேற்றுமைப் பொருண்மை தோன்ற நிலை பெறும்.

**(எ-கா)**'வானவரி வில்லுந் திங்களும்', 'கான்கெழு நாடு'.

'துறைகெழு மாந்தை, கல்கெழு நாடன்'.

**எழுத்ததிகாரத்துக்குப் புறனடை**

மருவின் பாத்தி எனப்பட்டு வழக்கில் திரிந்து காணப்படுவன

**"உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்**
**குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி**
**நேறிப்பட வராக் குறைச்சொற் கிளவியும்**
**உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்**
**ஐம்பா லறியும் பண்புதொகு மொழியும்**
**செய்யும் செய்த என்னுங் கிளவியின்**
**மெய்ஒருங் கியலும் தொழில்தொகு மொழியும்**
**தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்**
**எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்**
**அன்னவை எல்லாம் மருவின் பாத்திய**
**புணரியல் நிலையிடை உணரத் தோன்றா".**

உயிரும் புள்ளியும் இறுதியாகி குறிப்பு, பண்பு இசையின்கண் தோன்றி, ஒரு நெறிப்பட வராக் குறைசொற்களாகிய உரிச்சொற்களும். உயர்திணை, அஃறிணையாகிய அவ்விரண்டு திணையிடத்தும் உளவாய ஐம்பாலினையும் அறியவரும் பண்புத்தொகை சொற்களும் செய்யும் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களிடையே ஒருங்கு நடக்கும் வினைச்சொல் தொக்க வினைத்தொகையும் எண்கள் தம்மியல்பு கூறுமிடத்துத் தம்முன் தாம் வரும் எண்களின் தொகுதியும் உட்படப்பிறவும் அத்தன்மைய எல்லாம் உலகின்கண் மருவி நடக்கும் வழக்கிடத்தன. புணரியலாகிய இலக்கணத்தின்கண் அவற்றின் முடிபு விளங்கத் தோன்றா.

**(எ-கா)**விண்விணைத்து, கார்கறுத்தது, ஒல்லொலித்தது.

**புறனடை**

**"கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்**
**வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்**
**விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்**
**வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழூக்கல்**
**நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்".**

முன்பு எடுத்துக் கூறியன அல்லாதவை செய்யுளுள் திரிந்து முடிவனவும் வழக்கு நடக்குமிடத்து மரூஉ மொழியாய்த் திரிந்து வழங்குவனவும் முன்சொன்ன இலக்கணத்தினின்றும் வேறுபடத் தோன்றுமானால் நல்ல அறிவினது ஆராய்ச்சியின்படி இருவகை வழக்கும் நடக்கும் பக்குவத்தை அறிந்து, அதன்படி வழங்குக என்று புலவர் சொல்லுவார்.

# அலகு – 5

## தொல்காப்பியம் - நன்னூல் வேறுபடும் இடங்கள்

இரண்டு வேறுபட்ட காலத்தில் எழுதப்பட்ட இரண்டு இலக்கண நூல்களின் ஒற்றுமை, வேற்றுமைகளுக்குப் பல அடிப்படைகள் இருக்கின்றன. மொழி அமைப்பில் அமைந்துள்ள ஒற்றுமை, இலக்கணக் கோட்பாட்டு ஒற்றுமை, மொழி உணர்வு ஒற்றுமை ஆகியவைகளின் அடிப்படையில் ஒற்றுமைகள் அமையலாம். வேற்றுமைக்குப் பல காரணங்கள் உண்டு. தொல்காப்பியத்தில் பல சூத்திரங்களில் கூறப்பட்டது. நன்னூலில் ஒரு சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் நன்னூல் வழிநூல்.

**சார்பெழுத்துக்கள்**

தொல்காப்பியர் சார்பெழுத்துக்களை மூன்று வகைகளாக பிரித்து கூறுகிறார்;. ஆவை

1. குற்றியலிகரம்
2. குற்றியலுகரம்
3. ஆய்தம்

நன்னூலார் சார்பெழுத்துக்களை 10 வகைகளாக பிரித்து கூறுகிறார். ஆவை

1. உயிர்மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலிகரம்
6. குற்றியலுகரம்
7. ஐகாரக் குறுக்கம்
8. ஔகாரக் குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தக்குறுக்கம்

சார்ந்து வருதலை மரபாகவுடைய மூன்றற்கும் "அவைதாம், குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்" என முன்னருரைத்த முறையே ஈண்டு இலக்கணம் கூறுகின்றார். அம்மூன்றும் ஒரு மொழி புணர்மொழி ஆகிய இரண்டிடத்தும் வரும். அவற்றை ஒருமொழிக் குற்றியலிகரம், புணர்மொழிக் குற்றியலிகரம், ஒருமொழிக் குற்றியலுகரம், புணர்மொழிக் குற்றியலுகரம், ஒருமொழியாய்தம், புணர்மொழியாய்தம் என ஆறாகப் பிரித்து முறையே 34 முதல் 39 வரை உள்ள 40-ல் அவ்வொருமொழி ஆய்தத்திற்கு இலக்கணம் கூறியுள்ளார்.

**குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
**யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்**
**காவயின் வரூஉ மகர மூர்ந்தே - (தொல்.34)**

இஃது ஒருமொழிக்கண் குற்றியலிகரம் நிற்குமாறு கூறுகின்றது.

(இ-ள்) ஒருமொழிக் குற்றியலிகரம் தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்கும் சொல்லிற்கு பொருந்தவரும் உரையசைச் சொல்லாகிய 'மியா' என்னும் சொல்லின் சினையாகிய 'யா' என்னும் உறுப்பின் மேல் மகரவொற்றினை ஊர்ந்து நிற்றல் வேண்டும்.

**(உ-ம்)** கேண்மியா என வரும்.

மியாவென்னுஞ் சொல் இடம், மகரம் பற்றுக்கோடு;. 'யா' என்பதும் இகரம் அரை மாத்திரை பெறும்;.

**புணரியல் நிலையிடைக் குறுகலு முரித்தே**

**யுணரக் கூறின் முன்னர்த் தோன்றும். – (தொல்.35)**

இது குற்றியலிகரம் புணர்மொழி அகத்தும் வரும்.

(இ-ள்) அக்குற்றியலிகரம் ஒருமொழி மட்டுமின்றி இருமொழி தம்முள் புணர்கின்ற பொழுது குறுகும். அதற்கு இடமும் பற்றுக்கோடும் உணரக் கூறத் தொடங்கின் அவை குற்றியலுகரப் புணரியலுள்ளே கூறப்படும்.

'குறுகலும்' என்புழி உம்மை, புணரியல் நிலையிடையும் என மாற்றியுரைக்கப்பட்டது.

'குறுகலும்' என்புழி உம்மை, புணரியல் நிலையிடையும் என மாற்றியுரைக்கப்பட்டது.

"யகரம் வரும்வழி இகரம் குறுகும், உகரக் கிளவி துவரத்தோன்றாது"(410) என்ற சூத்திரத்து அறுவகைக் குற்றியலுகர ஈற்றின் முன்னும் யகர முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து நிலைமொழிக் குற்றுகர வெழுத்து முற்றத் தோன்றாது. ஆண்டோர் இகரம் வந்து அரைமாத்திரை பெற்று நிற்கும்" என சுட்டிக் காட்டுகிறார்.

இவ்விருவகைக் குற்றியலிகரத்தையும் நன்னூலார்,

**யகரம் வரக்குற ளுத்திரி யிகரமும்**
**அசைச்சொன் மியாவி னிகரமுங் குறிய. – (நன்.93)**

என்பதனால் தொகுத்தோதினார்.

ஆறீற்றுக் குற்றியலுகரமும் யகரம் வரும்வழி இகரமாகத் திரியும் என்பார்; பவணந்தியார். "யகரம் வரக்குறள் உதிரியிகரம்" என்ற நூற்பாவின்படி குறுகிய உகரம் கெட்டு இகரம் தோன்றும் என்பதே தொல்காப்பியனார் கருத்தாகும்.

**நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்**
**குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே. – (தொல்.36)**

இஃது ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடுங் கூறுகின்றது.

(இ-ள்) நெட்டெழுத்தின் பின்னும் தொடர்மொழி இறுதியிலும் வரும் வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து குற்றியலுகரம் நிற்றல் வேண்டும்.

'நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீனும்;, வல்லெழுத்து ஆறினையும் ஊர்ந்து வரும்.

நெட்டெழுத்திம்பர்க் குற்றியலுகரத்தை ஈரெழுத்தொரு மொழியெனப் பெயர் தந்தும், தொடர்மொழியீற்றினை உயிர்த்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், வன்றொடர், மென்றொடர் என ஐவகையாக்கியும் பின்னர்க் கூறுவர். இவ்வாறே நன்னூலாரும்,

**நெடிலோ டாய்த முயிர்வலி மெலியிடை**
**தொடர்மொழி யிறுதி வன்மையு+ ருகரம்**
**அஃகும் பிறமேற் றொடரவும் பெறுமே. – (நன்.94)**

என்று குற்றுகரத்தை அறுவகையாக்கிக் கூறுவர். தொடர்மொழியென்பதனை ஆசிரியர் தொல்காப்பியனார் "இரண்டிறந்திசைக்கும் தொடர்மொழி" எனக்கொண்டது போல் அல்லாமல் பவணந்தியார் ஈரெழுத்து ஒரு மொழியையும் தொடர்மொழியாகக் கொண்டதால் பிறமேற்றொடர்தல் நெடிலுக்கில்லை.

**புணர்மொழி குற்றியலுகரம்**

**இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே**
**கடப்பா டறிந்த புணரிய லான. - (தொல்.37)**

(இ-ள்) அக்குற்றியலுகரம் புணர்மொழியிடைப்படின் குறுகுமிடமும் உண்டு.

இடைப்படினுங் குறுகுமென உம்மையை மாற்றியுரைப்பார் இளம்பூரணர்.

இடைப்படிற் குறுகுமிடத்தைக் குற்றியலுகரப் புணரிலுள் "வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித், தொல்லையியற்கை நிலையலுமுரித்தே" என்பதனாற் சுட்டினார். 'இச்சூத்திரம் குற்றியலுகரம் புணர்மொழிக்கண் தன் அரைமாத்திரையிற் குறுகி வருமென்கின்றது எனக் கருத்துரைத்து, அவ்வுகரம் ஒரு மொழி அன்றிப் புணர்மொழி இடத்தும் தன் அரைமாத்திரையிலிருந்து குறுகும் இடமும் உண்டு. உகரங் குறுகுமிடம் ஈரெழுத்தொருமொழி முதல் அறுவகையிடம் எனக்கூறிய ஆசிரியர், அது புணர்மொழி இடத்து தன் அரைமாத்திரையில் இருந்து குறைந்து ஒலிக்குமிடத்தைப் புணர்மொழிக் குற்றியலுகரம் ஆகும்.

"அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும், எல்லா விறுதியும் உகரம் நிறையும்" , ஆறு தொடரின்கண்ணும் குற்றியலுகரம் வருமெனப் பொருள் கொள்ளாது. ஒரு மாத்திரையில் குறுகாது நிற்குமெனப் பொருள் கொண்டு, அவ்வாற்றான் எல்லா இறுதிக் குற்றியலுகரமும் தன் அரை மாத்திரையில் இருந்து மிகுந்து ஒலிக்கும் எனவும்;

வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து முதன்மொழி வருமிடத்து முற்கூறிய அரைமாத்திரையாகிய பழைய இயல்பின் கண்ணே நிற்றலும் உரித்து எனவும் கூறி, இச்சூத்திரம் தன்னியல்பாகவே அரை மாத்திரை பெற்றுச் சிறுபான்மையாய் வருமிடத்தையே சுட்டும் என்று கூறுகிறார் இளம்பு+ரணர். ஒருமொழிக்கண்ணும் தம் அரை மாத்திரை இயல்பாக வரும் குற்றியலுகரங்களை அரை மாத்திரையிலிருந்து மிகுந்து ஒலிக்கும், வல்லொற்றுத்தொடர்மொழி வல்லெழுத்து வருமிடத்தில் அரை மாத்திரையில் சிறிது குறைந்தொலிப்பனவற்றை அரை மாத்திரையியல்பாக ஒலிக்கும் என கூறுகிறார் ஆசிரியர். 'அவ்வியல் நிலையுமேனை மூன்றே' என்பதனால் குற்றியலுகரத்திற்கு அரை மாத்திரையியல்பெனக் கூறினார். வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வரும்போது அரைமாத்திரை பெறாது மிகுந்து ஒலிக்கும் என்கிறார் ஆசிரியர். அதனால் ஆசிரியர் கருத்துப்படி ஆறீற்றுக் குற்றியலுகரமும் தன் அரை மாத்திரையின் மிகாது இசைக்குமென்பதே பொருத்தமுடையது.

புணர்மொழிக் குற்றியலுகரமாகிய இதனைப் பற்றி நன்னூலாசிரியர் குறிப்பிடவில்லை.

**ஒருமொழி ஆய்தம்**

**குறியதன் முன்ன ராய்தப் புள்ளி**

**உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே. - (தொல்.38)**

(இ-ள்) புள்ளிவடிவினதாகிய ஆய்தம் குற்றெழுத்தின் முன்பு உயிரோடு கூடிய வல்லெழுத்து ஆறன்மேல் வரும்.

**(உ-ம்)** எஃகு, கஃசு, கஃடு, அஃது, கஃபு, பஃறி என வரும்.

குற்றெழுத்தின் முன்னரும் உயிரோடு புணர்ந்த வல்லெழுத்தின் மேலுமாக இவ்வாய்தவொலி வருமென்று தொல்காப்பியர் வரையறை கூறியதனால் அவர் காலத்து அவற்றிடையேயல்லது ஆய்தம் பயின்று வழங்காமை தெளியப்படும். இவ்வாய்தவொலி வல்லெழுத்தாறன் மேலதாய் நின்று அவற்றின் வல்லோசையை மெலிவித்து நிற்பதாகும். இவ்வாறு வல்லெழுத்துக்களுக்கு முன்னர் நின்று அவற்றினோசையை மென்மைப்படுத்தி நிற்கும் இயல்பிற்று ஆய்தம் என்பதனையுணர்ந்த காலஞ்சென்ற உயர்திரு மாணிக்க நாயகரவர்கள் இவ்வெழுத்தின் துணையால் பிறமொழியில் வழங்கும் எல்லா வொலிகளையும் தமிழ்மொழிக்கண் குறித்து வழங்குதல் கூடுமென்று ஆராய்ந்து விளக்கியுள்ளார்கள். இவ்வெழுத்தின் துணையால் காஃபி முதலிய பிற மொழிச் சொற்களைத் தமிழ் ஒலி எழுத்துக்களால்

வழங்க வழி காட்டியவரும் அவரேயாவர். இத்தொல்காப்பியச் சூத்திரத்தை நன்னூலார் முற்றாய்தம் என்ற பகுதியில் தானெடுத்து மொழிதல் என்னும் உத்தியால் எடுத்துக் கூறினார்.

**புணர்மொழி ஆய்தம்**

**ஈறியன் மருங்கினு மிசைமை தோன்றும். - (தொல்.39)**

(இ-ள்) நிலைமொழியீறு வருமொழி முதலொடு புணர்ந்து நடக்குமிடத்தில் வேறோரெழுத்தின் ஓசையின்கண் ஆய்தம் தோன்றும்.

லகர ளகர வீற்றுச் சொற்கள் அல்வழிக்கண் தகரமுதன்மொழி வருமிடத்து ஆய்தமாகத் திரிந்து முடியும் (369, 399) எனவும், வகரவீற்றுச் சுட்டுப்பெயர் அவ்வழிக்கண் வல்லெழுத்து முதன்மொழி வருமிடத்து அவ்வகரமெய் ஆய்தமாகத் திரிந்து முடியும் (379) எனவும் புள்ளி மயங்கியலில் கூறுகின்றார். அவ்வாறு ல, ள, வீற்று மொழிகள் அல்வழிக்கண் வல்லெழுத்து முதன்மொழியோடு புணர்தலியன்ற நிலைமைக்கண் நிலைமொழியீற்றிலுள்ள அம்மெய்கள் ஆய்தமாகத் திரியும். ஆய்தம் தோன்றும் வேறோரு எழுத்தின் ஓசைக்கண்ணும் ஆய்த ஒலி திரிந்து தோன்றுவதால் "இசைமை தோன்றும்" என்றார்.

**(உ-ம்)** கஃறீது, முஃடீது, அஃகடிய எனவரும்.

**ஒருமொழி ஆய்தம்**

**உருவினு மிசையினு மருகித் தோன்று**
**மொழிக்குறிப் பெல்லா மெழுத்தி னியலா**
**ஆய்த மஃகாக் காலை யாள. - (தொல். 40)**

"ஒரு பொருளினது உருவத்தின் கண்ணும் ஓசையின் கண்ணும் சிறுபான்மையாய்த் தோன்றும் குறிப்பு மொழிகளெல்லாம் ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு நடவா. அவ்வாய்தம் தன் அரைமாத்திரையளவாய்ச் சுருங்கி நில்லாது நீண்டகாலத்து அந்நீட்சிக்கு" எனப்பொருள் கூறிக் 'கஃறென்றது என்பது உருவு, கஃறென்றது என்பது இசை' இளம்பு+ரணர் உதாரணம் காட்டினர்.

'நிறத்தின் கண்ணும் ஒலியின் கண்ணும் சிறுபான்மை ஆய்தந்தோன்றும் பொருள் குறித்தலையுடைய சொல்லும் அவை ஒழிந்த எல்லா மொழிகளும் ஒற்றெழுத்துக்கள் போல அரை மாத்திரையின் கண்ணும் சிறுபான்மை மிகுந்து ஒலிக்கும்'; எனப்பொருள் கூறினார்.

(இ-ள்) ஒரு பொருளினது நிறத்தின் கண்ணும் இசையின் கண்ணும் மாத்திரை பெருகித் தோன்றுங் குறிப்பு மொழிகள் எல்லாம் அந்நீட்சியைக் குறிப்பதற்கு தனியே ஆய்த எழுத்து வரும்பொழுது மாத்திரை அளவு குறுகி ஒலிக்காது.

**(உ-ம்)** 'கஃறென்னுங் கல்லதரத்தம்'

'சுஃறென்னுந் தண்தோட்டுப் பெண்ணை'

என முறையே நிறத்தினும் இசையினும் ஆய்தம் நீண்டு ஒலித்ததாயினும் அந்நீட்சிக்கு மற்றுறோரெழுத்து தேவைப்படாது. இச்சூத்திரத்தில் வந்த அருகி என்னுஞ் சொல்லுக்குப் பெருகி என்று தக்கயாகப்பரணி யுரையாசிரியர் பொருள் கூறினார். (தாழிசை-37)

இவற்றை ஆய்தம் சுருங்காத சொற்கள் எனவே ஆய்தவொலி சுருங்கும் சொற்களும் உள்ளன. நன்னூலாரும் லகர லகரவீற்றுப் புணர்மொழிக்கண் வரும் ஆய்தம் தன் அரை மாத்திரையிற் குறுகும் என்பதனை,

**லளவீற் றியைபினாம் ஆய்தம் அஃகும். - (நன்.97)**

என்ற சூத்திரத்தில் குறிப்பிட்டு எழுத்தின் எண் என்ற பகுதியில் ஆய்தக் குறுக்கும் எனத் தனியே ஓர் எழுத்தாக எண்ணினார்.

**உயிரளபெடை**

**குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்**

**நெட்டெழுத் திம்ப ரொத்தகுற் றெழுத்தே. – (தொல்.41)**

(இ-ள்) குறுகிய ஓசையையுடைய சொற்களில் நெட்டெழுத்துக்களின் பின்னர் தமக்கு இனமொத்த குற்றெழுத்துக்கள் அவ்வோசையை நிறைவிக்கும் என்பதாம்.

மேல் நெட்டெழுத்துக்கள் தாமே மூன்று மாத்திரை முதலாக ஓசைமிக்கு நில்லா எனவும், இரண்டு மாத்திரையினுமிகுத்து மூன்று முதலாக நெட்டெழுத்தினை நீட்ட விரும்புவோர், அம்மாத்திரையினைத் தருதற்குரிய எழுத்தினைக் கூட்டி எழுப்புதல் வேண்டும் எனவுங் கூறினார். இசை குன்றுவதான மொழிக்கண் நெட்நெழுத்தின் பின்னர் ஓசையை நிறைத்து நிற்பன அவற்றின் இனமொத்த குற்றெழுத்துக்களே என்பதனை இச்சூத்திரத்தாற் கூறினார். இதனால் அளபெடைக்கண் வோசையினை நிறைப்பன நெட்டெழுத்தின் பின்னர் கூட்டிய குற்றெழுத்துக்களே.

**(உ-ம்)** ஆஅடை, ஈஇகை எனவரும்.

செய்யுட்கண் இசை குன்றின் மொழிக்கு முதலினும் இடையி னும் கடையினும் நின்ற நெட்டெழுத்து ஏழும் அவ்வோசையை நிறைவிக்கத் தத்தம் மாத்திரையில் இருந்து மிகுந்து ஒலிக்கும் எனவும், அவற்றின்பின் வரிவடிவில் காணப்படும் இனமாய் குற்றெழுத்துக்கள் அவ்வாறு 'நெடில் அளபெடுத்தமையை அறிதற்கு என வரைந்த அறிகுறிகளே என்று கருதிய நன்னூலார்,

**இசைகெடின் மொழிமுத லிடைகடை நிலைநெடில்**
**அளபெழு மவற்றவற் றினக்குறில் குறியே. (நன். 91)**

எனச் சூத்திரஞ் செய்தார். இங்ஙனம் நெடில் ஒன்றே அளபெடுத்து மூன்று மாத்திரையாக மிகுந்து ஒலிக்கும்.

நெடில் அளபெடுத்ததை அறிதற்கு வரும் வெறும் அறிகுறியே நெடிலின்பின் நின்ற குறில் எனவும் ஒருதலைதுணிதலாக்கி இவர் கூறியது. ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தொடு மாறுபடுகின்றது.

நன்னூலார் கூறியவாறு நெட்டெழுத்தே அளபெடுத்து நிற்க அதன் பின்னர் வருங் குற்றெழுத்து அறிகுறியாய் வந்ததாயின்,

**ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை**
**யாஅது மென்னு மவர்.**
**உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்**
**செறாஅய் வாழிய நெஞ்சு**
**அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசப்பிற்கு**
**நல்ல படாஅ பறை.**

என இலக்கியங்களில் இரு மாத்திரையுடைய நெட்டெழுத்து ஓரசையாகவும், ஒரு மாத்திரையுடைய குற்றெழுத்து ஓரசையாகவும் பிரிந்து, அசைகொள்ளப் படுதல் பொருந்தாது. செய்யுளில் வரும் உயிரளபெடை நெடிலோசையும் குறிலோசையும் என வேறு பிரித்து அசைகொள்ளப்படுதலால், நெடிலே மூன்று மாத்திரையிலிருந்து மிகுந்து ஒலிக்கும் என்றால்;, இரண்டு மாத்திரைக்கு மேல் மூன்று மாத்திரை அளவு ஒலிக்கக் கூடிய எழுத்து இல்லை. "மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே" என ஆசிரியர் கூறுகிறார். குறுகிய ஓசையுடைய மொழி வந்தால் நெட்டெழுத்துக்கு இனமான குற்றெழுத்து வந்து அவ் ஓசையை நிறைவிக்கும். இசை நிறைக்கும் என்னும் பயனிலைக்கு வினைமுதலாகிய குற்றெழுத்தினை வெறும் அறிகுறியென்றல் பொருந்தாமையானும் தொல்காப்பியர் விதியே அளபெடைக்கு பொருந்தும்.

**ஐ ஔ வென்னு மாயீ ரெழுத்திற்**
**கிகர வுகர மிசைநிறை வாகும். - (தொல்.42)**

இஃது ஒத்த இனமில்லாத ஐகார ஔகார மென்று கூறப்படும். அவ்விரண்டெழுத்திற்கும் முறையே ஈகார ஊகாரங்களுக்கினமான இகர உகரங்கள் குறுகிய ஓசையை உடைய மொழியின்கண் வந்து ஓசையை நிறைவிக்கும்.

அளபெடையில் வரும்போது இசைநிறைவிக்க வருவது குற்றெழுத்துக்களே ஆகும்.

'நெடில் அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே' எனவுரைத்த பவணந்தியாரும், தம் கொள்கைக்கு மாறாகக் "குற்றுயிர் அளபின்; ஈறாம் எனக்; கூறுதல் வேண்டும். இதனால் அளபெடையிற் குற்றெழுத்து ஒலித்து நிற்றலை நன்னூலாரும் தம் கொள்கையினை மறந்து உடன்படுகிறார்.

## ஆய்தம்

உருவினும் இசையினும் அருகித்தோன்றும் மொழிக்குறிப்பு ஆய்தம் என தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. நன்னூலார் இதைச் சுட்டவில்லை.

## சொற்களில் எழுத்து வருகை

ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, தொடர்மொழி என மொழி நிலையை மூன்றாகப் பகுப்பர் தொல்காப்பியர். ஆனால் நன்னூலார் ஓரெழுத்து ஒருமொழி, பலவெழுத்து ஒருமொழி என இருவகையாகப் பிரிப்பார்.

## மொழி முதல் எழுத்து

'ங'கரம் மொழி முதலாகும் என்பார் நன்னூலார். ச – அ, ஐ, ஔ என்ற மூன்றுடனும் முதலாகாது என்பார் தொல்காப்பியர். ச – எல்லா உயிருடனும் முதலாகும் என்பார் நன்னூலார். ஞ – ஆ, எ, ஒ என்ற மூன்றுயிரொடும் முதலாகும் என்பார் தொல்காப்பியர். ஞ – அ, ஆ, எ, ஒ என்ற நான்கனுடனும் முதலாகும் என்பார் நன்னூலார். ய – ஆகாரத்தோடு மட்டுமே மொழிமுதலாகும் என்பது தொல்காப்பியம்.

ய – அ, ஆ, உ, ஊ, ஒ, ஔ என்ற ஆறனுடனும் மொழி முதலாகும் என்பது நன்னூலார் கூறுவது.

**சாரியை**

சாரியைப் பற்றிக் குறிப்பிடும் போது, நன்னூலார் ஒரு பதத்தின் முன் விகுதியோ, பதமோ, உருபோ வந்து புணரும் போது ஒன்றோ பலவோ சாரியை இடம்பெறும் என்பார். பதத்தை அடிப்படையாகக் கொண்டு சாரியைகளை விளக்குதல் தொல்காப்பியத்தில் இல்லை.

**அவைதாம்**
**இன்னே வற்றே யத்தே யம்மே**
**ஒன்னே யானே யக்கே யிக்கே**
**அன்ன வென்ப சாரியை மொழியே. - (தொல்.119)**

சாரியை பற்றியும் இருவருக்கும் வேறுபாடு உண்டு. தொல்காப்பியர் கூறும் சாரியைகள் 9. இன், வற்று, அத்து, அம், ஒன், ஆன், அக்கு, இக்கு, அன். நன்னூலார் கூறும் சாரியைகள் 17. அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன. தொல்காப்பியர் சாரியைப் பற்றிய செய்திகளை உருபியலில் பேசுவார். நன்னூலார் உருபு புணரியலில் பேசுவார்.

**னஃகான் றஃகா னான்க னுருபிற்கு. - (தொல். 123)**

இன், ஒன், ஆன், அன் என்னும் நான்கு சாரியைகளின் ஈற்றிலுள்ள னகரம் நான்காம் உருபு வரும் இடத்தில் றகரமாக திரியும் என்கிறார் தொல்காப்பியர்.

(எ-கா) விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு என வரும்.

**அத்தி னகரம் அகரமுனை யில்லை. - (தொ.125)**

(எ-கா) மக+அத்து + கை – மகத்துக்கை எனவரும். அத்து சாரியையின் அகரம் வராது.

**இக்கி னிகரம் இகரமுனை யற்றே. - (தொல். 126)**

(எ-கா) ஆடி +இக்கு +கொண்டான் - ஆடிக்குக்கொண்டான்.

இகர ஈற்றுச் சொல் முன்னர் வரும் இக்குச் சாரியையின் இகரம் அத்துச் சாரியையின் அகரம் போலக் கெட்டு இயல்பாக முடியும்.

**ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும். - (தொல் 127)**

(எ-கா) சித்திரை+ இக்கு +கொண்டான் - சித்திரைக்குக் கொண்டான்

இக்குச் சாரியையின் இகரம் கெடுதல் கருதி அதனை குகர சாரியையாக கூறுகிறார் நன்னூலார்.

சாரியைப் பற்றிக் குறிப்பிடும் போது, நன்னூலார் ஒரு பதத்தின் முன் விகுதியோ, பதமோ, உருபோ வந்து புணரும் போது ஒன்றோ பலவோ சாரியை இடம்பெறும் என்பார். பதத்தை அடிப்படையாகக் கொண்டு சாரியைகளை விளக்குதல் தொல்காப்பியத்தில் இல்லை.

எழுத்தின் சாரியை பற்றித் தொல்காப்பியர் புணரியலில் குறிப்பிடுவார். நன்னூலார் அவற்றை எழுத்தியல் இறுதியில் வைப்பார். மெய்யெழுத்துக்கள் அகரச்சாரியை பெறுதலையும் நன்னூலார் சுட்டுவர். மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும், என்று தொல்காப்பியர் அதனை நூல் மரபில் குறிப்பாகச் சுட்டுவார்.

உடம்படுமெய் பற்றி புணரியலில் கூறுகிறார் தொல்காப்பியர். நுன்னூலார் உயிரீற்றுப் புணரியலில் கூறுகிறார். மேலும் உருபு 'கொளல் வரையார்' என்று தொல்காப்பியர் விரிவுபடுத்தாமல் சென்றதை நன்னூலார்,

**'இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை**
**உயிர்வழி வவ்வும் ஏ முன் இவ்விருமையும்**
**உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும்'**

என்று பாகுபடுத்திச் செல்வார்.

இசையால் திரியும் எழுத்துக்கடன் இல்லாத புணர்ச்சியைத் தொல்காப்பியர் புணரியலில் கூற, நன்னூலார் பொதுவியலில் சுட்டுவார்.

நன்னூலார், விகுதிப்புணர்ச்சி, பதப்புணர்ச்சி, உருபுப்புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி என்ற நான்காக வகுத்துக் கொண்டது போல் தொல்காப்பியர் வகைப்படுத்தவில்லை.

'அத்தின் அகரம் அகரமுனை இல்லை' என்ற தொல்காப்பிய நூற்பா. அவ்வாறே நன்னூலாரால் எடுத்தாளப்படுவது குறிப்பிடத்தக்கது.

**புணர்ச்சிகள்**

புணர்ச்சி பற்றிய செய்திகளைத் தொல்காப்பியர் பல நூற்பாக்களில் அமைக்கின்றார். நன்னூலார் அவற்றைத் தொகுத்து எளிய முறையில் அமைக்கிறார்.

பொதுவாகப் புணர்ச்சி பற்றிச் சிந்திக்கும்போது

| | | |
|---|---|---|
| ஈற்றெழுத்து | + | முதல் எழுத்து |
| மெய் | + | உயிர் |
| மெய் | + | மெய் |
| உயிர் | + | மெய் |
| உயிர் | + | உயிர் |

என்ற வகையில் எழுத்துப் புணர்ச்சி பற்றிச் சிந்திக்க வேண்டியதாகிறது.

| | | |
|---|---|---|
| நிலைமொழி | + | வருமொழி |
| பெயர் | + | வினை |
| பெயர் | + | வினை |
| வினை | + | வினை |
| வினை | + | பெயர் |

என்ற வகையில் மொழியின் வகை அல்லது தன்மை பற்றிச் சிந்தித்துப் புணர்ச்சியை வகைப்படுத்த வேண்டுவதாகிறது.

புணர்மொழிகளின் பொருளை நோக்கி

1. அல்வழிப் புணர்ச்சி
2. வேற்றுமைப் புணர்ச்சி

என்று வகைப்படுத்தும் நிலை உள்ளது.

புணர்ச்சியின் தன்மையை நோக்கி, எழுத்தின் இயல்பும், திரிபும், மறைவும் நோக்கி,

1. இயல்பு புணர்ச்சி
2. விகாரப் புணர்ச்சி

என்று வகுக்க நேரிடுகிறது.

இந்நான்கு நிலைகளையும் தொல்காப்பியர் பல நூற்பாக்களில் விளக்கிச் செல்வார். நன்னூலாரோ,

**'மெய் உயிர் முதல் ஈறாம் இரு பதங்களும்**
**தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்**
**பொருளில் பொருந்துழி நிலைவருமொழிகள்**
**இயல்பொடு விகாரத்து இயைவது புணர்ப்பே"**

என்ற அனைத்தையும் ஒரே நூற்பாவில் சுருக்கித் தருவார்.

தொல்காப்பியர் வேற்றுமை, அல்வழி என்று பாகுபடுத்தினாலும் அல்வழிப் புணர்ச்சியாவன இன்னின்ன என்று சுட்டவில்லை. நன்னூலார்.

1. வினைத்தொகை
2. பண்புத்தொகை
3. உவமைத்தொகை
4. உம்மைத்தொகை
5. அன்மொழித்தொகை
6. எழுவாய்த்தொடர்
7. விளித்தொடர்
8. பெயரெச்சத்தொடர்
9. வினையெச்சத் தொடர்
10. வினைமுற்றத் தொடர்
11. குறிப்பு வினைமுற்றுத்தொடர்
12. இடைச்சொல் தொடர்
13. உரிச்சொல் தொடர்
14. அடுக்குத்தொடர்

எனப் பதினான்காகப் பகுத்து விளக்குகிறார்.

விகாரம் பற்றிக் கூறும் போது தொல்காப்பியர், மெய்பிறிதாதல், மிகுதல், குன்றல் என்பார். நன்னூலார் தோன்றல், திரிதல், கெடுதல் என்பார்.

**மெல்லெழுத்துத் தோன்றல்**

1. மரப்பெயர்கள் மெல்லெழுத்து மிகும்

அதங்கோடு, விளங்கோடு, செதில், தோல், பூ என வரும்.

**மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே. - தொல்.217**
**மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து**
**வரப்பெறு னவும்உள வேற்றுமை வழியே - நன்.166**

மாமரக்கிளவி அகர எழுத்துப் பேற்றோடு மெல்லெழுத்தும் பெறும்.

**மாமரக் கிளவியும் ஆவும் மாவும்**
**ஆம்மூப் பெயரும் அவற்றோர் அன்ன**
**அகரம் வல்லெழுத்து அவையவண் நிலையா**
**னகரம் ஒற்றும் ஆவும் மாவும். - தொல்.231**

உதி, ஒடு, சே, விசை, ஞெமை, நமை, ஆகிய மரப்பெயர்கள் மெல்லெழுத்து மிகும்.

**உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே. - தொல் -243**

**ஒடுமரக் கிளவி உதிமர வியற்றே. - தொல் -262**

**சேவென் மரப்பெயர் ஒடுமர இயற்றே - தொல். -278**

**விசை மரக் கிளவியும் ஞெமையும் நமையும்**

**ஆம் முப்பெயரும் சேமர இயல. - தொல்-282**

சில மரப்பெயர்கள் அம் சாரியை பெறும். அவற்றிலிருந்து விலக்கிக் காட்டவே தனித்தனி ஈறுகளில் இவற்றைக் கூறுகின்றார்.

**திரிதல்**

அகர, இகர, உகரச் சுட்டுகள் செய்யுளில் உயிர் வருவழி நீளுதல் உண்டு.

**நீட வருதல் செய்யுளில் உரித்தே - தொல்-208**

**சுட்டின் இயற்கை முற்கிளந்தற்றே - தொல்-238**

**ஏனவை வரினே மேல்நிலை இயல - தொல்-257**

**(எ-கா)** ஆயிரு திணையின் இசைக்கு மன சொல்லே.

**ஈதுகாண் தோழி எம்சிறு நல்லூரே.**

**ஊவையினான்.**

உரைப்பொருள் கிளவியாகிய அம்ம என்பதன் அகரம் நீளலும் உண்டு.

**உரைப் பொருட்கிளவி நீட்டமும் வரையார் - தொல்-212**

(எ-கா) அம்ம கொற்றா – அம்மா கொற்றா

**கெடுதல்**

சாவ என்னும் செயவென் எச்சத்தினிறுதி வகரம் கெடுதலும் உரித்தே: கெடாமலும் உரித்து.

**சாவ என்னும் செய வென் எச்சத்து**
**இறுதி வகரம் கெடுதலும் உரித்தே. - தொல்-209**
**சாவ என் மொழியீற்று உயிர்மெய் சாதலும் விதி - நன்.169**

(எ-கா) சாக்குத்தினான், சாவக்குத்தினான்

வாழிய என்னும் செயவென் கிளவி இறுதி யகரம் கெடுதலும் உரித்து: கெடாமையும் உரித்து.

**வாழிய என்னும் செய வென் கிளவி**
**இறுதி யகரம் கெடுதலும் உரித்தே. - தொல்.211**
**வாழிய என்பதன் ஈற்றின் உயிர்மெய்**
**ஏகலும் அஃது ஏகினும் இயல்பே. - நன். 168**

**(எ-கா)** வாழி கொற்றா, வாழிய கொற்றா.

**இயல்பு**

1. அன்ன என்னும் உவமக் கிளவி
2. அண்மை விளிக் கிளவி
3. செய்ம்மன என்னும் வினைச்சொல்

4. ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவி

5. செய்த என்னும் பெயரெஞ்சு கிளவி

6. செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவி

7. அம்ம என்னும் உரைப் பொருட்கிளவி

8. பன்மை உணர்த்தும் அகர ஈற்றுச் சொற்கள் ஆகிய எட்டுச் சொல்லும் இயல்பாய் முடியும்.

**(எ-கா)** 1. பொன்னன்ன குதிரை

2. ஊரகேள்

3. உண்மன குதிரை

4. அவன் செல்க

5. உண்ட குதிரை

6. உண்ணிய குதிரை.

**வினாக்கள்**

**பத்தி வினா**

1. தொல்காப்பியம் குறிப்பு வரைக.
2. எழுத்துக்களின் வகைகள் குறித்து எழுதுக.
3. தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் ஒன்பது இயல்களைக் குறித்து குறிப்பு தருக.
4. தமிழ் எழுத்துக்களின் மாத்திரை அளவினை விளக்குக.
5. உகரம் குறுகுமிடங்கள் யாவை?
6. மெய்ம்மயக்கத்தின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.
7. மொழி முதல் எழுத்துக்களை நூற்பாக்களுடன் விளக்குக.
8. சுட்டெழுத்து, வினா எழுத்து என்றால் என்ன? சான்று தருக.
9. எழுத்துக்கள் குறித்து தொல்காப்பியர் நன்னூலார் வேறுபடும் இடங்களைக் குறிப்பிடுக.
10. நூறு என்ற எண்ணுப்பெயரின் புணர்ச்சியினை எழுதுக.
11. ல, ன என்னும் மெய்யீறுகளின் செய்யுள் முடிபு யாது?

12.ஆய்தம் குறித்து தொல்காப்பியர் கூறுவன யாவை?

13.மொழி வகைகள் எத்தனை? ஓரெழுத்தொருமொழி விளக்குக?

14.மெய்ம்மயக்கத்தின் வகைகளைச் சான்றுடன் விளக்குக.

15.அகர ஈற்றுப் புணர்ச்சியை சான்றுடன் விளக்குக.

**கட்டுரை வினா**

1. சாரியை என்றால் என்ன? சாரியைகளின் இயல்புகளைப் புணரியல் வழி விளக்குக.
2. வேற்றுமைப் புணர்ச்சிக் குறித்து விரிவான விடையளி.
3. உருபியலில் தொல்காப்பியர் கூறுவனவற்றை தொகுத்துரைக்க.
4. மெய்யீற்றுப் புணர்ச்சிகளை சான்றுடன் தெளிவுபடுத்துக.
5. மரப்பெயர், திசைப்பெயர், வினாப்பெயர் விவரி.
6. குற்றியலுகரப் புணர்ச்சியை சான்றுடன் விவரி.
7. மகர ஈற்றுப் புணர்ச்சியை நூற்பாக்களுடன் விளக்கி வரைக.
8. தொழிற்பெயர் என்றால் என்ன? தொழிற்பெயர்கள் புணர்வதைச் சான்றுடன் விளக்குக.
9. பத்து என்ன எண்ணோடு பிற எண்ணுப் பெயர்கள் புணரும் போது நிகழும் மாற்றங்களை எடுத்துரைக்க.
10. நூன்மரபில் தொல்காப்பியர், நன்னூலார் வேறுபடும் இடங்களைக் கூறுக.
11. சொற்களில் எழுத்து வருகைக் குறித்து தொல்காப்பியர், நன்னூலார் கூறுவன யாவை?

**முனைவர் த.க.ஜாஸ்மின் சுதா,**

**உதவிப்பேராசிரியர்,**

**தமிழியல்துறை,**

**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,**

**திருநெல்வேலி.**